LEARN FROM GUINNESS WORLD RECORDS HOLDER BISWAROOP ROY CHOWDHURY

GUINNESS WORLD RECORDS

டைனமிக் மெமரி

இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்



மெமரி குரு
பிஸ்வரூப் ராய் சௌத்ரி







2100000 COPIES SOLD

அறுபது நாட்கள் கோர்ஸ்

டைனமிக் மெமரி

இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்

மெமரி குரு
பிஸ்வரூப் ராய் சௌத்ரி

ஃப்யூஷன் புக்ஸ்

ISBN: 81-8419-113-8

பதிப்பாளர்	:	ஃப்யூஷன் புக்ஸ் X-30, ஓக்லா இண்டஸ்ட்ரியல் ஏரியா, ஃபேஸ்-II, புது டெல்லி - 110020
தொலைபேசி	:	011-41611861
ஃபேக்ஸ்	:	011-41611866
இ - மெயில்	:	sales@dpb.in
இணைய முகவரி	:	www.dpb.in
பதிப்பு	:	2015
அச்சிடுபவர்	:	ஆதாஷ் பிரிண்டர்ஸ், நவீன் ஷாஹ்தரா, டெல்லி - 32

Dynamic Memory English Speaking Course (*Tamil*)

By *Biswaroop Roy Choudhury*

சில வார்த்தைகள்...

'டைனமிக் மெமரி இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்' என்னும் இப்புத்தகத்தை உங்களுக்காகவே படைத்தளிக்கிறோம்.

நினைவாற்றல் கலை குரு பிஸ்வரூப்ராய் சௌத்ரி அவர்களுடன் பல புகழ்பெற்ற ஆங்கில மொழி வல்லுநர்கள் இணைந்து இப்புத்தகத்தை உருவாக்கியுள்ளனர். இப்பயிற்சிப் புத்தகத்தைத் தொடர்ந்து பயின்று பழகிவர, சில நாள்களிலேயே தடையின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச, படிக்க, எழுத முடியும். இது எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணிய வழிமுறையை அடிப்படையாகக் கொண்டெழுந்துள்ளது. இந்நூல் ஆங்கில மொழிச் சொற்கள் மற்றும் வாக்கியங்கள் சிலவற்றைக் கற்றுத் தருவதோடு நில்லாது, ஆங்கில மொழியின் ஆழங்களை அறிந்து பயன் துய்க்கவும் உதவும். ஆங்கிலம் கற்க நவீன உத்திகளைக் கையாளுவதோடு நினைவில் நிறுத்திக்கொள்ள சிறுசிறு எளிய வழிகளை வழங்குவதால் தன்னம்பிக்கையுடன் கூடவே ஆங்கிலம் பயில உந்துதலையும் பெறுவீர்கள்.

பலர் மெட்ரிக், மேல்நிலைப்பள்ளிக் கல்வி மேற்கொண்டு பட்டப்படிப்பு முடித்து பட்டம் பெற்ற பின்னரும் பிழையற்ற ஆங்கிலம் பேச இயலாது இருக்கின்றனர். தயங்கி தயங்கி பேசுகின்றனர். இதனால் பேசுபவருக்கு தன்னைப் பற்றிய தாழ்வான எண்ணம் உருவெடுப்பதோடு கேட்பவருக்கு எதிரான தாக்கமும் ஏற்படுகிறது. வேலைக்கான நேர்காணல் போன்ற முக்கிய சமயங்களில் ஆங்கிலம் சரிவர பேச முடியாது போவதால் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

‘ஆங்கிலத்தில் நன்றாகப் பேச தெரிவதனால் நீங்கள் பல முக்கிய இடங்களில் உங்கள் செல்வாக்கை நிலைநாட்டிக்கொள்ள முடியும்.

ஆங்கிலம் சர்வதேச மொழியாகி உள்ள நிலை நீங்கள் அறிந்த ஒன்றுதான். இந்த மொழி பன்னாடுகளில் பிரபலமாக இருப்பது கண்டு எழுந்த எண்ணம் காரணமாகத்தான், சரளமான இலக்கணமுறை மாறாத் ஆங்கிலத்தைப் போதிக்கும் “டைனமிக் மெமரி இங்கிலிஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்” உங்களுக்கு பரிசாகியுள்ளது. சாதாரண நிலையில் இருக்கும் மாணவர், பணிபுரிவோர் மற்றும் வியாபாரிகள் சிறிதளவு வீட்டுப் பாடம் செய்வதன் மூலமாக வேகமாக ஆங்கிலத்தில் பேசலாம்.

தற்போதைய பதிப்பில் ஒன்பது பாகங்கள் தரப்பட்டுள்ளன. முதல் பாகம் தொடங்கி ஆறாம் பாகம் வரை 60 நாள்களுக்கான பயிற்சி செய்ய பாட அட்டவணை தந்துள்ளோம். ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாம் பாகங்கள் பிற்சேர்க்கையாக சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் கற்போர் கூடிய மட்டும் அதிகமான விவரம் பெறுவது உறுதி. இதிலுள்ள ஒவ்வொரு பாகமும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இவை நீங்கள் உபயோகிக்கும் சொல் சிறப்பாக அமைய உதவுவது மட்டுமல்லாமல் உரையாடலைப் பயனுள்ளதாகவும் செய்கிறது. மடை திறந்த வெள்ளம் போல ஆங்கிலத்தில் பேசத் தூண்டும் வகையில் மிக எளிய வழிமுறைகளைக் கொண்டுள்ளது.

எட்டாம் பாகத்தில் நினைவாற்றலை வளப்படுத்த பல எளிய வழிகள் தரப்பட்டுள்ளன. இதன் பயனாக உங்கள் நினைவாற்றல் பன்மடங்கு பெருகும் என்பதோடு மென்மேலும் வார்த்தைகளை சேகரிக்க, சேகரிக்க வாக்கிய உருவாக்கம் கைவரப் பெருவதோடு, தங்கு தடையற்ற ஆற்றொழுக்கான ஆங்கிலப் பேச்சும் சாத்தியப்படும்.

தமிழ் வழியில் கல்வி கற்ற மாணவர்கள் ஆங்கிலம் படிக்க மிகுந்த சிரமப்படுவதைப் பார்க்கிறோம். அவர்களை மனதில் கொண்டு மிகவும் எளிய முறையில் இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு இப்புத்தகத்துடன் ஒரு வி.சி.டி. இலவசமாக வழங்கப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் பேச இது மிகவும் உதவிகரமாக இருக்கும். இந்த வி.சி.டி.யை பார்த்து, கேட்டு, படித்து நீங்கள் பயனடைவீர்கள் என்பது நிச்சயம்.

‘டைனமிக் மெமரி இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்’ மூலம் ஆங்கில மொழியின் சூட்சுமங்களை புரிந்து கொண்டு எளிதில் ஆங்கிலத்தில் பேச முடியும். சந்தையில் கிடைக்கும் மற்ற புத்தகங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட இப்புத்தகத்தைச் சீரிய முறையில் பயன்படுத்தி சிறப்படைய வாழ்த்துக்கள்.

-ஆசிரியர்

CONTENTS

உயிரெழுத்துக்கள் சேர்ந்து வரும்போது Diphthong (டிஃப்தாங்), ரோமன் வரிவடிவம்

7. **Mute Letters and Capitals** (ம்யூட் லெட்டர்ஸ் அண்டு கேப்பிட்டல்ஸ்)
ஊமை மற்றும் பெரிய எழுத்துக்கள்

8. **Numerals** (நியூமரல்ஸ்) எண்கள்

Cardinals (கார்டினல்ஸ்) எண் பெயர்கள், Ordinals (ஆர்டினல்ஸ்) வரிசைகள், Abbreviation (அப்ரிவியேஷன்) சுருங்கிய வடிவம், Roman (ரோமன்) ரோமன் வடிவம் Multiplicative Numbers (மல்டிகபிள் நம்பர்ஸ்) பெருக்கல் எண்கள், Fractional Numbers (ஃபிராக்ஷனல் நம்னர்) பின்ன எண்கள்

9. **Days and Week** (டேஸ் அண்டு வீக்) நாட்கள் மற்றும் வாரம்

10. **Year and Months** (இயர் அண்டு மன்த்ஸ்) வருடம் மற்றும் மாதங்கள்

SECOND PART இரண்டாம் பாகம் (இருபத்தைந்து நாட்கள் கோர்ஸ்)

1. **Noun** (நவுன்) பெயர்ச்சொல், **Number** (நம்பர்) எண்.
2. **Genetive** (ஜெனிடீவ்) உடைமை உருபு
3. **Pronouns** (ப்ரோநவுன்ஸ்) பிரதிப் பெயர்ச்சொல்

Personal Pronoun தன்மைப் பிரதிப் பெயர்ச்சொல், Possessive Pronoun உடமை பிரதிப்பெயர்ச்சொல், Reflexive Pronoun தற்சுட்டு பிரதிப்பெயர்சொல், Relative Pronoun தொடர்பு பிரதிப் பெயர்ச்சொல், Interrogative Pronoun வினா பிரதிப்பெயர்ச்சொல், Demonstrative Pronoun சுட்டுப்பிரதிப் பெயர்ச்சொல், Universal Pronoun யூனிவர்சல் பிரதிப் பெயர்ச்சொல்

4. **Contraction** (கான்ட்ரக்ஷன்) சுருக்கம்

Affirmative உடன்பாடு, Negative எதிர்மறை. Has/Have/Had ஆகியவற்றின் சுருங்கிய வடிவம், Will/Would

ஆகியவற்றின் சுருங்கிய வடிவம், (Helping Verbs) பிற துணை வினைச்சொற்களின் சுருங்கிய வடிவம்

5. **The Sentence** (தி ஸென்டென்ஸெஸ்) வாக்கியங்கள்

Statements (ஸ்டேட்மென்ட்ஸ்) கூற்றுக்கள், Interrogative (இன்ட்ராகேட்டீவ்) வினா வாக்கியங்கள்,

Imperative (இம்ப்ரேட்டீவ்) கட்டளை வாக்கியம், Exclamatory (எக்ஸ்க்ளமேட்ரி) வியப்பு வாக்கியங்கள்

6. Negative Sentences (நெகட்டீவ் சென்டன்ஸஸ்) எதிர்மறை வாக்கியங்கள்

7. Question Form (கொஸ்டியன் ஃபார்ம்) வினா வடிவ வாக்கியம்

Yes-no type ஆமாம், இல்லை வகை, Wh-type டபிள்யூ ஹெச். வகை Alternative type மாற்றுக் கேள்வி வகை, Tag-type ஒட்டுக் கேள்வி வகை, Declarative type அறிவிப்பு வகை

8. Imperative Sentences (இம்பேரடீவ் ஸென்டன்ஸஸ்) கட்டளை வாக்கியங்கள்

Commands without subject எழுவாய்- அற்ற கட்டளை, Commands with subject எழுவாயுடன் கட்டளை, Command with Let லெட் உடன் கட்டளை, Negative Commands எதிர்மறை கட்டளை, Persuasive Commands தூண்டும் கட்டளை

9. Miscellaneous Model Sentences (மிஸ்லேனியஸ் மாடல் சென்டன்ஸஸ்) வித்தியாசமான வாக்கியங்கள்

10. Articles (ஆர்டிகல்ஸ்) சுட்டு இடைச்சொற்கள்

11. Some Auxiliary Verbs (சம் ஆக்ஸிலியரி வெர்ப்ஸ்) துணை வினைச்சொற்கள்

Can/could; May/might; Shall/should; Will/would; Must/ought;to/used; Dare/dare say/need

12. Verbs and their three Forms (வெர்ப்ஸ் அண்ட் தேர் திரி ஃபார்ம்ஸ்) வினைச்சொற்களும் அவற்றின் மூன்று வடிவங்களும்

13. Present Tense (ப்ரெசன்டன்ஸ்) நிகழ்காலம்

Indefinite தீர்மானமில்லாத நிகழ்காலம், Negative Interrogative, Tags வடிவம், Present Continuous முற்றுப்பெறாத நிகழ்காலம், Present Perfect முற்றுப்பெற்ற நிகழ்காலம், Prefect Continuous முற்றுப்பெற்ற தொடர் நிகழ்காலம்

14. Past Tense (பாஸ்ட்டென்ஸ்) இறந்த காலம்

Past Indefinite தீர்மானமில்லாத இறந்த காலம், Past Continuous தொடர் இறந்தகாலம், Past Perfect முற்றுப்பெற்ற

இறந்த காலம், Past Perfect Continuous முற்றுப்பெற்ற தொடர் இறந்த காலம், கலவை வாக்கியங்கள்

15. Future Tense (ஃப்யூச்சர் டென்ஸ்) எதிர்காலம்

Future Indefinite தீர்மானமில்லாத எதிர்காலம், Future Continuous முற்றாத எதிர்காலம்,

Future Perfect முற்றுப்பெற்ற எதிர்காலம், Future Perfect Continuous முற்றுப்பெற்ற தொடர் எதிர்காலம்,

16. Active and Passive Voice (ஆக்டீவ் அண்ட் பேசிவ் வாய்ஸ்)
செய்வினை செயப்பாட்டு வினை

17. Some Adverbs and Conjunctions (சம் அட்வெர்ப்ஸ் அண்ட் கன்ஜஷன்ஸ்)
வினையடைச் சொற்களும் இணைப்புச்சொற்களும்

Also/only; Even/too; Either...or; Neither...nor; Whether...or; Not only but also; Hardly/scarcely; And so forth/and so on, Let alone; No sooner.... than/although....Yet/last...should; rather than/no less; than/too/...to

18. Preposition (ப்ரிபொஸிஷன்) முன்னிடச்சொற்கள்.

Simple and Complex Prepositions, இடக்குறிப்பு, நேரக்குறிப்பு. காரணம், உத்தேசக்குறிப்பு, பயிற்சி, வழக்க முறைகள், தொடர்பு, அளவு மதிப்பு, விகிதம். எதிர், தீர்மானம், விலக்கு, ஈடுபாடு

19. Comparative and Superlative Words
ஒப்பீடு மற்றும் உயர்படி வார்த்தைகள்

20. Transformation of Sentences (டிரான்ஸ்பர்மேஷன் ஆஃப் சென்டென்சஸ்)
வாக்கிய மாற்றம்

Interchange of Assertive and Interrogative; Interchange of Affirmative and Negative; Interchange of Assertive and Exclamatory; Removel “too”; Interchange of Degrees of Comparison

21. Spelling (ஸ்பெல்லிங்) எழுத்துக் கூட்டியமைத்தல்

22. What time is it? (வாட் டைம் இஸ் இட்?) மணி என்ன?

23. Idioms (இடியம்ஸ்) மரபுத் தொடர்கள்

24. Direct and Indirect Speech (டைரக்ட் அண்ட் இன்டைரக்ட் ஸ்பீச்)
நேர்கூற்று மற்றும் அயற்கூற்று

25. Punctuation (பஞ்சுவேஷன்) நிறுத்தல் குறிகள்

THIRD PART மூன்றாம் பாகம் (எட்டு நாட்கள் கோர்ஸ்)

Varried Sentences (வேரிட் சென்டன்சஸ்) பல்வேறுபட்ட வாக்கியங்கள்

• My Motherland எனது தாய்நாடு •Politeness and Etiquette மரியாதையும், நன்நடத்தைகளும் •Body, Health and Beauty உடல், ஆரோக்கியம் மற்றும் அழகு •Greeting and Gratitude வாழ்த்தும் நன்றியும் •Home and Family வீடும் குடும்பமும் •Books and Reading புத்தகமும் படித்தலும் •Trees, Plants and Vegetation மரங்கள், செடிகள் மற்றும் தாவர வகைகள் •Caution and Signals எச்சரிக்கையும் அடையாளங்களும் •Work and Rest உழைப்பும் ஓய்வும் •We and Weather நாமும் வானிலையும் •Leisure and Pleasure ஓய்வும் சந்தோஷமும் •Pleasures and Pain சந்தோஷமும் வலியும் •Childhood, Youth and Old Age குழந்தைப்பருவம், இளமை மற்றும் முதுமை •Bazar and Shopping கடைத்தெருவும், வாங்குதலும் •Dealings and Occupation கொடுக்கல் வாங்கலும் தொழில்களும் •Dress and Food உடையும் உணவும் •Feelings and Emotions உணர்வுகளும் உணர்ச்சிகளும்(i) Anger கோபம்(ii) Affection பற்று (iii) Quarrel சண்டை(iv) Forgiveness மன்னிப்பு(v) Advice and Opinion அறிவுரையும் கருத்தும் •Birds and Beasts பறவைகளும் பூச்சிகளும் •Love and Marriage காதலும் கல்யாணமும் •Office and Bank அலுவலகமும், வங்கியும்

FOURTH PART நான்காம் பாகம் (பத்து நாட்கள் பயிற்சி)

Conversation (கான்வர்சேஷன்) உரையாடல்

• Father and daughter (ஃபாதர் அண்டு டாட்டர்) அப்பாவும் மகளும்•Mother and son (மதர் அண்டு ஸன்) அம்மாவும், மகனும்•Talking to a girl (டாக்கிங் டு ஏ கேர்ள்) பெண்ணிடம் பேசுதல்•Talking to a boy (பையனுடன் பேசுதல்) டாக்கிங் டு ஏ பாய்•Conversation between two students (கான்வெர்சேஷன் பிட்வின் டு ஸ்டுடண்ட்ஸ்) இரு

மாணவர்களுக்கிடையேயான உரையாடல்•Getting ready for office (கெட்டிங் ரெடி ஃபார் ஆஃபிஸ்) அலுவலகத்திற்கு தயார் ஆகுதல்•Arrival of a guest (அரைவல் ஆஃப் எ கெஸ்ட்) விருந்தினரின் வருகை•Talking to a servant (டாக்கிங் டு எ சர்வன்ட்) வேலைக்காரனிடம் பேசுதல்•A birthday party (எ பர்த்டே பார்ட்டி) பிறந்தநாள் விழா •Meeting on the way (மீட்டிங் ஆன் தி வே) வழியில் சந்தித்தல்•At the bus stop (அட் தி பஸ்ஸ்டாப்) பேருந்து நிறுத்தத்தில்•Talking to the class teacher (டாக்கிங் டு தி கிளாஸ் டீச்சர்) வகுப்பு ஆசிரியரிடம் பேசுதல்•At bookseller's shop (அட் புக் செல்லர்ஸ் ஷாப்) புத்தகம் விற்கும் கடையில்•Booking a trunk call (புக்கிங் – எ டிரங்கால்) டிரங்கால் பதிவு செய்ய•At the general store (அட் தி ஜென்ரல் ஸ்டோர்) பலசரக்கு கடையில்•At the departmental store (அட் தி டிப்பார்ட்மென்டல் ஸ்டோர்) பல்பொருள் அங்காடியில்•On the Railway Platform (ஆன் தி ரயில்வே பிளாட்ஃபார்ம்) ரயில்வே நடைமேடையில்•An accident (ஆன் ஆக்ஸிடென்ட்) ஒரு விபத்து•At the Airport (அட் தி ஏர்போர்ட்) விமான நிலையத்தில்•At the Bank opening account (அட் தி பேங்க் ஓபனிங் ஆன் அக்கௌன்ட்) வங்கியில் (கணக்கு ஆரம்பித்தல்)•Visiting a patient (விசிடிங் எ பேஷன்ட்) நோயாளியை காண செல்லுதல்•Asking the address (ஆஸ்கிங் தி அட்ரஸ்) விலாசம் கேட்டல்•Facing an interview (ஃபேசிங் ஏன் இன்டர்வியூ) நேர்முகத் தேர்வில்•Financial matters (ஃபைனான்ஷியல் மேட்டர்ஸ்) நிதிநிலை விஷயங்கள்•Day to day difficulties (டே டு டே டிஃபிகல்டீஸ்) அன்றாட வாழ்வின் தொல்லைகள்

FIFTH PART ஐந்தாம் பாகம் (ஐந்து நாட்கள் பயிற்சி)

Word formation and Vocabulary (வேர்ட் ஃபார்மேஷன் அண்டு வொக்கேப்யூலரி)

சொல் அமைப்பு மற்றும் சொற் களஞ்சியம்

•Affixation (அஃபிக்ஸேஷன்)•Affixation, முன்னொட்டு மற்றும் பின்னொட்டு ஆகியவற்றின் பயன்பாடு,எதிர்மறை முன்னொட்டு, நேர் எதிர்மறை முன்னொட்டு, வீழ்ச்சி முன்னொட்டு, நிலைமை/தோற்றத்தை•தெரிவிக்கும்

முன்னொட்டு, நடத்தையை தெரிவிக்கும் முன்னொட்டு, இடத்தைதெரிவிக்கும்•முன்னொட்டு, சமயத்தை தெரிவிக்கும் முன்னொட்டு, எண்ணிக்கையை தெரிவிக்கும்•முன்னொட்டு, பிற முன்னொட்டுகள், Suffix பின்னொட்டு, பெயர் பின்னொட்டுகள்,•உரிச்சொல் பின்னொட்டு, வினையில் இருந்து பெயர்ச் சொல்லை உருவாக்கும்•பின்னொட்டுகள், பெயர் உரிச் சொல்லில்இருந்து பெயர்ச் சொல்லை உருவாக்கும்•பின்னொட்டுகள், வினையை உருவாக்கும் பின்னொட்டுகள் பெயர்ச் சொல்லை பெயர் உரிச்•சொல்லாக்கும் பின்னொட்டுகள், பிற பின்னொட்டுகள், Compounds கூட்டுச் சொற்கள்,•Reduplicatives, Conversation மாறுதல், Blends ஒன்றிணைப்புகள்•Compounds (காம்பவுண்ட்ஸ்) கூட்டுச் சொற்கள்•Words often confused (வேர்ட்ஸ் ஆஃபடன் கன்ஃப்யூஸ்டு) அடிக்கடி குழப்பும் சொற்கள் •Nationality words (நேஷ்நாலிட்டி வேர்ட்ஸ்) நாட்டுரிமை சொற்கள்•Antonyms (ஏன்டனிம்ஸ்) எதிர்ச் சொற்கள் •Some foreign words and phrases in English (சம் ஃபாரின் வேர்ட்ஸ் அண்டு ஃபிரேசஸ் இன் இங்கிலீஷ்) ஆங்கிலத்தில் உள்ள சில வேற்று மொழி சொற்களும், சொற்றொடர்களும் •One word substitution (ஒன் வேர்ட் சப்ஸ்டிட்யூஷன்) பல சொற்களுக்கு இணையான ஒரு சொல்•Animals cries and other sounds (அனிமல் க்ரைஸ் அண்டு அதர் சவுண்ட்ஸ்) விலங்குகளின் சத்தங்களும், பிற ஒலிகளும்•Collective phrases (கலெக்டிவ் ஃபிரேசஸ்) கூட்டங்களைக் குறிக்கும் சொற்றொடர்கள்•Some set comparison (சம் செட் கம்பேரிசன்ஸ்) சில உவமைகள்

SIXTH PART ஆறாம் பாகம் (இரண்டு நாள் கோர்ஸ்)

Translation (ட்ரான்ஸ்லேஷன்) மொழிபெயர்ப்பு

ANNEXURE (அனுபந்தம்)

SEVENTH PART ஏழாம் பாகம் (அனுபந்தம் - I)

FIRST PART
முதல் பாகம்

நீங்கள் இதில் கற்றுக் கொள்பவை-

- இது பத்து நாட்கள் கோர்ஸ் பகுதி
- ஆங்கிலம் பேசுவதற்கான ஆரம்ப (**Basic**) நிலைப் பாடம்
- வணக்கம் தெரிவித்தல், நாகரீகமாக நடந்து கொள்ளுதல் குறித்து
- எழுத, பேச, எண்ணிக்கைகள் மற்றும் நாள்-மாதங்கள் பற்றிய பாடங்கள்

முக்கியக் குறிப்பு

இப்பொழுது ஆங்கில மொழி பேச தயாராகுங்கள். முதல் பாகத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல் களையும், அவற்றைப் பயன்படுத்த வேண்டிய முறையையும் நினைவில் கொள்ளுங்கள். இந்த பாகம் மிகவும் முக்கியமானது. இப்பாகத்தில் உள்ள பத்துப் பாடங்களில் வணக்கச் சொற்கள், பண்பாடு, வியப்புச் சொற்கள், அடிக்கடி பயன்படுத்தும் சொற்றொடர்கள், வரிவடிவம், உச்சரிப்பு, எண்கள், தினம், வருடம், மாதங்கள் போன்றவை பற்றிய ஏராளமான தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை பயிற்சி செய்வதின் மூலம் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் எளிதில் ஆங்கிலத்தில் பேசலாம்.

பத்து நாட்கள் கோர்ஸ் **LESSON ONE**

பாடம் ஒன்று

Salutation Words in English

(சல்யுடேஷன் வேர்ட்ஸ் இன் இங்கிலீஷ்)

ஆங்கிலத்தில் உள்ள வணக்கச் சொற்கள்

நீங்கள் உங்களது நண்பர்கள், தெரிந்தவர்கள், பெரியவர்கள், அதிகாரிகள் ஆகியோரைப் பார்க்கும் போது கீழ்கண்ட வணக்கச் சொற்கள் அல்லது சொற்றொடர்களை பயன்படுத்தலாம். இவற்றை நினைவில் வைத்துக் கொள்ளவும்-

	Tamil Words (டமில் வேர்ட்ஸ்) தமிழ் வார்த்தைகள்	English Words (இங்கிலீஷ் வேர்ட்ஸ்) ஆங்கில வார்த்தைகள்	Pronunciation in Tamil (ப்ரொனன்சியேஷன் இன் டமில்) தமிழ் உச்சரிப்புகள்
1.	ஹலோ	Hello	ஹெலோ
2.	நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?	How do you do	ஹவ் டு யூ டு ?
3.	வணக்கம்	Good morning	குட் மார்னிங்
4.	வணக்கம்	Good afternoon	குட் ஆஃப்டர்நூன்
5.	வணக்கம்	Good evening	குட் ஈவ்னிங்
6.	வணக்கம்	Good day	குட் டே
7.	வணக்கம்	Good night	குட் நைட்
8.	போய் வாருங்கள்	Farewell	ஃபேர்வெல்
9.	மீண்டும் சந்திப்போம்	See you again	சீ யூ அகெயின்
10.	கனவுகள் இனித்திடட்டும்	Sweet dreams	ஸ்வீட் ட்ரீம்ஸ்
11.	ஹாய்	Hi	ஹாய்

வாருங்கள், பேசத் துவங்குவோம்

காலை 4 மணி முதல் 12 மணி வரை

	தமிழில்	ஆங்கிலத்தில்	ஆங்கில உச்சரிப்பு
(i)	வணக்கம் ஐயா	Good morning, Sir!	குட் மார்னிங் சார்
(ii)	வணக்கம் தாத்தா	Good morning, Grandpa!	குட் மார்னிங் கிராண்ட்பா
(iii)	வணக்கம் அப்பா	Good morning, Dad!	குட் மார்னிங் டேட்
(iv)	வணக்கம் அம்மா	Good morning, Mummy!	குட் மார்னிங் மம்மி

பகல் 12 மணி முதல் 5 மணி வரை

(i)	வணக்கம் பாட்டி	Good afternoon, Grandma!	குட் ஆஃப்டர்நூன் கிராண்மா
(ii)	வணக்கம் சகோதரி	Good afternoon, Sister!	குட் ஆஃப்டர்நூன் சிஸ்டர்
(iii)	வணக்கம் சகோதரா	Good afternoon, Brother!	குட் ஆஃப்டர்நூன் பிரதர்

மாலை 5 மணிக்குப் பிறகு

(i)	வணக்கம் செல்லம்	Good evening, dear!	குட் ஈவ்னிங் டியர்
(ii)	வணக்கம் மாமா	Good evening, Uncle!	குட் ஈவ்னிங்
(iii)	வணக்கம் அத்தை	Good evening, Auntie!	குட் ஈவ்னிங்

இரவில் விடைபெறும் போது

(i)	தூங்கப் போகிறேன்	Good night!	குட் நைட்

பகலில் எப்பொழுது வேண்டுமானாலும்

(i)	நல்லது ஐயா	Good day to you, Sir!	குட் டே டு யூ, சார்

சந்திக்கும் போது

(i)	உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி	Pleased to meet you!	ப்ளீஸ்டு டு மீட் யூ

நீங்கள் அறிந்தவர்களிடமும், நண்பர்களிடமும் எப்போதும் சொல்லக் கூடியவை (Informal greetings)

1.	ஹலோ மிஸ் கோயல்	Hello Miss Goyal!	ஹலோ மிஸ் கோயல்
2.	ஹாய் மோகன்	Hi Mohan!	ஹாய் மோகன்
3.	ஹலோ ஷ்யாம்	Hello Shyam!	ஹலோ ஷ்யாம்
4.	ஹலோ பிரதர்	Hello Brother!	ஹலோ பிரதர்
5.	ஹாய் ரீட்டா	Hi Rita!	ஹாய் ரீட்டா
6.	ஹலோ மோஹித்	Hello Mohit!	ஹலோ மோஹித்

குறிப்பு: ‘ஹலோ’,’ஹாய்’ ஆகியவற்றை தன்னை விட வயதில் பெரியவர்களிடத்தும் பயன்படுத்தலாம்.

விடைபெறும் போது

1.	போய் வருகிறேன் நண்பர்களே	Goodbye, Friends!	குட் பை, ஃபிரண்ட்ஸ்
2.	போய் வருகிறேன்	Bye, bye!	பை பை
3.	போய் வருகிறேன் குழந்தைகளே	Ta-Ta, Children!	டாடா சில்ட்ரன்
4.	போய் வருகிறேன் பிரியமானவரே	Farewell, dear!	ஃபேர்வெல் டியர்
5.	நல்லது மீண்டும் வருகிறேன்	Bye, see you/so long!	பை, சீ யூ / சோ லாங்

Points to Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1. Grandfather (தாத்தா) -ஐ Grandpa என்றும் அழைப்பர்
2. Father (அப்பா) -ஐ Dad அல்லது Daddy என்று அழைப்பர்
3. Grandmother -ஐ Grandma எனவும் அழைக்கலாம்
4. Mother (அம்மர) - ஐ Mom அல்லது Mummy என்றும் அழைக்கலாம்
5. சித்தப்பா, பெரியப்பா, தாய்மாமா என எல்லாரையும் Uncle என்றே ஆங்கிலேயர் அழைக்கின்றனர்
6. சித்தி, பெரியம்மா, அத்தை போன்ற உறவினரை Aunty என்றோ Aunt என்றோ அழைப்பது வழக்கம்
7. ஆண்களை மரியாதையாக அழைக்க சார் (Sir) என்று அழைக்கின்றனர்
8. பெண்களை மரியாதையுடன் அழைக்க மேடம் (Madam) என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது
9. சித்தப்பா/பெரியப்பா மகன்களை கசின் பிரதர்ஸ் (Cousin brothers) என்றும் மகள்களை கசின் சிஸ்டர்ஸ் (Cousin sisters) என்றும் அழைக்கிறேரம்
10. மணம் ஆகாத பெண்களை ‘மிஸ்’ (Miss) என்றும், மணம் ஆனவர்களை ‘மிஸர்ஸ்’ (Mrs) என்றும், எந்தப் பெண்ணையும் ‘மிஸ்’ (Ms) என்றும் அழைப்பது பொருத்தமாக இருக்கும்

Note: Good morning, Good afternoon, Good evening, Good night, Good day என ஆங்கிலத்தில் நேரத்திற்கேற்ற வணக்கச் சொற்கள் இருக்கின்றன

LESSON TWO

பாடம் இரண்டு

Good Manner Words in English

(குட் மேனர் வேர்ட்ஸ் இன் இங்கிலீஷ்)

ஆங்கிலத்தில் உள்ள நல்லொழுக்கச் சொற்கள்

ஆங்கில மொழியில் பேச அம்மொழியைக் கற்றுக் கொள்ளும்போது முதலில் ஆங்கிலத்தில் உள்ள நல்லொழுக்கச் சொற்களை கற்றுக் கொள்வது மிகவும் அவசியம். எந்தச் சொல்லை எது போன்ற வாக்கியங்களில் பயன்படுத்த வேண்டுமென அறிந்து கொள்வோம்

Tamil Words (டமில் வேர்ட்ஸ்) தமிழ் வார்த்தைகள	English Words (இங்கிலீஷ் வேர்ட்ஸ்) ஆங்கில வார்த்தைகள்	Pronunciation in Tamil (ப்ரொனன்சியேஷன் இன் டமில் தமிழ் உச்சரிப்புகள்
1. நல்வரவு	Welcome	வெல்கம்
2. தயவுசெய்து	Please	ப்ளீஸ்
3. கருணையோடு	Kindly	கைண்ட்லி
4. நன்றி	Thanks	தேங்க்ஸ்
5. தங்களுக்கு நன்றி	Thanks you	தேங்க் யூ
6. வருந்துகிறேன்	Sorry	சாரி
7. மன்னிக்கவும்	Excuse me	எக்ஸ்க்யூஸ் மீ
8. பிழையைப் பொறுக்கவும்	Pardon	பார்டன்
9. பரவாயில்லை	No mention	நோ மென்ஷன்
10. மகிழ்ச்சியுடன்	With great pleasure	வித் க்ரேட் ப்ளஷர்
11. வேண்டாம், நன்றி	No, thanks	நோ, தேங்க்ஸ்
12. உங்களுக்குப் பிறகு	After you	ஆஃப்டர் யூ
13. உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி	Glad to meet you	க்ளாட் டு மீட் யூ
14. நன்றியுடன்	Grateful	க்ரேட்ஃபுடமில்
15. மிகுந்த கருணை உடையவரே	Very kind of you	வெரி கைண்ட்ஆஃப்யூ
16. பரவாயில்லை	Never mind	நெவர் மைண்ட்
17. நன்றிக் கடன் பட்டவனாய்	Obliged	ஆப்ளிட்ஜ்ட்

ஆங்கிலத்தில் please, thanks, sorry, excuse me, beg pardon, no mention ஆகிய அனைத்துமே மரியாதையையும், பண்பையும் வெளிப்படுத்துகின்றன. யாரிடமாவது மணி என்னவென்று கேட்கும்போது Time please (டைம் ப்ளீஸ்) என்றும், கேட்டுத் தெரிந்து கொண்டதும் thanks அல்லது thank you என்றும் சொல்ல வேண்டும். இருவர் பேசிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் அவர்களிடம் வேறு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் Excuse me (எக்ஸ்க்யூஸ் மீ) என்று சொல்லிவிட்டு பேசத் துவங்கினால் யாரும் தவறாக நினைக்க மாட்டார்கள். அதேபோல வழியில் நிற்பவர்களை நகர்ந்துகொள்ளச் சொல்லவும் இதைப் பயன்படுத்தலாம். வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்தும் போது ஏதேனும் புரியாவிட்டால் beg your pardon என்று சொல்லலாம். இதற்கு நீங்கள் சொல்வது சரியாகப் புரியவில்லை மீண்டும் ஒருமுறை சொல்லுங்கள் என்று அர்த்தம்.

உங்களிடம் யாராவது விலாசம் கேட்டு அதற்கு நீங்கள் பதில் சொல்கிறீர்கள். அதற்கு அவர் thank you so much என்று நன்றி தெரிவித்தால், பதிலுக்கு நீங்கள் no mention (நோ மென்ஷன்) என்று அவசியம் சொல்லுங்கள். நீங்கள் பேருந்தில் போகிறீர்கள் அல்லது நண்பருடன் அமர்ந்திருக்கிறீர்கள், அப்போது தும்மல் அல்லது இருமல் வந்தால் Sorry சொல்ல மறக்காதீர்கள். உங்களிடம் யாராவது செய்தித்தாள் அல்லது வேறு ஏதாவது பொருளைக் கேட்டால் அதைக் கொடுக்கும்போது with great pleasure என்று சொல்லுங்கள். இதற்கு மீகுந்த மகிழ்ச்சியுடன் என்று பொருள்.

இச்சொற்கள் மிகுந்த சக்தியுடையவை. உங்களின் லட்சம் முயற்சிகளால் முடியாத செயல் கூட இச்சொற்களை சரியாகப் பயன்படுத்தினால் முடிந்துவிடும். இருப்பினும் இவற்றைப் பயன்படுத்தும்போது உச்சரிப்பு, உடல் அசைவுகள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆங்கிலம் தெரியாத ஒருவர் இங்கிலாந்து போகிறார் என்று வைத்துக் கொள்வோம், அவருக்கு ஆங்கிலத்தில் ‘please’. ‘thanks’ என்ற இரு சொற்கள் மட்டும் தெரியும் என்றால், அவர் தனது வேலையை முடித்துக் கொள்ளலாம். இப்பொழுது நாம் அறிமுகம் மற்றும் பண்பாடு குறித்த சில சாதாரண, அதேசமயம் முக்கியத்துவம் வாய்ந்த வாக்கியங்களைப் பார்ப்போம்.

1.உங்கள் பெயர் என்ன?	Your good name please. (யுவர் குட் நேம் ப்ளீஸ்
2.உங்களின் இனிய அறிமுகம் கிடைக்குமா?	May I have the pleasure of your introduction? (மே ஐ ஹேவ் தி பிளஷர் ஆஃப் யுவர் இன்ட்ரோடக்ஷன்?)
3.எனக்கு உங்களிடம் அறிமுகம் செய்து கொள்ளும் பேறு கிடைத்துள்ளது	I have the pleasure to introduce to you. (ஐ ஹேவ் தி பிளஷர் டு இன்ட்ரோட்யூஸ் டு யூ)
4.நான் என்னை அறிமுகம் செய்து கொள்கிறேன்	Let me introduce myself. (லெட் மீ இன்ட்ரோட்யூஸ் மைசெல்ஃப்)
5.அவருக்கு அறிமுகம் தேவையில்லை	He hardly needs any introduction. (ஹி ஹார்ட்லி நீட்ஸ் எனி இன்ட்ரோடக்ஷன்)
6.நாங்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிவோம்	We are well known to eachother. (வீ ஆர் வெல் நோன் டு ஈச் அதர்)
7.எனக்கு அவருடன் ஓரளவு அறிமுகம் உள்ளது	I have a little acquaintance with him. .(ஐ ஹேவ் எ லிட்டில் அக்வெயின்டென்ஸ் வித் ஹிம்)
8.கொஞ்சம் கொஞ்சமாக அறிமுகம் நெருக்கமானது	Gradually, the acquaintance changed into intimacy. (க்ராட்ஜ்வெலி, தி அக்வெயின்டென்ஸ் சேஞ்டு இன்டு இன்டிமசி)
9.நீங்கள் உங்களின் சிபாரிசு கடிதத்தை கொண்டு வந்தீர்களா?	Have you brought your introduction letter? (ஹேவ் யூ ப்ராட் யுவர் இன்ட்ரோடக்ஷன் லெட்டர்?)
10.அவர் தான் என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தினார்	He only introduced me to you. (ஹி ஒன்லி இன்ட்ரோட்யூஸ்டு மீ டு யு)
11.நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன்	I am very much grateful to you. (ஐயாம் வெரி மச் கிரேட்ஃபுல் டு யூ)
12.நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?	Can you do me a favour? (கேன் யூ டு மீ எ ஃபேவர்?)
13.உங்களின் கருணை மிகப் பெரியது	It's very kind of you. (இட்ஸ் வெரி கைண்டு ஆஃப் யூ)
14.தாமதமாக வந்ததற்கு மன்னிக்கவும்	Excuse me for being late.(எக்ஸ்கியூஸ் மீ ஃபார் பீயிங் லேட்)
15.நான் அதற்காக மிகவும் வருந்துகிறேன்	I am very sorry for it. (ஐயாம் வெரி சாரி ஃபார் இட்)

16.நீங்கள் ஏன் எனக்கு மிகவும் கடமைப்பட்டவர்கள்? Why are you so much obliged to me?
(ஒய் ஆர் யூ சோ மச் ஆப்லிட்ஜ்ட் டு மீ?)

17.என் பெயர் ராஜ்குமார் My name is Rajkumar. .(மை நேம் இஸ் ராஜ்குமார்)

18.மன்னியுங்கள். Beg my apologies. (பெக் மை அப்பாலஜீஸ்)

19.தங்களுக்கு என் சகோதரருடன் பரிச்சயம் உள்ளதா? Are you acquainted with my brother?
.(ஆர் யூ அக்வெயின்டட் வித் மை பிரதர்?)

20.எனக்கு தங்கள் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்பு இல்லை I did not have the opportunity of your introduction.
(ஐ டிட்நாட் ஹேவ் தி ஆப்பர்ச்சூனிட்டி ஆஃப் யுவர் இன்ட்ரோடக்ஷன்)

21.தயவுசெய்து அமருங்கள், வீட்டில் இருப்பது போல் நினைத்துக் கொள்ளுங்கள் Please be seated and feel at home.
(ப்ளீஸ் பீ சீட்டட் அண்டு ஃபீல் அட் ஹோம்)

22.தங்களின் கருணைக்கு நான் கடன்பட்டுள்ளேன் I am grateful for your kindness.
(ஐயாம் கிரேட்ஃபுல் ஃபார் யுவர் கைண்ட்னஸ்)

23.எனக்கு இன்னும் கொஞ்சம் உதவி செய்யுங்கள் Do me a little more favour.
(டு மீ எ லிட்டில் மோர் ஃபேவர்)

24.எடுத்துக் கொண்ட சிரமத்திற்கு நன்றி Thank you for the trouble. (தேங்க்யூ ஃபார் தி ட்ரபிள்)

25.சிரமத்திற்கு வருந்துகிறேன் I am sorry for the trouble. (ஐயாம் சாரி ஃபார் தி ட்ரபிள்)

26.பரவாயில்லை No mention please. (நோ மென்ஷன் ப்ளீஸ்)

27.மணி என்ன? What's the time please? (வாட்ஸ் தி டைம் ப்ளீஸ்)

28.உங்களது பத்திரிக்கையை பார்க்கலாமா? May I have your magazine please?
.(மே ஐ ஹேவ் யுவர் மேகஸின் ப்ளீஸ்)

29.தாராளமாக, மகிழ்ச்சியுடன். Sure, by all means. (ஷ்யூர், பை ஆல் மீன்ஸ்)

30.பெண்களுக்கான இருக்கையை காலி செய்து தருகிறீர்களா? Would you mind vacating the lady's seat?
(வுட் யூ மைண்ட் வெகேட்டிங் தி லேடி'ஸ் சீட்?)

31.உங்கள் கவனத்திற்கு. Your attention please. (யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்)

32.மன்னிக்கவும், நான் சற்று தாமதமாக வரக்கூடும். Excuse me, I may be a bit late.
(எக்ஸ்க்யூஸ் மீ, ஐ மே பீ எ பிட் லேட்)

33.சற்று நகர்ந்து கொள்ளுங்கள். Would you mind moving a bit?
(வுட் யூ மைண்ட் மூவிங் எ பிட்?)

34.மன்னிக்கவும், தவறு நடந்துவிட்டது. Excuse me, it is by mistake.
(எக்ஸ்க்யூஸ் மீ, இட் இஸ் பை மிஸ்டேக்)

35.நேரத்திற்கு வராததற்கு மன்னிக்கவும் Excuse me, for not being in time.
.(எக்ஸ்க்யூஸ் மீ, ஃபார் நாட் பீயிங் இன் டைம்)

36.நீங்கள் இதைச் செய்வீர்களா? Would you mind doing it? (வுட் யூ மைண்ட் டூயிங் இட்?)

37.தயவுசெய்து இந்த இனிப்பை (அவர்களிடம்) கொடுங்கள். Please pass on this sweet dish.
(ப்ளீஸ் பாஸ் ஆன் திஸ் ஸ்வீட் டிஷ்)

38.தயவுசெய்து உள்ளே வாருங்கள், உங்களை அன்புடன் வரவேற்கிறோம். Please come in, you are welcome.
(ப்ளீஸ் கம் இன், யூ ஆர் வெல்கம்)

39.நான் உள்ளே வரலாமா? May I come in? (மே ஐ கம் இன்?)

40.வணக்கம், எப்படி இருக்கிறீர்கள்? Good morning, how do you do ? (குட் மார்னிங், ஹவ் டு

யூ டு?)

41.உங்களுக்கு இந்த நாள் இனிய நாளாக அமைய வாழ்த்துக்கள்.	Good-day to you, Sir. (குட் டே டு யூ, சார்)
42.நல்லது, போய் வருகிறேன்.	Well, good-bye. (வெல், குட் பை)
43.எல்லோருக்கும் வணக்கம்.	Good-night everybody. .(குட் நைட் எவ்ரிபடி)
44.இந்த பல்சுவை நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.	You are welcome to this variety programme. (யூ ஆர் வெல்கம் டு திஸ் வெரைட்டி ப்ரோக்ராம்)
45.நல்லது போய் வருகிறேன்.	O.K. bye-bye. (ஒக்கே, பை பை)
46.சரி, பரவாயில்லை.	Well, never mind. (வெல், நெவர் மைண்ட்)
47.என்னால் செய்ய முடிகிற உதவிகள் ஏதாவது உள்ளதா?	Any service for me? (எனி சர்வீஸ் ஃபார் மீ?)

Points of Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1. தமிழில் பெரியவர்களுக்கு மரியாதை தரும் விதமாக பெயருக்குப் பின் அவர்கள் சேர்த்து எழுதுகிறோம். ஆனால் ஆங்கிலத்தில் மரியாதை தரும் பொருட்டு ஒருமையைப் பன்மையாக்குவது இல்லை. உதாரணம் திரு.மனோகர் அவர்கள் வீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறார் Mr. Manohar is going to home (மிஸ்டர். மனோகர் இஸ் கோயிங் டு ஹோம்)
2. ஆங்கிலத்தில் நீ, நீங்கள் இரண்டுக்குமே You தான் நீ எங்கே போகிறாய்? நீங்கள் எங்கே போகிறீர்கள்?
3. அதேபோல படர்க்கை இடத்தில் ஒருமையைக் குறிக்க தமிழில் 'அவன்' என்போம், மரியாதைக்குரியவரை 'அவர்' என்போம். ஆனால் ஆங்கிலத்தில் 'அவன்', 'அவர்' இரண்டுக்குமே 'He' தான்.
   அவன் பேசுகிறான்
   அவர் பேசுகிறார் **He speaks**

ஆங்கிலத்தில் மன்னிப்புக்கான சொற்கள்

1. Excuse - மன்னியுங்கள்
2. Please excuse me - தயவுசெய்து என்னை மன்னியுங்கள்
3. Sorry - வருந்துகிறேன்
4. I am sorry for being late - தாமதமாக வந்ததற்கு வருந்துகிறேன்
5. Pardon - எதிரே உள்ளவர் பேசுவது புரியாவிட்டால் மறுமுறை சொல்லுங்கள் என்னும் அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகிறது
6. Please pardon me for my mistake - எனது தவறுக்காக என்னை மன்னியுங்கள்
7. Mistake - தவறாகப் புரிந்து கொள்ளுதல்
8. Don't mistake me for a teacher - என்னை ஆசிரியர் என தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்
9. Forgive - உள்ளப்பூர்வமாக மன்னித்துவிடுதல்

Note: தொலைபேசியில் பேசும்போது மறுமுனையில் பேசுபவரின் குரல் தெளிவாகக் கேட்காவிட்டால் I beg your pardon அல்லது pardon என்று சொல்லுங்கள். இதற்கு உங்கள் குரல் தெளிவாகக் கேட்கவில்லை மறுமுறை சொல்லுங்கள் என்று அர்த்தம். இதற்குப் பதில் Please repeat it என்றும் சொல்லலாம்.

LESSON THREE

பாடம் மூன்று

Exclamation Words in English

(எக்ஸ்கிளமேஷன் வேர்ட்ஸ் இன் இங்கிலீஷ்)

ஆங்கிலத்தில் உள்ள வியப்புச் சொற்கள்

நீங்கள் அளவுக்கதிகமான மகிழ்ச்சி, துக்கம், ஆச்சர்யம் போன்ற உணர்ச்சிகளை எதிர்கொள்ளும் போது, உங்களையும் அறியாமல் உங்கள் வாயிலிருந்து சில சொற்கள் வெளிப்படும். ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் இது போன்ற சில சொற்கள் இதோ உங்களுக்காக-

	தமிழில்	ஆங்கிலத்தில்	தமிழ் உச்சரிப்பு
1.	நல்வரவு!	Welcome Sir!	வெல்கம் சார்!
2.	அடக் கடவுளே!	My/Oh God!	மை/ஓ காட்!
3.	ஆச்சரியம்!	Wonderful!	வொண்டர்ஃபுல்!
4.	நிச்சயமாக!	Of course!	அஃப் கோர்ஸ்!
5.	நன்றி கடவுளே!	Thank God!	தேங்க் காட்!
6.	ஆண்டவனின் கருணையினால்!	By God's grace!	பை காட்ஸ் கிரேஸ்!
7.	ஆண்டவர் உங்களை ஆசிர்வதிக்கட்டும்!	May God bless you!	மே காட் ப்ளஸ் யூ!
8.	உங்களுக்கும்!	Same to you!	சேம் டு யூ!
9.	அற்புதம்!	Marvellous!	மார்வலெஸ்!
10.	சபாஷ்!	Well done!	வெல் டன்!
11.	என்ன அழகு!	Beautiful!	பியூட்டிஃபுல்!
12.	அடேய்!	Hey!	ஹேய்!
13.	வாவ்!	Wow!	வாவ்!
14.	பிரமாதம்!	Excellent!	எக்ஸலன்ட்!
15.	அடப் பாவமே!	How sad!	ஹவ் சேட்!
16.	நல்ல செய்தி!	That is a good news!	தட் இஸ் எ குட் நியூஸ்!
17.	என்ன ஒரு மகத்தான வெற்றி!	What a great victory!	வாட் எ கிரேட் விக்டரி!
18.	கடவுளே!	Good heavens!	குட் ஹெவன்ஸ்!
19.	கொஞ்சம் கேளுங்கள்!	Hello! Listen!	ஹலோ! லிஸன்!
20.	எவ்வளவு அழகு!	How lovely!	ஹவ் லவ்லி!
21.	அதைக் கூற என்ன தைரியம்!	How dare you say that!	ஹவ் டேர் யூ சே தட்!
22.	அன்பே!	Oh dear!	ஹோ டியர்!
23.	சீக்கிரம்!	Hurry up!	ஹரி அப்!
24.	சீக்கிரம் வா!	Hurry come!	ஹரி கம்!
26.	விரைவாக செய்யுங்கள்!	Hurry up, please!	ஹரி அப் ப்ளீஸ்!
27.	என்ன பயங்கரம்!	How terrible!	ஹவ் டெரிபிள்!
28.	என்ன அவமானம்!	How disgraceful!	ஹவ் டிஸ்கிரேஸ்ஃபுல்!
29.	என்ன முட்டாள்தனம்!	How absurd!	ஹவ் அப்சர்ட்!

30.	அவனுக்கு என்ன தைரியம்!	How dare he!	ஹவ் டேர் ஹி!
31.	செல்லமே!	How sweet!	ஹவ் ஸ்வீட்!
32.	ஆமாம் அப்படித்தான்!	Yes, it is!	யெஸ் இட் இஸ் !
33.	உண்மையாக!	Really!	ரியலி!
34.	அப்படியா!	Is it!	இஸ் இட்!
35.	நன்றி!	Thanks!	தேங்க்ஸ் !
36.	உங்களுக்கு நன்றி!	Thank you!	தேங்க் யூ!
37.	கடவுளுக்கு நன்றி!	Thank God!	தேங்க் காட்!
38.	இந்த இனிய தருணம் மீண்டும் மீண்டும் வரட்டும்!	Many happy returns of the day!	மெனி ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆ‌ஃப் தி டே!
39.	ஆஹா, நீ ஜெயித்து விட்டாய்!	Hurrah! you have won!	ஹுர்ரே! யூ ஹேவ் வொன்!
40.	உங்கள் நலனுக்காக!	For your good health!	ஃபார் யுவர் குட் ஹெல்த்!
41.	வாழ்த்துக்கள்!	Congratulations!	கங்கிராஜுலேஷன்ஸ்!
42.	என்ன பைத்தியக்காரத்தனம்!	What nonsense!	வாட் நான்சென்ஸ்!
43.	எவ்வளவு துக்ககரமானது!	What a pity!	வாட் எ பிட்டி!
44.	என்ன அவமானம்!	What a shame!	வாட் எ ஷேம்!
45.	எவ்வளவு சோகமான விஷயம்!	How tragic!	ஹவ் டிராஜிக்!
47.	அற்புதம்!	Wonderful!	வொண்டர்ஃபுல்!
48.	எவ்வளவு வெறுக்கத்தக்கது!	How disguising!	ஹவ் டிஸ்கைசிங்!
49.	ஜாக்கிரதை!	Beware!	பிவேர்!
50.	என்ன ஒரு யோசனை!	What an idea!	வாட் ஏன் ஐடியா!
51.	சீயர்ஸ்!	Cheers!	சீயர்ஸ்!
52.	என்ன கவலை!	What a bother!	வாட் எ பாதர்!
53.	கவனித்துக் கொள்!	Watch out!	வாட்ச் அவுட்!
54.	கண்படாம இருக்கட்டும்!	Touch wood!	டச் வுட்!
55.	வருவது வரட்டும்!	Come what may!	கம் வாட் மே!
56.	நீங்கள் விரும்பும்படி!	As you like it!	ஏஸ் யூ லைக் இட்!
57.	வெட்கம், சாபக்கேடு!	Shame! a curse on!	ஷேம்! எ கர்ஸ் ஆன்!

Points to Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1. ஆச்சரியம், பெருமிதம், வெறுப்பு, வெட்கம், துயரம் போன்ற உணர்ச்சிகளை வெளியிட What, How போன்ற சொற்கள் பயன்படுகின்றன. உதாரணம்-What a shame! How wonderful! etc.,

2. ஆங்கிலத்தில் உணர்ச்சி வாக்கியங்களில் காற்புள்ளி (,), முக்காற்புள்ளி (;), நிறுத்தற்புள்ளி (.) இடும் இடங்களில் ஆச்சரியக் குறி (!) இடுகின்றனர். Of course! Wonderful!

3. Exclamatory sentence (வியப்பு வாக்கியம்) வெளிப்படும் இடங்களில் குரலில் (Tone) வியப்பு போன்ற உணர்ச்சிகள் தொனிக்க வேண்டும்

LESSON FOUR

பாடம் நான்கு

Frequently used phrases

(ஃப்ரீக்வென்ட்லி யூஸ்ட் ஃப்ரேசஸ்)

அடிக்கடி பயன்படுத்தும் சொற்றொடர்கள்

ஆங்கிலத்தில் பேசும்போது நிறைய சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை கட்டளைப் பொருளோ, வேண்டுதல் பொருளோ தருவன. இந்த சொற்றொடர்களில் தேர்ச்சி பெற்றால் உரையாடலில் இவற்றைத் தக்க இடங்களில் பயன்படுத்தி மொழி நடையை மேம்படுத்திக் கொள்ளலாம். சரளமாக ஆங்கிலம் பேச, இந்த சொற்றொடர்களை மனப்பாடம் செய்து பேசுங்கள்

	தமிழில்	ஆங்கிலத்தில்	தமிழ் உச்சரிப்பு
1.	ஜாக்கிரதையாக இரு	Be careful. / Be cautiou	பீ கேர்ஃபுல் / பீ காஷியஸ்
2.	மெல்ல நட	Go slowly. / Walk slowly	கோ ஸ்லோலி / வாக் ஸ்லோலி
3.	உடனே செல்	Go at once.	கோ அட் ஒன்ஸ்
4.	இங்கே நில்	Stop here.	ஸ்டாப் ஹியர்
5.	நேராகச் செல்	Go straight.	கோ ஸ்ட்ரேயிட்
6.	விலகிப் போ/வெளியே போ	Go away. / Get out.	கோ அவே/கெட் அவுட்
7.	வந்து கொண்டே இருக்கிறேன்	Just coming.	ஜஸ்ட் கம்மிங்
8.	நிறுத்து	I say stop.	ஐ சே ஸ்டாப்
9.	பேசு	Speak.	ஸ்பீக்
10.	கேள்	Listen.	லிஸன்
11.	இங்கே காத்திரு	Wait here.	வெயிட் ஹியர்
12.	இங்கே வா	Come here.	கம் ஹியர்
13.	இங்கே பார்	Look here.	லுக் ஹியர்
14.	இதை எடுத்துக் கொள்	Take it.	டேக் இட்
15.	அருகில் வா	Come here.	கம் ஹியர்
16.	வெளியே காத்திரு	Wait outside.	வெயிட் அவுட்சைட்
17.	மேலே போ	Go up.	கோ அப்
18.	கீழே போ	Go Down.	கோ டவுன்

19.	அங்கே போ	Get off.	கெட் ஆஃப்
20.	தயாராகு	Be ready. / Get ready.	பீ ரெடி/கெட் ரெடி
21.	பேசாமல் இரு	Keep quiet.	கீப் கொயட்
22.	மிகவும் நல்லது	Very well.	வெரி வெல்
23.	நன்றாக இருக்கிறேன்	Fine/Very good.	ஃபைன்/வெரி குட்
24.	உங்கள் விருப்பப்படியே	As you like / As you please.	ஏஸ் யூ லைக்/ஏஸ் யூ ப்ளீஸ்
25.	வேறு ஏதாவது?	Anything else?	எனிதிங் எல்ஸ்?
26.	அது போதும்	That's enough.	தட்ஸ் இனஃப்
27.	இந்த மரியாதைக்கு நன்றி	Thanks for this honour.	தேங்க்ஸ் ஃபார் திஸ் ஹானர்
28.	நல்லது	O. K.	ஓக்கே
29.	ஏன் இல்லை?	Why not?	ஒய் நாட்?
30.	கொஞ்சம் கூட இல்லை	Not a bit.	நாட் எ பிட்
31.	அக்கறை எடுத்துக் கொள்	Take care.	டேக் கேர்
32.	நாளை சந்திக்கிறேன்	See you tomorrow.	சீ யூ டுமாரோ
33.	ஆம்.கண்டிப்பாக	Yes, by all means!.	யெஸ் பை ஆல் மீன்ஸ்
34.	இது மிகவும் அதிகம்	That is too much.	தட் இஸ் டூ மச்
35.	ஆமாம், ஐயா	Yes, Sir!	யெஸ் சார்
36.	இல்லை,இல்லவே இல்லை	No, not at all.	நோ நாட் அட் ஆல்
37.	பரவாயில்லை	Never mind. / Doesn't matter.	நெவர் மைண்ட் / டஸின்ட் மேட்டர்
38.	வேறொன்றுமில்லை	Nothing else.	நத்திங் எல்ஸ்
39.	விசேஷமாக ஒன்றும் இல்லை	Nothing special.	நத்திங் ஸ்பெஷல்
40.	நல்வரவு	Welcome.	வெல்கம்
41.	நம்பிக்கை வையுங்கள்	Rest assured.	ரெஸ்ட் அஷூர்ட்
42.	பார்த்து அதிக நாளாகிவிட்டது	Long time no see.	லாங் டைம் நோ சீ
43.	சென்று வருகிறேன்	Goodbye!	குட் பை
44.	பை பை	Bye bye!	பை பை
45.	கொஞ்சம் கூட இல்லை	Not the least!	நாட் தி லீஸ்ட்
46.	சொல்லத் தேவையில்லை	No mention!	நோ மென்ஷன்
47.	ஞாபகம் வைத்துக் கொள்	Remember!	ரிமெம்பர்
48.	போகட்டும் விடு	Let it go!	லெட் இட் கோ

Points to Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1. நீங்கள் விரும்பினால் Please/Kindly போன்ற சொற்களைப் பயன்படுத்திப் பேசலாம், இவை இல்லாமலும் பேசலாம் தவறில்லை

2. இந்த வாக்கியங்களில் கட்டளை மற்றும் வேண்டுகோள் என இரு வகைகள் உள்ளன, இடத்திற்கேற்ப பயன்படுத்த வேண்டும்

LESSON FIVE

பாடம் ஐந்து


Alphabet (ஆல்ஃபபெட்)
எழுத்துகள்

எழுத்துக்கள் தான் மொழியின் ஆதாரம், மொழி என்பது பேசப்படுகிற மற்றும் கேட்கப்படுகிற பொருள், மொழி எப்பொழுது பேசப்படுகிறதோ அப்பொழுதே பிறரால் கேட்கவும் படுகிறது. இது தவிர காற்று எவ்வளவு தூரம் பயணிக்கிறதோ அவ்வளவு தூரம் தான் ஒலியால் பயணிக்க முடியும். இந்த கால நேர வரையறைகளைக் கடந்தும் மொழி பயணிக்க வேண்டுமென்றுதான் வரிவடிவம் மற்றும் எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. மொழி தோன்றிய வெகு காலத்திற்குப் பிறகுதான் வரிவடிவம் தோன்றியது. இந்த வரிவடிவம் மற்றும் எழுத்துக்கள் தான் மொழியை முழுமையாகப் பயன்படுத்த உதவுகின்றன.

தமிழ் தனக்கே உரிய வரிவடிவத்தில் எழுதப்படுவது போல ஆங்கிலம் ரோமன் வரிவடிவத்தில் எழுதப்படுகிறது. எழுத்துக்களின் கூட்டம் தான் வரிவடிவம் எனப்படுகிறது. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனிப்பட்ட ஒலி உள்ளது. தமிழில் உயிர் எழுத்துக்கள் 12, மெய் எழுத்துக்கள் 18 மற்றும் உயிர்மெய் எழுத்துக்கள் 216 உள்ளன, அதேபோல ஆங்கிலத்தில் உயிர் எழுத்துக்கள் 5, மெய் எழுத்துக்கள் 21 ஆக மொத்தம் 26 எழுத்துக்கள் உள்ளன.


ஆங்கில எழுத்துக்கள் இரு வகைப்படும் -1. பெரிய எழுத்துக்கள் (**Capital Letters**) மற்றும் 2. சிறிய எழுத்துக்கள் (**Smal Letters**) இவற்றிலும் இரு பிரிவுகள் உள்ளன

1. பெரிய எழுத்துக்கள் (Capital Letters)



(a) (b)

2. சிறிய எழுத்துக்கள் (Small Letters)



(a) (b)

அச்சு மற்றும் கையெழுத்துக்கு பயன்படும் பெரிய எழுத்துக்கள் — அச்சு மற்றும் கையெழுத்துக்கு பயன்படும் பெரிய எழுத்துக்கள் — அச்சு மற்றும் கையெழுத்துக்கு பயன்படும் சிறிய எழுத்துக்கள் — அச்சு மற்றும் கையெழுத்துக்கு பயன்படும் சிறிய எழுத்துக்கள்

1 (a) அச்சு மற்றும் கையெழுத்துக்கு பயன்படும் பெரிய எழுத்துக்கள்

A	**B**	**C**	**D**	**E**	**F**	**G**	**H**	**I**	**J**	**K**	**L**	**M**
எ	பி	சி	டி	இ	எஃப்	ஜி	எச்	ஐ	ஜே	கே	எல்	எம்
N	**O**	**P**	**Q**	**R**	**S**	**T**	**U**	**V**	**W**	**X**	**Y**	**Z**
என்	ஓ	பி	க்யூ	ஆர்	எஸ்	டி	யு	வி	டபிள்யூ	எக்ஸ்	ஒய்	இஸட்

(b) கையெழுத்துக்கு பயன்படும் பெரிய எழுத்துக்கள்

A	*B*	*C*	*D*	*E*	*F*	*G*	*H*	*I*	*J*	*K*	*L*	*M*
எ	பி	சி	டி	இ	எஃப்	ஜி	எச்	ஐ	ஜே	கே	எல்	எம்
N	*O*	*P*	*Q*	*R*	*S*	*T*	*U*	*V*	*W*	*X*	*Y*	*Z*
என்	ஓ	பி	க்யூ	ஆர்	எஸ்	டி	யு	வி	டபிள்யூ	எக்ஸ்	ஒய்	இஸட்

2 (a) அச்சுக்கு பயன்படும் சிறிய எழுத்துக்கள்

a b c d e f g h i j k l m n o p q r s t u v w x y z

(b) கையெழுத்துக்கு பயன்படும் சிறிய எழுத்துக்கள்

a b c d e f g h i j k l m n o p q r s t u v w x y z

நான்கு வரிகள் கொண்ட புத்தகத்தில் ஆங்கில எழுத்துக்களை எழுதும்போது-

(i) இடைப்பட்ட இரு வரிகளுக்குள் எழுதப்படும் பதினான்கு எழுத்துக்கள் -

a, c, e, i, m, n, o, r, s, u, v, w, x, z

(ii) மேலே உள்ள மூன்று வரிகளுக்குள் எழுதப்படும் ஆறு எழுத்துக்கள் -

b, d, h, k, l, t

(iii) நான்கு வரிகளிலும் எழுதப்படும் ஒரே எழுத்து -

f

(iv) கீழே உள்ள மூன்று வரிகளுக்குள் எழுதப்படும் ஐந்து எழுத்துக்கள் -

g j p q y

(v) Capital Letters எப்பொழுதும் அச்சடிக்கும் போது அல்லது எழுதும்போது மேலே உள்ள மூன்று வரிகளுக்குள் எழுதப்படும்

A B C D E F G H I J K L M N O P Q R S T

U V W X Y Z

நாம் எழுதும் எழுத்துக்களுக்கும், அச்சில் காணப்ப்டும் எழுத்துக்களுக்கும் பெரிய வேறுபாடு எதுவும் இல்லை.

எழுதும் போது வேகம் காரணமாக பெரிய எழுத்துக்கள் அச்சில் உள்ளது போல் இல்லாமல் வடிவம் சற்று வேறுபட வாய்ப்புள்ளது. எனவே பேனாவை அடிக்கடி தாளில் இருந்து எடுக்காமல் எழுத வேண்டும்.

இதுபோல பெரிய எழுத்துக்களைப் பொருத்த வரையில் கையால் எழுதுவதற்கும், அச்சிற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. அச்சில் பெரிய எழுத்துக்களின் வரி முடிவில் சற்று உருண்டையாக காட்சியளிக்கும். இந்த எழுத்துக்கள் பார்ப்பதற்கு ஈர்ப்புள்ளதாகவும், அழகாகவும் இருக்கும்.

அனைத்து ஆங்கில எழுத்துக்களுமே ரோமன் பெரிய எழுத்துக்களின் பல்வேறு வடிவங்கள் மற்றும் பேனாவின் விந்தை என்பதுதான் உண்மை.

Calligraphy (கேலிகிராஃபி)
எழுத்து ஓவியம்

அழகாக எழுதுவதில் ஒரு கவர்ச்சி உள்ளது. இதனால்தான் எழுத்து ஓவியத்தைப் பார்த்ததும் படிப்பவரது மனம் மகிழ்ச்சி அடைகிறது. எழுதுபவரின் தனித்தன்மைக்கேற்ப எழுத்து ஓவியத்தின் மெருகு கூடுகிறது. இப்படி அழகாக எழுத வேண்டுமெனில் ஒவ்வொரு எழுத்தையும் மிகுந்த கவனத்துடன் எழுதிப் பழக வேண்டும். அப்படிப் பழகும் போது நான்கு வரி நோட்டு புத்தகத்தில் எழுதிப் பழகுவது நல்லது. இது பழக்கத்திற்கு வந்துவிட்டால் பிறகு கோடு போடாத தாளிலும் மிக எளிதாகவும் அதே சமயம் அழகாகவும் எழுத முடியும்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போல கையெழுத்தும் பழக்கத்தின் மூலம் வருவது தான். இது ஒரு கலை என்று கூட சொல்லலாம். இது ஒருவர் தனக்கு அளிக்கப்பட்ட பரிசாக (Reward) கருத வேண்டும். எழுதுபவர் எழுத்துக்களை சரியாக எழுதுவதுடன் நில்லாமல் கவர்ச்சியாக எழுதவும் முயற்சிக்க வேண்டும். கையெழுத்துக் கலை (Letter Craft) அழகானது மட்டுமின்றி அவசியமானதும் கூடத்தான். எழுதுபவர் இதைப் புரிந்து கொண்டால் சிரமமின்றி எழுதலாம். சிறிதளவு சிரத்தையும், பென்மேன்ஷிப்பும் (Penmanship) இருந்தால் இது சாத்தியமாகிவிடும்.

ஆரம்பத்தில் எழுதப் பழகும்போது சமமான மேஜையில் அல்லாமல் சாய்வான (Slopy) மேஜையில் எழுதிப்பழக வேண்டும். இந்த சாய்மானம் 40 டிகிரி அளவில் இருக்க வேண்டும். உங்கள் பெருவிரல் மற்றும் அடுத்துள்ள இருவிரல்களாலும் பேனாவை அழுத்திப் பிடித்து பேனாவின் முனை சற்று வெளியில் இருக்குமாறு வைத்துக் கொள்ளுங்கள். பிறகு உள்ளங்கையால் பேப்பரை அழுத்தி ஆதாரமாகக் கொண்டு பேனாவினால் எழுதுங்கள். இப்படி எழுதும் போது பேனாவை சரியாகப் பிடித்தால்தான் முறையாக எழுதவரும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எழுத்து என்பது பேனாவை சரியாகப் பிடிப்பதிலிருந்து ஆரம்பமாகிறது. பேனாவின் முனையை பேப்பரில் பதித்து பேனாவை சற்றே அழுத்தத்துடன் அதேசமயம் சுழலும் விதத்தில் பிடித்து எழுத வேண்டும். நாம் விரும்பும் வடிவத்தை பேனா எளிதாக எழுதும் வண்ணம் பேனாவை பயன்படுத்த வேண்டும். பேனாவைப் பிடித்து அழகாக, தெளிவாக, நீளக் கோடுகள் (Vertical), படுக்கைக் கோடுகள் (Horizontal), முத்துமுத்தாக அழகிய வடிவங்களுடன் கூடிய எழுத்துக்கள் (Strokes) போன்றவற்றை எழுதுங்கள். முதலில் எழுத்துக்களை தனித்தனியாகவும், பிறகு சேர்த்தும் எழுதிப் பழகுங்கள். அதேபோல எழுத்துக்களை கவனமாகப் பாருங்கள். முடிந்தால் அதன் வளைவுகள், கோடுகள் ஆகிவற்றை 'லென்ஸ்' (Magnifying Lens) கொண்டு கவனியுங்கள். பலவடிவமுள்ள எழுத்துக்கள் ஒரு வரிசையில் சமமாக (Evenness) அமைந்திருப்பதே சீரான கையெழுத்து. வட்டமான சுழிக்கப்பட்ட எழுத்துக்கள், நேர்கோடான எழுத்துக்கள் ஆகியவற்றை சரியான இடைவெளிவிட்டு எழுத வேண்டும். இந்த இடைவெளிகள்தான் வார்த்தைகளுக்கு அழகூட்டுகிறது. இவற்றை எல்லாம் நினைவில் கொண்டு தினமும் ஒரு பக்கம் எழுதிப் பழகுங்கள். முடிந்தவரை பால் பாயின்ட் பேனாவைப் பயன்படுத்தாதீர்கள்.

Points to Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1. ஆங்கிலத்தில் Capital மற்றும் Small என இரு வகை எழுத்துக்கள் உள்ளன
2. f நான்கு வரிகளிலும், b, d, h, k, l, t ஆகியவை மேலே உள்ள மூன்று வரிகளிலும், g, j, p, q, y ஆகியவை கீழே உள்ள மூன்று வரிகளிலும் எழுதப்படுகின்றன. பிற எழுத்துக்கள் இரு வரிகளுக்கிடையில் எழுதப்படுகின்றன.

3. Capital letters அச்சடிக்கும் போதும், அலங்காரமாக எழுதப்படும் போதும் மேலே உள்ள மூன்று வரிகளுக்கிடையிலேயே எழுதப்படும்

4. அழகாக எழுதுவதே ஒரு கலைதான். இதற்குப் பயன்படும் சில எளிய குறிப்புகள் இதோ-

(a) நல்ல பேனாவால் நான்கு வரி நோட்டில் எழுதிப் பழகுங்கள்

(b) எழுதிய பிறகு ஒருமுறை பொறுமையாகப் பாருங்கள்

(c) பேனாவை லேசாகப் பிடித்துக் கொண்டு எழுதுங்கள். அதேபோல எழுதும் போது நிப்பில் அதிக அழுத்தம் கொடுக்காமல் சரளமாக எழுதவும்

(d) எழுத்துக்களின் அளவு வேறுபடாமலும், வார்த்தைகளிடையே போதிய இடைவெளிவிட்டும் எழுத வேண்டும்

(e) பால்பாயின்ட் பேனாவில் எழுதாதீர்கள்

Exercise for Revision
பயிற்சிக்காக

1. Capital letters-ஐ அச்சில் உள்ளபடியும், அலங்காரமாகவும் எழுத நன்றாகப் பயிற்சி செய்யுங்கள்

2. எழுத்துக்களின் உச்சரிப்புகளை நினைவுபடுத்தி சொல்லிப் பாருங்கள்
3. சின்ன எழுத்துக்களை முதலில் தனித்தனியாகவும், பின்னர் சேர்த்தும் குறைந்தது பத்துமுறை எழுதுங்கள்
4. கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை அழகான கையெழுத்தில் பலமுறை எழுதிப் பழகுங்கள் Matters, Temper, Remember, Hungry, Friends, Hunting, Nothing, Between (இப்படி எழுதிப் பழகும் போது தேவையான இடங்களில் மட்டும் தாளில் இருந்து பேனாவை எடுங்கள், மற்ற இடங்களில் அப்படியே

LESSON SIX

பாடம் ஆறு

Pronunciation of Alphabet

(ப்ரொனன்சியேஷன் ஆஃப் ஆல்ஃபபெட்)

எழுத்துக்களின் உச்சரிப்பு

மொழி மனித குலத்தின் ஓர். சிறப்பம்சம். இது மனிதர்களை மற்ற உயிரினங்களில் இருந்து வேறு படுத்துகிறது. இது நமது பண்பாட்டு வளர்ச்சிக்குக் கிடைத்த வரம். மொழியின் பிரதான நோக்கம் பேசப்படுவதும், கேட்கப்படுவதும் என்பதால் சொற்களை உச்சரிக்கும் போது சரியாக உச்சரிக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் எழுத்துக்கள் தனித்து வரும் போது ஒருவிதமாகவும், பிற எழுத்துக்களுடன் சேர்ந்து வரும்போது வேறுவிதமாகவும் ஒலிக்கும்.

எழுத்து: உச்சரிப்பு

A a ஏ வார்த்தைகளில் வரும் உச்சரிப்பு - ஆ - Smart (ஸ்மார்ட்) திறமைசாலி ; Palm (பாம்) உள்ளங்கை ; Dark (டார்க்) இருட்டு ; Fast (ஃபாஸ்ட்) வேகம். விரதம்

எ– Safe (சேஃப்) பத்திரம்ய Aid (எய்ட்) உதவிய Bail (பெயில்) ஜாமீன்ய Grave (க்ரேவ்) சுடுகாடுய Save (சேவ்) காப்பாற்று

அ– Addition (அடிஷன்) கூட்டல்ய Rascal (ராஸ்கல்) பொறுக்கிய Ago (அகோ) முன்னால்

ஏ– Sac (சேக்) பைய Sad (சேட்) சோகம்ய Add (ஏட்) சேர்ய Badge (பேட்ஜ்) பில்லைய Bad (பேட்) கெட்டய Gravitation (க்ராவிடேஷன்) புவியீர்ப்பு

ஆ– All (ஆல்) அனைத்தும்ய Ball (பால்) பந்துய Small (ஸ்மால்) சிறியய Fall (ஃபால்) விழுய Pall (பால்) ஆடைய Call (கால்) கூப்பிடு

B b பீ ப– Book (புக்) புத்தகம்ய Absorb (அப்சார்ப்) உறிஞ்சுய Tub (டப்) தொட்டிய Cub (கப்) சிங்கக்குட்டி

C c சி க– Cat (கேட்) பூனைய Coal (கோல்) நிலக்கரிய Can (கேன்) குவளைய Clever (கிளவர்) புத்திசாலி ய Clean (க்ளீன்) சுத்தம்

ச– Cent (சென்ட்) நூறுய Cedar (செடர்) தேவதாரு மரம்ய Cement (சிமெண்ட்) சிமெண்ட்ய Certain (செர்ட்டெயின்) நிச்சயமாகய Certificate (சர்டிஃபிகேட்) சான்றிதழ்

D d டி ட– Did (டிட்) செய்துய Daughter (டாட்டர்) மகள்ய Bad (பேட்) கெட்டய Bond (பாண்ட்) பந்தம், Dog (டாக்) நாய்ய Doctor (டாக்டர்) மருத்துவர்

E e ஈ இ– Here (ஹியர்) இங்கேய Near (நியர்) அருகேய Before (பிஃபோர்) முன்னால்

ஈ– She (ஷீ) அவள்ய Be (பீ) ஆகுதல்ய Me (மீ) நான்ய Detailed (டீடெயில்ட்) விவரமாக

அ– Herd (ஹெர்ட்) மந்தைய Interim (இன்டரிம்) இடைக்காலம்ய Term (டேர்ம்) நியமம்

எ– Egg (எக்) முட்டைய Men (மென்) ஆண்கள்ய Pebble (பெபிள்) கூழாங்கல்ய Peck (பெக்) மூக்கினால் கொத்துய Bent (பென்ட்) வளைந்த

F f எஃப் ஃப– Fan (ஃபேன்) மின்விசிறிய Leaf (லீஃப்) இலைய Infant (இன்ஃபேன்ட்) குழந்தைய Rifle (ரைஃபிள்) துப்பாக்கிய Fate (ஃபேட்) விதிய First (ஃபர்ஸ்ட்) முதல்

G g ஜி க– Good (குட்) நல்லய God (காட்) கடவுள்ய Rug (ரக்) கம்பளம்ய Bag (பேக்) பை ய Gorge (கார்ஜ்) மலைகளிடையில் இடுக்கு வழி

ஜ– Geometry (ஜியாமெட்ரி) திரிகோணம்ய Gentle (ஜென்டில்) இதமாகய Badge (பேட்ஜ்) பில்லைய

Regiment (ரெஜிமென்ட்) சேனையின் ஒரு பிரிவு

H h எச் ஹ– Hat (ஹேட்) தொப்பிய Enhance (என்ஹான்ஸ்) உயர்த்துய Horse (ஹார்ஸ்) குதிரைய Heel (ஹீல்) குதிகால்

I i ஐ இ– India (இண்டியா) இந்தியாய Bit (பிட்) சிறிதுய Fit (ஃபிட்) பொருந்துய Lily (லில்லி) ஒரு பூய Inept (இனெப்ட்) தகுதியற்ற

ஐ– Bite (பைட்) கடிய Light (லைட்) விளக்குய Right (ரைட்) சரிய Sight (சைட்) பார்வை

J j ஜே ஜ– Joke (ஜோக்) நகைச்சுவைய Join (ஜாயின்) சேர்ய Rejoice (ரிஜாய்ஸ்) களிப்படைய Deject (டிஜெக்ட்) நிராகரி

K k கே க– Rock (ராக்) பாறைய King (கிங்) அரசன்ய Kite (கைட்) பட்டம்ய Kiss (கிஸ்) முத்தம்

L l எல் ல– Lame (லேம்) முடம்ய Delete (டெலீட்) அழிய Meal (மீல்) சாப்பாடுய Pull (புல்) இழுய Lull (லல்) அமைதிய Dull (டல்) மந்தம்

M m எம் ம– Man (மேன்) மனிதன்ய Reform (ரிஃபார்ம்) சீர்திருத்தம்ய Seminar (செமினார்) கருத்தரங்கம்

N n என் ந– Name (நேம்) பெயர்ய Sense (சென்ஸ்) உணர்வுய Ban (பேன்) தடைய Run (ரன்) ஓடு

O o ஓ ஓ– Open (ஓப்பன்) திறய Bone (போன்) எலும்புய Mango (மேங்கோ) மாங்காய்ய Probe (ப்ரோப்) விசாரணைஆ– Problem (ப்ராப்ளம்) பிரச்சனைய Prodigal (ப்ரோடிகல்) ஊதாரிய Tolerance (டாலரென்ஸ்) சகிப்புத்தன்மை

P p பி ப– Gap (கேப்) இடைவெளிய Rope (ரோப்) கயிறுய Open (ஓப்பன்) திறய Pen (பென்) பேனாய Push (புஷ்) தள்ளு

Q q க்யூ க– Mosque (மாஸ்க்) பள்ளிவாசல்ய Queue (க்யூ) வரிசைய Banquet (பேன்க்வெட்) விருந்துய Quick (க்விக்) விரைவு

R r ஆர் ர– Rest (ரெஸ்ட்) ஓய்வுய Bar (பார்) நீண்ட விறைப்பான துண்டுய Surprise (சர்ப்ரைஸ்) ஆச்சரியம்ய Room (ரூம்) அறை

S s எஸ் ச– Sun (சன்) சூரியன்ய Bus (பஸ்) பேருந்துய Sister (சிஸ்டர்) சகோதரிய Soap (சோப்) சோப்பு

ஸ– Drowsy (ட்ரௌஸி) தூங்கி வழிகிறய Feasible (ஃபீஸிபிள்) சாத்தியமானய Reason (ரீஸன்) காரணம்

T t டி ட– Master (மாஸ்டர்) குருய Tea (டீ) தேநீர்ய Button (பட்டன்) பொத்தான்ய Pot (பாட்) பானை

ஷ– Initial (இனிஷியல்) ஆரம்ப எழுத்துய Portion (போர்ஷன்) பகுதிய Patient (பேஷண்ட்) நோயாளிய Station (ஸ்டேஷன்) நிலையம்

U u யூ உ– Bull (புல்) காளைய Push (புஷ்) தள்ளுய Put (புட்) போடு

அ– But (பட்) ஆனால்ய Shut (ஷட்) மூடுய Up (அப்) மேலேய Sun (சன்) சூரியன்

V v வி வ– Vague (வேக்) தெளிவில்லாதய Wave (வேவ்) அலைய River (ரிவர்) நதிய Brave (ப்ரேவ்) வீரம்

Ww டபிள்யூ வ– War (வார்) போர்ய Widow (விடோ) விதவைய Power (பவர்) சக்திய Want (வான்ட்) தேவை

X x எக்ஸ் ஸ– Examination (எக்ஸாமினேஷன்) தேர்வுய Example (எக்ஸாம்பிள்) உதாரணம்ய Exuberance (எக்ஸ்யூபெரன்ஸ்) அதிகம்

எக்ஸ்– Excreta (எக்ஸ்க்ரீட்டா) கழிவுப்பொருள்ய X-ray (எக்ஸ்ரே) எக்ஸ்ரேய Exclude (எக்ஸ்க்ளூட்) சேர்க்காமல்ய Exhale (எக்ஸ்ஹேல்) மூச்சை வெளிவிடுதல்

Y y ஒய் ய– Yes (யெஸ்) ஆமாம்ய Yoga (யோகா) யோகம்

ஐ– By (பை) அருகேய Cry (க்ரை) அழுய My (மை) என்

ஈ– Bury (பரீ) புதைய Worry (வொரீ) கவலை

Z z இஸட் ஜ– Zoo (ஜூ) வனவிலங்கு சரணாலயம்ய Zebra (ஸீப்ரா) வரிக்குதிரைய Blaze (ப்ளேஸ்) ஜுவாலைய Lazy (லேஸி) சோம்பல்ய Lizard (லிஸார்ட்) பல்லி

மெய்யெழுத்துக்கள் சேர்ந்து வரும்போது (*Compound Letters*) (காம்பவுண்டு லெட்டர்ஸ்)

ch	ச–	Church (சர்ச்) தேவாலயம்ய Batch (பேட்ச்) கூட்டம்; Bunch (பன்ச்) கொத்து
	க–	Clachan (க்ளேகன்)ய Choronch (கொரோனக்)
	க–	Chaos (கேஓஸ்) குழப்பம்ய Chemistry (கெமிஸ்ட்ரி) வேதியியல்ய Character (கேரக்டர்) குணம்
gh	க–	Ghost (கோஸ்ட்) பேய்ய Aghast (அகாஸ்ட்) பயத்தால் திகைத்த
ph	ஃப–	Phew (ஃப்யூ)ய Phone (ஃபோன்) தொலைபேசிய Sophisticated (சொஃபஸ்டிகேட்டட்) சொகுசான
sh	ஷ–	Shawl (ஷால்) சால்வைய Shake (ஷேக்) அசைய Rash (ரேஷ்) மூடத்தனமானய Shrink (ஷ்ரின்க்) சுருங்கு
th	த–	Thin (தின்) மெல்லியய Thick (திக்) தடிமனானய Breadth (ப்ரெட்த்) அகலம்ய Breath (ப்ரீத்) சுவாசம்
	த–	Thine (தைன்) உன்னுடையய With (வித்) உடன்ய This (திஸ்) இந்தய That (தட்) அந்த

உயிரெழுத்துக்கள் சேர்ந்து வரும்போது (*Diphthong*) (டிஃப்தாங்)

ஆங்கிலத்தில் உயிரெழுத்துக்கள் சேர்ந்து வரும் இடங்களில் உச்சரிப்புகளை புரிந்து கொள்ளுதல் சற்று கடினமாக இருக்கும். எனவே இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உயிரெழுத்துக்கள் சேர்ந்து வரும் சில சாதாரண உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ae	ஈ–	Encyclopaedia (என்சைக்ளோபீடியா) கலைக்களஞ்சியம்ய Aesthetic (ஏஸ்தெடிக்) கலா ரசிகர்
au	ஆ–	Daughter (டாட்டர்) மகள்ய Caught (காட்) பிடிபட்டய Audio (ஆடியோ) கேட்கக் கூடிய
'ea	ஈ–	Clean (க்ளீன்) சுத்தம்ய Mean (மீன்) சராசரிய Dean (டீன்) பதவி, Yeast (ஈஸ்ட்) காடி
ei	ஐ–	Either (எய்தர்) இரண்டில் ஒன்றுய Neither (நெய்தர்) இரண்டும் இல்லைய Height (ஹைட்) உயரம்
	எ–	Eight (எயிட்) எட்டுய Freight (ஃப்ரெயிட்) சரக்குய Weight (வெயிட்) எடைய Straight (ஸ்ட்ரெயிட்) நேராக
eo	இஆ–	Peon (ப்யூன்) பணியாள்ய Neon (நியான்) ஒரு ரசாயனப் பொருள்ய Geography (ஜியோகிரஃபி) புவியியல்
eu	யூ–	Eucalyptus (யூக்கலிப்டஸ்) தைல மரம்ய Eunuch (யூனக்) பேடிய Europe (யூரோப்) ஐரோப்பா
ew	இயூ–	Mew (ம்யூ) பூனை போல் கத்துய New (நியூ) புதியய View (வியூ) பார்வை
ei	ஈ–	Receive (ரிசீவ்) பெற்றுக் கொள்ய Deceit (டிசீட்) சூதுய Reiterate (ரெயிட்டரேட்) மறுபடி செய்
ie	ஈ–	Grieve (க்ரீவ்) கவலைப்படுய Sieve (சீவ்) தையல்ய Field (ஃபீல்ட்) வயல்ய Fiend (ஃபிண்டு) அரக்கன்
io	ஐ–	Ion (ஐயன்)ய Iota (ஐயோட்டா) இம்மியளவுய Iodine (ஐயோடின்) அயோடின்
ia	அய்–	Diameter (டயாமீட்டர்) விட்டம்ய Diamond (டைமண்டு) வைரம்ய Bias (பையாஸ்) ஒரு பக்கம் சார்ந்த
oo	உ–	Look (லுக்) பார்ய Book (புக்) புத்தகம்ய Nook (நூக்) மூலை
	ஊ–	Broom (ப்ரூம்) துடைப்பம்ய Room (ரூம்) அறைய Spoon (ஸ்பூன்) கரண்டிய Moon (மூன்) நிலாய Soon (சூன்) விரைவில்
oe	ஊ–	Shoe (ஷூ) காலணி
	ஈ–	Oedipus (ஈடிபஸ்) ஒரு பெயர்ய Foetus (ஃபீடிஸ்) கரு
	ஓ–	Roe (ரோ) பெண்மான்
oa	ஓ–	Goat (கோட்) ஆடுய Moan (மோன்) புலம்புய Oath (ஓத்) சபதம்ய Oak (ஓக்) சிந்தூர மரம்
oi	அய்–	Join (ஜாயின்) சேர்ய Loin (லாயின்) இடுப்பு பாகம்ய Noise (நாய்ஸ்) சத்தம்ய Loiter (லாயிட்டர்) பின்தங்குய Coin (காயின்) காசு
ou	ஔ–	Shout (ஷௌட்) கத்துய Bough (பௌவ்) கிளைய Gout (கௌட்) உடல்நலமின்மைய Out (ஔட்) வெளியே
uu	யூ–	Vacuum (வாக்யூம்) வெளி

வார்த்தைகளின் அமைப்பு முறையிலேயே அவற்றை எப்படி உச்சரிக்க வேண்டும் என்ற குறிப்பு இருக்கும். இவற்றை **Pronunciation key** (ப்ரொனௌன்சியேஷன் கீ) உச்சரிப்பு வழிகாட்டி என்கிறோம். இந்த உச்சரிப்புகளை மனப்பாடம் செய்து பயன்படுத்த ஆரம்பித்தால் காலப்போக்கில் பழகி விடும். இப்புத்தகத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அகராதியை இதற்காக அடிக்கடி பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதை ஒரு

பொழுதுபோக்காகவே வைத்துக் கொண்டால், நீங்கள் ஆங்கில உச்சரிப்பில் விரைவில் தேர்ந்து விடலாம்.

ரோமன் வரிவடிவம்

உலகின் அனேக மொழிகள் ரோமன் வரிவடிவத்திலேயே எழுதப்படுகின்றன. ஆங்கிலம் தவிர ஃபிரெஞ்சு, ஸ்பேனிஷ், இத்தாலி, போர்சுகல், ருமானியன், ஜெர்மன், போலிஷ், துருக்கி போன்ற மொழிகள் ரோமன் வரிவடிவை சற்று மாற்றியும், மேம்படுத்தியும் பயன்படுத்தி வருகின்றன. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட எஸ்பரான்டோ (Esparanto) மொழியும் இதே வரிவடிவத்திலேயே எழுதப்படுகிறது.

தமிழ் எழுத்துக்களை ரோமன் வரிவடிவில் இப்படி எழுதலாம்.

1. உயிர் எழுத்துக்கள் (Vowel)

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
A	M̐	I	T̲	U	Ṃ	E	EE	AI	O	OO	AU	AH
a	k̲h̲	e	®	u	ū	e	ee	ai	o	oo	au	ah

2- மெய் எழுத்துக்கள் (Consonants)

க	ங
ka	nga
ட	ண
ta	na
ப	ம
pa	ma
ல	வ
la	va
ற	ன
ra	na

ச	ஞ
cha	n
த	ந
tha	na
ய	ர
ya	ra
ழ	ள
zha	la

கீழே சில தமிழ் வாக்கியங்கள் ரோமன் வரிவடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கவனமாகப் படித்து இதே போல எழுத முயற்சி செய்யுங்கள்.

1. என்ன உனது பெயர் ராமநாரயணணா?
   Yenna unadhu peyar Ramanarayanana?
2. என்ன நேரமாகி விட்டதா?
   Yenna neramagi-vittatha?
3. மணி நான்கு ஆகிறதா?
   Mani naangu aagiratha?
4. அவன் கடைத்தெருவுக்குப் போயிருக்கிறான்
   Avan kadaiththeruvukku pooyirukkeraan
5. நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா?
   Neengal nanraga erukkereergala?
6. நான் ஊருக்குப் போகிறேன்
   Naan uurukkup poogiraen
7. அவள் வந்தால் சொல்லிவிடு
   Aval vandhal sollividu
8. இவன் நன்றாகப் படிக்கிறான்
   Evan nanraagap padikkeraan
9. நீங்கள் எந்த சினிமாவிற்குப் போனீர்கள்?
   Neengal yendha cinemavirkkup pooneergal?
10. தமிழ் பெண்கள் வீரமானவர்கள்
(e) He has no money.

(f) Nobody was there.

இவைகள் சில கூற்றுக்கள். இதில் இரண்டு வகை உண்டு-1. உடன்பாட்டு வாக்கியம் (affirmative =அஃபர்மேட்டிவ்) மற்றும் 2. எதிர்மறை வாக்கியம் (negative = நெகட்டிவ்) a, b மற்றும் c ஆகியவை ஏதோ ஒரு விஷயத்தில் உடன்படுவதால் அவை உடன்பாட்டு வாக்கியங்கள் எனப்படுகிறது. அதேபோல d, e மற்றும் f ஆகிய எதிர்மறை வாக்கியங்களில் ஒரு விஷயத்தை மறுத்துக்கூறும் கூற்று உள்ளது.

2- Interrogative (இன்ட்ராகேட்டீவ்) வினா வாக்கியங்கள் µ இவை கேள்வி கேட்கப் பயன்படும் வாக்கியங்கள். இதிலும் உடன்பாடு, எதிர்மறை வாக்கியங்கள் அமையும்.

(a) What's your name? (வாட்ஸ் யுவர் நேம்?) உன் பெயர் என்ன?

(b) Why are you late? (வொய் ஆர் யூ லேட்?) நீ ஏன் தாமதம்?

(c) Are you in time? (ஆர் யூ இன் டைம்?) நீ நேரத்தில் இருந்தாயா?

(d) Is she not pretty? (இஸ் ஷீ நாட் ப்ரீட்டி?) அவள் அழகாக இல்லையா?

(e) Have you not done your work? (ஹேவ் யூ நாட் டன் யுவர் ஒர்க்?) நீங்கள் உங்கள் வேலையை செய்ய வில்லையா?

(f) Was he not present there? (வாஸ் ஹீ நாட் பிரசென்ட் தேர்?) அவன் அங்கு இல்லையா?

3. **Imperative (இம்ப்ரேட்டிவ்) கட்டளை வாக்கியம் µ**இந்த வாக்கியத்தில் கட்டளை, வேண்டுதல், உத்தரவு, வழி நடத்துதல், கெஞ்சுதல் முதலியன வரும். இதிலும் உடன்பாடு எதிர்மறை இரு விதத்திலும் வாக்கியங்கள் அமையும்.

(a) Bring the book. (பிரிங் த புக்)	புத்தகத்தை கொண்டுவா
(b) Get yourself ready. (கெட் யுவர் செல்ஃப் ரெடி)	ஆயத்தமாகு
(c) Please do me a favour. (ப்ளீஸ் டூ மீ எ ஃபேவர்)	தயவுசெய்து எனக்கு ஒரு உதவி செய்யுங்கள்
(d) Don't make a noise. (டோண்ட் மேக் எ நாய்ஸ்)	சத்தம் போடாதே
(e) Be silent. (பீ ஸைலன்ட்)	அமைதியாக இரு
(f) Don't tread on the grass. (டோன்ட் ட்ரிட் ஆன் தி கிராஸ்)	புல்வெளியில் நடக்காதே.

4. **Exclamatory (எக்ஸ்க்ளமேட்ரி) வியப்பு வாக்கியங்கள் &** இது நம் உள்ள உணர்வுகளையும், வியப்பையும் வெளிப்படுத்தும் வாக்கியம்.

(a) How beautiful! (ஹவ் ப்யூட்டிஃபுல்)	எத்தனை அழகு!
(b) What a surprise!(வாட் ஏ சர்பிரைஸ்)	என்ன வியப்பு!
(c) Oh! how tragic! (ஹோ ஹௌ ட்ராஜிக்)	ஹா! எத்தனை துயரம்!
(d) Alas! he is dead! (அலாஸ்! ஹி இஸ் டெட்)	ஐயோ! அவன் இறந்துவிட்டான்.

Points to Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1- ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஏதேனும் ஒரு குறி அவசியம். இருக்கும். வாக்கியத்திற்கு ஏற்ப முற்றுப்புள்ளி (), கேள்விக்குறி (?), ஆச்சரியக்குறி (I) ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்
2- இவை கேள்வி வினா வாக்கியங்களாகவும் அமையும். ஆனால் அது வினா அல்ல.

Exercise for Revision
பயிற்சிக்காக

கீழே தரப்பட்டிருக்கும் வாக்கியங்களுக்கு பொருத்தமான குறிகளை இடவும்.

1. What a shame 2. Let me go 3. How nice of you 4. Where is my pen 5. I see a bird flying 6. Don't cry like this 7. How beautiful it looks 8. Where do you come from 9. Run fast 10. Write your name here 11. O that I was present there 12. Please do me a favour 13. Who has done it 14. May I come in 15. Oh how sad 16. If I were the king 17. Get me a glass of water 18. What a shameless person 19. Is it yours 20. None but you can save 21. Who is there in the room.

LESSON SIX

பாடம் ஆறு

Negative Sentences

(நெகட்டீவ் சென்டன்ஸஸ்)

எதிர்மறை வாக்கியங்கள்

எதிர்மறை வாக்கிய அமைப்பிற்கு துணை வினைச்சொற்கள்-can, do, did, is, am, are ஆகியவற்றின் பின் not வரவேண்டும். துணைவினைச் சொற்கள் பொது இடங்களில் முக்கிய வினையுடன் வரும். இதன் எண்ணிக்கை- 24

Present tense	Past tense	Present tense		Past tense
		can		could
is, am, are	was, were	may		might
has, have	had	must		-L
do, does	did	need	L	-
		will		would
		shall		should
		ought	L	-
		dare	L	-
		used to	L	-

துணைவினைச் சொற்களுடன் 'not' பயன்படுத்தி எதிர்மறை வாக்கியங்களாக அமைக்கலாம்.

1. பேருந்து இப்பொழுது வராது.	The bus is not coming now. (த பஸ் இஸ் நாட் கம்மிங் நௌ)
2. நீங்கள் இங்கே தங்க முடியாது.	You can't stay here. (யூ கான்ட் ஸ்டே ஹியர்)
3. எனக்கு உன்னை தெரியாது.	I don't know you. (ஐ டோன்ட் நோ யூ)
4. அவள் இன்று போகமுடியாது.	She can't go today. (ஷீ கான்ட் கோ டுடே)
5. அவன் கடிதம் எழுதவில்லை	He is not writing a letter. (ஹி இஸ் நாட் ரைட்டிங் எ லெட்டர்)
6. அவர்கள் நல்ல நண்பர்கள் அல்ல.	They are not good friends. (தே ஆர் நாட் குட் ப்ரெண்ட்ஸ்)
7. இன்று ஞாயிற்றுக்கிழமை அல்ல.	Today is not Sunday. (டுடே இஸ் நாட் சன்டே)
8. புத்தகம் மேஜை மீது இல்லை.	The book is not on the table. (தி புக் இஸ் நாட் ஆன் த டேபிள்)
9. இந்த கணக்கை என்னால் போடமுடியாது.	I cannot do this sum. (ஐ கெனாட் டூ திஸ் சம்)
10. மருத்துவர் இப்பொழுது வர முடியாது.	The doctor can not come now. (த டாக்டர் கெனாட் கம் நௌ)
11. சுரேஷ் டெல்லியில் இல்லை	Suresh was not in Delhi. (சுரேஷ் வாஸ் நாட் இன் டெல்லி)
12. இந்தப் பயிற்சி சிரமம் இல்லை	This exercise is not difficult. (திஸ் எக்ஸர்சைஸ் இஸ் நாட் டிஃபிகல்ட்)
13. நேற்று திங்கட்கிழமை இல்லை.	Yesterday was not Monday. (எஸ்டர்டே வாஸ் நாட் மண்டே)
14. சுவற்றின் மீது சித்திரம் இல்லை.	There was not picture on the wall.(தேர் வாஸ் நாட் பிக்சர் ஆன் த வால்)
15. புதிய வார்த்தைகள் அதிகமாக இல்லை.	There were no many new words. (தேர் வேர் நோ மெனி நியூ வேர்ட்ஸ்)
16. அவர்கள் நமக்காக காத்திருக்க மாட்டார்கள்.	They will not wait for us. (தே வில் நாட் வெயிட் ஃபார் அஸ்)
17. நான் பேருந்தில் செல்ல முடியாது.	I shall not go by bus.(ஐ ஷால் நாட் கோ பை பஸ்)
18. அவன் உனக்கு பணம் கொடுக்கமாட்டான்.	He will not lend you money. (ஹீ வில் நாட் லெண்ட் யூ மணி)
19. அவன் அதைத் தவறாக கருதமாட்டான்.	He will not take ill of it. (ஹீ வில் நாட் டேக் இல் ஆஃப் இட்)
20. அவர்கள் சந்தைக்கு போகவில்லை.	They didn't go to the fair. (தே டிண்ட் கோ டு த ஃபேர்)
21. நீ நேற்று வரவில்லை	You didn't come yesterday. (யூ டிண்ட் கம் எஸ்டர்டே)
22. நான் தேநீர் அருந்துவதில்லை	I don't take tea. (ஐ டோண்ட் டேக் டீ)
23. பெண்களை கேலி செய்யாதே	Don't tease the girls. (டோண்ட் டீஸ் த கேர்ல்ஸ்)
24. என் உடல்நிலை சரியில்லை	I'm not well. (ஐ ஆம் நாட் வெல்)
25. அவள் கடுமையாக உழைக்கவில்லை	She's not working hard. (ஷீஸ் நாட் வொர்க்கிங் ஹார்ட்)
26. எனக்கு வரும் உத்தேசம் இல்லை	I don't intend to come. (ஐ டோண்ட் இன்டென்ட் டு கம்)
27. அவர்களுக்கு பசித்திருக்கவில்லை	They were not hungry.(தே வேர் நாட் ஹங்ரி)
28. அவளிடம் நல்ல ஆடைகள் இல்லை	She hasn't a good dress. (ஷீ ஹேஸண்ட் குட் டிரஸ்)
29. எனக்கு அண்ணன் இல்லை	I don't have an elder brother. (ஐ டோண்ட் ஹேவ் ஏன் எல்டர் பிரதர்)
30. என்னிடம் வளர்ப்பு நாய் இல்லை.	We didn't have a pet dog. (ஐ டோண்ட் ஹேவ் அ பெட் டாக்)
31. இப்பொழுது அவள் வேலை செய்யமாட்டாள்	Now she doesn't work here. (நௌ ஷி டஸண்ட் ஓர்க் ஹியர்)
32. எனக்கு அவனைத் தெரியாது.	I don't know him. (ஐ டோண்ட் நோ ஹிம்)
33. நீ இப்பொழுது போகமுடியாது	You may not leave now. (யூ மே நாட் லீவ் நௌ)
34. எனக்கு எப்படி நீந்துவது என்று தெரியாது.	I don't know how to swim. (ஐ டோண்ட் நோ ஹவ் டு ஸ்விம்)
35. அவர்களுக்கு நீ சொல்லியிருக்கக்கூடாது	You ought not to tell them. (யூ ஆட் நாட் டு டெல் ஹிம்)
36. அவனுக்கு இங்கு வர தைரியமில்லை.	He daren't to come here. (ஹி டேரண்ட் டு கம் ஹியர்)
37. நீ ஷேக்ஸ்பியர் படித்ததில்லை	You haven't read Shakespeare. (யூ ஹேவண்ட் ரீட் ஷேக்ஸ்பியர்)

38. உன்னிடம் அதிகம் பணம் இல்லை. அப்படித்தானே?	You don't have a lot of money, have you ? (யூ டோண்ட் ஹேவ் ஏ லாட் ஆப் மணி, ஹேவ் யூ?)
39. நான் உண்மையை பேசவில்லைதானே?	I am not speaking the truth, am I? (ஐ ஆம் நாட் ஸ்பீக்கிங் த ட்ரூத் ஆம் ஐ?)
40. ஏன் நீ இன்னும் சாப்பிடவில்லையா?	Haven't you taken your food yet? (ஹேவண்ட் யூ டேகன் யுவர் புஃட் யெட்?)
41. எனக்கு நன்றாகத்தெரியும் அவன் வரமாட்டான்.	I'm dead sure he won't come. (ஐ அம் டெட் ஷுர் ஹீ வோண்ட் நாட் கம்)
42. நீ அம்மா-அப்பா பேச்சை தட்டக்கூடாது.	You ought not to disobey your parents. (யூ ஆட் நாட் டு டிஸ் ஒபே யுவர் பேரன்ட்)
43. இப்பொழுது நீ போகக்கூடாது.	Now, you shouldn't go. (நௌ யூ ஷுட்ண்ட் கோ)
44. தேசம் ஒரு நாளில் உருவாவதில்லை	Nations aren't built in a day. (நேஷன்ஸ் ஆரிண்ட் பில்ட் இன் ஏ டே)
45. அங்கே நீ போக வேண்டிய அவசியம் இல்லை.	You need not go there. (யூ நீட் நாட் கோ தர்)
46. அவனுக்குப் பணத்தேவை இல்லை.	He does not need money. (ஹி டஸ் நாட் நீட் மணி)
47. நீ இதை செய்திருக்கக்கூடாது.	You should not have done it. (யூ ஷுட் நாட் ஹேவ் டன் இட்)

Points to Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1- ஆங்கிலத்தில் சில சொற்றொடர்களில் சில வார்த்தைகள் சுருக்க வடிவத்தில் பயன்படுத்தப்படும். உதாரணம்:-I am, I'm (அயம்), I do not, I don't (ஐ டோண்ட்); you have not, you haven't (யூ ஹேவன்ட்); I will not, I won't (ஐ ஒன்ட்) முதலியவை.

2- வினா வாக்கியங்களில் am not, aren't (ஆரிண்ட்) ஆகிவிடும்.

3. Is மற்றும் has ஆகியவற்றின் சுருக்க வடிவம் ஒன்றுபோல இருக்கும்-He is = He's; He has = He's இதேப்போல had மற்றும் would உடைய சுருக்க வடிவமும் ஒன்றுபோல இருக்கும் - I had =I'd; I would=I'd.

Note- வார்த்தை சுருக்கத்தின் விரிவை 8-வது பாடத்தில் விரிவாகப் படிக்கலாம்

Exercise for Revision
பயிற்சிக்காக

கீழே தரப்பட்டிருக்கும் வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.

1. He is a good boy.
2. He lived many years in India.
3. He is tall to his age.
4. They are reading together.
5. I am ready to go.
6. He was on leave.
7. He’s come by bus.
8. You’re a bad boy.
9. He had done his work.
10. Jyoti was present in the class.
11. You must go now.
12. Rakesh should finish his work.
13. He made many mistakes.
14. I would oblige you.
15. He can lend you a book.
16. We live to eat.
17. He is making a fool of you.
18. Ashok laughs loudly.
19. Show me your teeth.
20. The sun has risen.

LESSON SEVEN

பாடம் ஏழு

Question Form (கொஸ்டியன் ஃபார்ம்)
வினா வடிவ வாக்கியம்

உடன்பாட்டு (affirmative) வாக்கியத்தைத் தவிர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வடிவம் வினா வாக்கியமாகும்.

வினா வாக்கியம் வினாவாக மட்டுமில்லாமல் விடை வடிவிலும் வரும். இவை பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1.**Yes-no type** ஆமாம். இல்லை வகை
2. **Wh-group Wh** வகை
3. **Alternative type** மாற்றுக் கேள்வி வகை
4. **Tag-type** ஒட்டுக் கேள்வி வகை
5.**Declarative type** அறிவிப்பு வகை

கேள்வி கேட்பவர் தங்களுடைய வினாவின் மூலம் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவும், சந்தேகத்தைக் கேட்கவும், அதை பயன்படுத்துகிறார்கள். அதற்கு பதிலாக விஷயத்தை தெளிவுபடுத்தவும், சந்தேகத்தை போக்கவும் பதில் பயன்படுகிறது. சில இடங்களில் வினா வாக்கியமாக இருந்தாலும் அது பதிலாகவோ அல்லது உணர்வுகளின் வெளிப்பாடாகவோ அமைந்து விடுகிறது. கேள்விபோல தோன்றினாலும் அது இயல்பு வாக்கியமாக, அதாவது உடன்பாட்டு வாக்கியமாக அமைந்துவிடும். உதாரணமாக

I would like a cup of tea (ஐ வுட் லைக் எ கப் ஆஃப் டீ) ஒரு கோப்பை தேநீர் அருந்த விரும்புகிறேன்.

ஒரு விதத்தில் இந்த வாக்கியம் உடன்பாட்டு வாக்கியம். ஏனென்றால் இதில் ஒரு விஷயத்தின் முழுமை தென்படுகிறது. மற்றொரு விதத்தில் இது கட்டளையாக உள்ளது. ஏனெனில் தேநீர் தயாரிப்பதற்கான கட்டளையும், வேண்டுதலும் இதில் உள்ளது. மூன்றாவது விதத்தில் இந்த வாக்கியம் விருப்பத்தின் வெளிப்பாடாக உள்ளது. இதுபோன்ற ஒரு வாக்கியம்.

What on earth are you doing? (வாட் ஆன் எர்த் ஆர் யூ டூயிங்) நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

இது ஒரு பக்கம் நல்ல கேள்வியாகவும் பின் ஆச்சரியமாகவும் உள்ளது. நீ என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்? (கேள்வி) மறுபக்கம் ஆச்சரியம். இது கேள்வியின் மூலம் ஒருவர் செய்து கொண்டிருக்கும் செயலில் ஆச்சரியத்தை வெளிப்படுத்துவதாகும். டேய் தம்பி...! நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

ஒரு கேள்வி வாக்கியத்தை வேறுபடுத்த அது கேட்கப்படும் சந்தர்ப்பம், கேட்பவருடைய எண்ணம். அதற்கு பதிலாக வரும் வாக்கியத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. இப்படியாக கேள்வி வாக்கியங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1.Yes-no type µ இந்த கேள்விகளுக்கு விடையாக 'ஆம்' அல்லது 'இல்லை' வரும். கேட்பவர் இதை எளிதில் புரிந்துகொள்ளும் விதமாக அமையும். கேள்விகளின் ஆரம்பத்தில் ஒரு துணை வினைச்சொல் (Helping verb) வரும்.

1. Is he writing a letter?	(இஸ் ஹீ ரைட்டிங் எ லெட்டர்)	அவன் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறானா?
2. Has the train left?	(ஹேஸ் த டிரெயின் லெஃப்ட்)	ரயில் போய்விட்டதா?
3. Was he defeated?	(வாஸ் ஹீ டிபிஃடட்)	அவன் தோற்றுவிட்டானா?
4. Did he come?	(டிட் ஹீ கம்?)	அவன் வந்துவிட்டானா?
5. Will you wait for me?	(வில் யூ வெயிட் பஃர் மீ?)	நீங்கள் எனக்காக காத்திருப்பீர்களா?
6. May I come in?	(மே ஐ கம் இன்?)	நான் உள்ளே வரலாமா?
7. Should I go?	(ஷுட் ஐ கோ)	நான் போகலாமா?
8. Are they coming?	(ஆர் தே கம்மிங்)	அவர்கள் வருகிறார்களா?

9. Is it raining?	(இஸ் இட் ரெயினிங்)	மழை பொழிகிறதா?
10. Do you like the pen?	(டு யூ லைக் த பென்)	உனக்கு பேனா பிடிக்குமா?
11. Does he come daily?	(டஸ் ஹி கம் டெய்லி)	அவன் தினமும் வருவானா?

Yes-no விதமான கேள்விகள் positive அல்லது negative இரு வகையிலும் இருக்கும். ஆம் என்ற வார்த்தையை பதிலாக கொண்டிருக்கும் கேள்விகள் உடன்பாட்டு கேள்வி எனப்படும்.

Question- Did anyone call yesterday? நேற்று யாராவது என்னை அழைத்தார்களா?
(டிட் எனி ஒன் கால் எஸ்டர்டே?)

Answer- Yes, someone called yesterday. ஆம். நேற்று யாரோ அழைத்தார்கள்.
(யெஸ் சம் ஒன் கால்ட் யெஸ்டர்டே)

Question- Has the train left?

Answer- Yes, the train has left.

Question- Do you live somewhere near Ajmeri gate?

Answer- Yes, I live somewhere near there.

இப்பொழுது இந்த கேள்விகளை பாருங்கள். இதில் இல்லை என்ற பதில் வரும். இது எதிர்மறை கேள்வி வாக்கியங்கள்

Question-Can’t you help me?

Answer-No, I can’t.

Question-Don’t you believe me?

Answer-No, I don’t believe you.

2- Wh-group µ இவ்வகை கேள்விகளின் ஆரம்பத்தில் wh வரும் -Who / which / what I whose / when / how அல்லது whom / where / why

1. Who opened my letter?	(ஹூ ஓபன்டு மை லெட்டர்?)	யார் என் கடிதத்தை பிரித்தது?
2. Who is coming?	(ஹூ இஸ் கம்மிங்?)	யார் வருவது?
3. Which books do you like?	(விச் புக்ஸ் டு யூ லைக்?)	எந்த புத்தகங்கள் உனக்குப் பிடிக்கும்?
4. What's your opinion?	(வாட்ஸ் யுவர் ஒபினியன்?)	உன்னுடைய கருத்து என்ன?
5. When will you return?	(வென் வில் யூ ரிட்டர்ன்?)	எப்பொழுது திரும்புவாய்?
6. Where shall I stay there?	(வேர் ஷல் ஐ ஸ்டே தேர்?)	அங்கு நான் எங்கே தங்குவது?
7. Why are they always late?	(ஒய் ஆர் தே ஆல்வேஸ் லேட்?)	ஏன் அவர்கள் எப்பொழுதும் தாமதம்?
8. Whom did you stay with?	(ஹூம் டிட் யூ ஸ்டே வித்?)	யாரோடு நீ தங்கி இருக்கிறாய்?
9. How did you mend it?	(ஹௌ டிட் யூ மென்ட் இட்?)	இதை எப்படி செய்தாய்?
10. How much do you want?	(ஹௌ மச் டூ யூ வான்ட்?)	உனக்கு எவ்வளவு வேண்டும்?
11. Who is there?	(ஹூ இஸ் தேர்?)	யார் அங்கே?
12. Whom do you want?	(ஹூம் டு யூ வான்ட்?)	உனக்கு யார் வேண்டும்?

இதுபோல கேள்வி வார்த்தைகள் (question word) முதலில் வரும். அடுத்து துணை வினைச்சொல் வரும். அடுத்து எழுவாய் வரும்.

When will you return? இங்கு when வார்த்தை முதலிலும் பின் துணை வினைச்சொல் will பிறகு எழுவாய் you வருகிறது.

Who/whom/whose முதலியவற்றை எழுவாய் அல்லாத சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகிறோம் what மற்றும் which நபர் அல்லது பொருளுக்காக இரண்டிற்காகவும் பயன்படுத்துகிறோம்.

What girls
Which books
do you like?

வினா வார்த்தையில் Preposition (முன்னிடச் சொல்) வரும்பொழுது வாக்கியம் இவ்வாறு அமைய வேண்டும்.

With whom do you live?- தவறானது
Whom do you live with?- சரியானது

3- Alternative-type மாற்றுக்கேள்வி வகை µ இந்த முறையில் கேள்வி கேட்பவர் இரண்டு அல்லது அதற்குமேல் பதில்களை உள்ளடக்கி கேட்பார். பதிலாக ஏதேனும் ஒன்றை தேர்வு செய்தால் போதும்.

1. Would you like milk or coffee? — உங்களுக்கு காபி பிடிக்குமா அல்லது தேநீரா?
(உட் யூ லைக் மில்க் ஆர் காபி?)

2. Which balloon do you choose, green, red, yellow or blue? — எந்த பலூன் தேர்வு செய்திருக்கிறீர்கள்? பச்சையா, சிகப்பா, மஞ்சளா அல்லது நீலமா?
(விச் பலூன் டு யூ சூஸ் கிரீன், ரெட், எல்லோ ஆர் ப்ளூ?)

3. Shall we go by bus, taxi or train? — நாம் பஸ்ஸில் போகலாமா, டாக்ஸியா அல்லது ரயிலிலா?
(ஷால் வீ கோ பை பஸ், டாக்ஸி ஆர் ட்ரெயின்?)

4. Which book do you choose, this or that or neither? — உங்களுக்கு எந்த புத்தகம் பிடிக்கும் இதுவா, அதுவா அல்லது இரண்டும் இல்லையா?
(விச் புக் டு யூ சூஸ் திஸ் ஆர் தட் ஆர் நெய்தர்?)

5. Are you coming or not? — நீங்கள் வருகிறீர்களா, இல்லையா?
(ஆர் யூ கம்மிங் ஆர் நாட்?)

6. Did India or Pakistan win the match? — மேட்சில் யார் வென்றது இந்தியாவா, பாகிஸ்தானா?
(டிட் இண்டியா ஆர் பாகிஸ்தான் வின் த மேட்ச்?)

7. Did you do it or your sister? — இதை நீ செய்தாயா? உன் தங்கையா?
(டிட் யூ டூ இட் ஆர் யுவர்ஸ் சிஸ்டர்?)

4. Tag-type ஒட்டுக் கெள்வி வகை µ இந்த வாக்கியத்தின் முடிவில், கேள்வி தனியாக இணைக்கப்பட்டிருக்கும்.

1. The train has already gone, hasn't it? — ரயில் ஏற்கனவே புறப்பட்டுவிட்டது, இல்லையா?
(த ட்ரெயின் ஏஸ் ஆல்ரெடி கான், ஹேசன்ட் இட்?)

2. You aren't going to leave us, are you? — நீ எங்களை விடப்போவதில்லை, அப்படித்தானே?
(யூ ஆரெண்ட் கோயிங் டு லீவ் அஸ் ஆர் யூ?)

3. I have met you before, have not I? — இதற்கு முன் உன்னை சந்தித்து இருக்கிறேன், இல்லையா?
(ஐ ஹேவ் மெட் யூ பிபோர், ஹேவ் நாட் ஐ?)

4. He knows you, doesn't he? — அவனுக்கு உன்னை தெரியும், இல்லையா?
(ஹீ நோஸ் யூ, டஸண்ட் ஹீ?)

5. He likes the girl, doesn't he? — அவனுக்கு அந்தப் பெண்ணை பிடிக்கும்.
(ஹீ லைக்ஸ் தி கேர்ள், டஸண்ட் ஹி?)

6. He didn't live long here, did he? — அவன் இங்கு அதிகநேரம் இருக்கவில்லை, இருந்தானா?
(ஹீ டிடண்ட் லிவ் லாங் ஹியர், டிட் ஹி?)

5. Declarative-type & அறிவிப்பு வகை வாக்கியங்கள், உடன்பாட்டு வாக்கியங்கள் போலவே தோன்றும். இதில் உள்ள வேறுபாடு, முடிவில் வரும் வார்த்தை சற்று உயர்த்தி கேட்கப்படும்.

1. You have got the tickets? — உங்களுக்கு டிக்கெட் கிடைத்து விட்டதா?
(யூ ஹேவ் காட் த டிக்கெட்ஸ்?)

2. You have told him in clear terms? — நீ அவனிடம் தெளிவாக கூறி விட்டாயா?
(யூ ஹேவ் டோல்ட் ஹிம் இன் கிளியர் டெர்ம்ஸ்?)

3. She would be already there, I suppose? — அவள் ஏற்கனவே அங்கே இருப்பான், சரி தானே?
(ஷீ உட்பி ல்ரெடி தேர் ஐ சபோஸ்?)

4. There is something to eat? — சாப்பிட ஏதாவது இருக்கிறதா?
(தேர் இஸ் சம்திங் டு ஈட்?)

5. You didn't complete the answer. — நீ பதிலை முடிக்கவில்லையே??
(யூ டிடிண்ட் கம்பிளீட் த ஆன்சர்?)

6. You realize your mistake now? — உன்னுடைய தவறை இப்போது உணர்ந்துவிட்டாயா?
(யூ ரியலைஸ் யுவர் மிஸ்டேக் நௌ?)

7. You will not leave me in the lurch? — நீ கஷ்டத்தில் என்னை கைவிடமாட்டாய், இல்லையா?
(யூ வில் நாட் லீவ் மீ இன் த லர்ச்?)

8. I have told you the secret? — நான் உனக்கு ரகசியத்தை சொல்லிவிட்டேனா?
(ஐ ஹேவ் டோல்ட் யூ த சீக்ரெட்?)

9. You drink sometimes? — எப்பொழுதாவது குடிக்கிறாயா?
(யூ டிரிங்க் சம்டைம்ஸ்?)

10. She wants my help? — அவளுக்கு என்னுடைய உதவி வேண்டுமா?
(ஷீ வாண்ட் மை ஹெல்ப்?)

11. You are all ready now to fire? — நீங்கள் எல்லோரும் சுடத்தயாராக இருக்கிறீர்களா?
(யூ ஆர் ஆல் ரெடி நௌ டு ஃபையர்?)

Points to Remember
நினைவில் கொள்ள வேண்டியவை

1- ஒட்டு முறை கேள்விகளில் செய்பவர் பிரதிப் பெயர்ச் சொல்லாக இரண்டுமுறை வரும்- I havenÕt met you, have I? இங்கு பிரதிப் பெயர்ச்சொல் இருமுறை வந்திருக்கிறது.

2. கூற்று உடன்பாட்டு வாக்கியமாக இருந்தால் (Positive) அதன் இணைப்பு தொடர் (Tag) எதிர்மறையாகவும் கூற்று எதிர்மறையாக இருந்தால் Tag உடன்பாட்டு கூற்றாகவும் இருக்கும்.-He likes the girls, doesn’t he? இதில் கூற்று He likes the girl உடன்பாட்டு வாக்கியமாக இருந்தால்-doesn’t he? எதிர்மறையாக இருக்கும்.

I am not willing to go, am I? இந்த கூற்று எதிர்மறை யாகவும். I am not willing to go மற்றும் Tag உடன்பாட்டுக் கூற்றாக இருக்கும்.

Note: இதில் இரண்டு வாக்கியம் உள்ளது. ஒன்று கூற்று, மற்றொன்று கேள்வி.

He is not going, is he?

1 2

3- who/whom/whose இது மனிதர்களுக்கு மட்டும் பயன்படும். Which/what மனிதர்கள் மற்றும் பொருள்கள் இரண்டுக்கும் பயன்படுகிறது.

4- Where இடங்களை அறிவிக்கும். when சமயத்தையும், how எப்படி என்பதையும், why காரணத்தையும் அறிவிக்கும்.

Where did you see him?	I saw him (where?) at the place he was sleeping *(place)*.
When did you see him?	I saw him (when?) at noon *(time)*.
How did you see him?	I saw him (how) by going there *(manner)*.
Why did you see him?	Because I wanted (why) to meet him *(reason)*.

Exercise for Revision
பயிற்சிக்காக

I. இந்த வாக்கியங்களை கேள்விகளாக மாற்றுக.

1. The bus is coming. 2. She must leave now. 3. He can do this exercise. 4. The students are writing in their copybooks. 5. They are sisters. 6. They both are brothers. 7. I can see you in the evening. 8. Suresh and Shyam both are absent from the class. 9. There was a map on the wall. 10. There were two men on the road. 11. They will wait for us outside. 12. He will go by plane tomorrow. 13. He will feel much better now. 14. He has to go to office. 15. Rita had to leave at noon. 16. You will come back. 17. It is raining there.

II. கேள்வி வார்த்தைகளை வார்த்தையில் பயன்படுத்துக

Where / when / who / whom / whose / why / what and how. உதாரணம் -how-How are you?

III. கீழே தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு ஆம், இல்லை என்ற பதில் தாருங்கள்.

1. Has he come? 2. Are you ready to go? 3. Did you wait for Radha? 4. May I come in? 5. Are they coming in a bus? 6. Do you like Lucknow? 7. Did Gita call on me? 8. Do you come from Banaras? 9. Were you present when the chief guest came? 10. How is Meena now? 11. Will you be there when I call on you? 12. Will they help us in time? 13. Do you know his home address? 14. Is it right not to disclose this to him? 15. Ought not he obey his parents? 16. Would Vimla come? 17. Is not Vinod dirty? 18. Aren’t We right?

IV. இந்த வாக்கியங்களில் இருந்து கேள்விகளை உருவாக்கவும்

உதாரணம் - They made him the king last year. who / whom /what / when

இதைக்கொண்டு மேலும் நான்கு கேள்விகளை எழுதுக-

Who made him the king last year?
Whom did they make the king last year?
What did they make him last year?
When did they make him the king?

வாக்கியங்கள்

The public elected him president then.
They presented him a medal last year.
They will construct a school building for the students next year.
Girish gave her sister a beautiful sari on Diwali.
I shall visit the Taj with you next month.

LESSON EIGHT

பாடம் எட்டு

Imperative Sentences

(இம்பேரடீவ் ஸென்டன்ஸஸ்)

கட்டளை வாக்கியங்கள்

உடன்பாட்டு, எதிர்மறை மற்றும் கேள்விக்குப் பிறகு முக்கியத்துவம் வாய்ந்தது கட்டளை வாக்கியங்கள் இந்த வாக்கியங்கள் வழி நடத்துதல், கட்டளை, வேண்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த வாக்கியங்களை கீழ் கண்டுள்ளவாறு பிரிக்கலாம்.

1. எழுவாய்- அற்ற கட்டளை (Commands without subjects)
2. எழுவாயுடன் கட்டளை (Commands with Subject)
3. லெட் (Let) உடன் கட்டளை (Command with Let)
4. எதிர்மறை கட்டளை (Negative commands) and
5. தூண்டும் கட்டளை (Persuasive Commands)

1. எழுவாய்- அற்ற கட்டளை (*Command without Subject*)

இதில் எழுவாய் இருக்காது. செயல்பாட்டு வினை (passive voice) இருக்காது. துணைவினைச் சொற்களும் அற்று மாடல் (modal) என்று சொல்லப்படுகின்ற -can, will, shall, could should, would முதலியவற்றின் பிரயோகம் இருக்கும். மற்றபடி தீர்மானமான வாக்கியங்கள்போல் இருக்கும்.

Go now. (கோ நௌ)	இப்போழுதே போ
Be reasonable. (பீ ரீஸனபிள்)	புரிந்து செயல்படு
Come here. (கம் ஹியர்)	இங்கே வா
Open the window. (ஓபன் த வின்டோ)	ஜன்னலைத் திற

இந்த வாக்கியங்களுடன் ப்ளீஸ் சேர்த்து. வாக்கியத்தை இன்னும் அழகாக மாற்றலாம்.

Please go now.	ப்ளீஸ் கோ நௌ.
Be reasonable, please.	பீ ரீசனபிள், ப்ளீஸ்.
Please, come here.	ப்ளீஸ், கம் ஹியர்.
Open the window, please.	ஒப்பன் த விண்டோ, ப்ளீஸ்.

இதன் மூலம் வாக்கியத்தை இன்னும் அழகாக முறையாக மாற்ற முடியும்.சாதாரணமாக இது பார்க்க வினா வாக்கியமாகவே காணப்படும்.

Will you please go now?

Will you be reasonable please?

I would wonder whether you would mind coming here?

Would you mind opening the window?

2. எழுவாயுடன் கட்டளை (*Commands with subject*)

எழுவாயுடனான கட்டளை வாக்கியங்களில் பயனிலை பிரதிப்பெயர்ச் சொல்-You (நீ/நீங்கள்) ஒரு விதத்தில் உள்ளடங்கி இருக்கும். சில கட்டளை வாக்கியங்களுடன் எழுவாய் தோன்றும்.

You be quiet. (யூ பி கொய்ட்)		நீங்கள் அமைதியாக இருங்கள்.
You mind your own business.	(யூ மைன்ட் யூவர் ஒன் பிஸினஸ்)	நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்

இந்த வாக்கியங்களுடைய தொனி சற்று அதிகாரத்துடன் இருக்கும். இதனுடன் ப்ளீஸ் சேர்த்தால் சற்று மென்மையான வாக்கியங்களாக மாறிவிடும்.

You please be quiet.

You please mind your own business.

படர்கை எழுவாயுடன் கட்டளை வாக்கியங்கள்:

Somebody shut the door. (சம்படி ஷட் த டோர்) யாராவது கதவை மூடிவிடுங்கள்

Everybody stand up. (எவ்ரிபடி ஸ்டான்ட்அப்) எல்லோரும் எழுந்து நில்லுங்கள்

Govind and Gita stand over there. (கோவிந்த் அண்ட் கீதா ஸ்டாண்ட் ஓவர் தேர்) கோவிந்தும், கீதாவும் அங்கே நில்லுங்கள்.

3. லெட் (Let) உடனான கட்டளை (*Command with let*)

Let டுடன் I/we போன்ற தன்மை மற்றும் *he/she/they* போன்ற படர்க்கை உடனான வாக்கியங்கள் வரும். ஆனால் முன்னிலை வார்த்தைகள் வராது.

Let us work hard. (லெட் அஸ் வொர்க் ஹார்டு) வாருங்கள் கடுமையாக உழைப்போம்

Let me have a look. (லெட் மீ ஹேவ் ஏ லுக்) என்னை பார்க்க விடு

Let each of them decide for himself. (லெட் ஈச் ப் தெம் டிசைட் ஃபர் ஹிம்செல்ப்) அவரவர் விருப்பப்படி முடிவெடுக்க விடு.

Let us enjoy ourselves. (லெட் அஸ் என்ஜாய் அவர்ஸெல்வ்ஸ்) வாருங்கள் நாம் மகிழ்ந்திருப்போம்.

4. எதிர்மறை கட்டளை (*Negative commands*)

கட்டளை வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்ற, தொடக்கத்தில் don’t (டோண்ட்) ஐ பயன்படுத்த வேண்டும்.

Don’t open the door / Don’t you open the door.
Don’t anyone open the door.
Don’t let us open the door / Let us not open the door.

5. தூண்டும் கட்டளை (*Persuasive commands*)

இந்த வாக்கியத்தில் கட்டளையிடுபவர் மற்றவரை தன் கட்டளையை ஏற்கத் தூண்டும் வகையில் அமையும். மற்றவரை செயல்பட தூண்டுகிறார். முக்கிய வினையுடன் do சேர்த்து இந்த வாக்கியத்தை அமைக்கவேண்டும்

Do have some more tea. (டூ ஹேவ் சம் மோர் டீ) இன்னும் கொஞ்சம் தேனீர் வேண்டுமா?

Do let us go to the theatre. (டூ லெட் ஸ் கோ டு த தியேட்டர்) நாம் அரங்குக்குச் செல்லவேண்டும்.

Do this in time. (டூ திஸ் இன் டைம்) இதை நேரத்தோடு செய்துவிடு.

6. ஆச்சரிய வாக்கியம் (*Exclamation*)

பார்க்க இது கேள்வி வாக்கியம்போலத் தோன்றும். Wh -இல் துவங்கும். ஆனால் இதன் முடிவில் கேள்விக்குறி இல்லாமல் ஆச்சர்ய குறி இருக்கும் (!)

How delightful it was! (ஹவ் டிலைட் புல் இட் வாஸ்!)	இது எத்தனை குதூகலமாக இருந்தது!.
What an enormous crowd! (வாட் அன் எனார்மஸ் க்ரௌட்!)	எத்தனை பெரிய கூட்டம்!
What a long queue! (வாட் ஏ லாங் க்யூ!)	எத்தனை நீளமான வரிசை!
How many years, I have waited for! (ஹௌ மெனி இயர்ஸ், ஐ ஹேவ் வெயிட்டட் ஃபார்!)	எத்தனை வருடமாக காத்திருக்கிறேன்!.
What a terrible fall! (வாட் ஏ டெரிபிள் ஃபால்!)	என்ன பயங்கரமான வீழ்ச்சி!

LESSON NINE

பாடம் ஒன்பது

Miscellaneous Model Sentences
(மிஸ்லேனியஸ் மாடல் சென்டன்ஸஸ்)
வித்தியாசமான வாக்கியங்கள்

1.	I write with pen. (அய் ரயிட் வித் பென்)	நான் பேனாவில் எழுதுகிறேன்.
2.	Write the address on the envelope. (ரைட் த அட்ரஸ் ஆன் த என்வலப்)	உரையின் மீது முகவரி எழுது
3.	Two plus two is four. (டூ ப்ளஸ் டூ இஸ் ஃபோர்)	இரண்டும் இரண்டும் நான்கு
4.	I have a beautiful wrist watch. (ஐ ஹேவ் எ ப்யூட்டிஃபுல் ரிஸ்ட் வாட்ச்)	என்னிடம் ஒரு அழகான கைக்கடிகாரம் உள்ளது.
5.	I sleep eight hours daily. (ஐ ஸ்லீப் எயிட் அவர்ஸ் டெய்லி)	நான் தினமும் எட்டு மணி நேரம் தூங்குகிறேன்.
6.	That bus goes to 31st Avenue. (தட் பஸ் கோஸ் டு 31-ஸ்ட் அவென்யூ)	அந்த பேருந்து 31-ம் அவென்யூவிற்கு போகிறது.
7.	There are many kinds of fruits. (தேர் ஆர் மெனி கைன்ட்ஸ் ஆப் ப்ரூட்ஸ்)	பழங்கள் பல வகைப்படும்.
8.	I like orange, banana, grapes and apple. (அய் லைக் ஆரஞ்ச், பனானா, கிரேப்ஸ் அண்டு ஆப்பிள்)	எனக்கு ஆரஞ்ச், வாழைப்பழம், திராட்சை, ஆப்பிள் பிடிக்கும்.
9.	I don't like pineapples, plums and peaches. (ஐ டோண்ட் லைக் பைனாப்பிள், ப்ளம் அண்ட் பீச்சஸ்)	எனக்கு அன்னாசி, ப்ளம், பீச்சஸ் பிடிக்காது.

10. Do you like to eat pears? (டு யூ லைக் டு ஈட் பியர்ஸ்) உனக்கு பேரிக்காய் சாப்பிட பிடிக்குமா?

11. Do you know what is the opposite of day? (டு யூ நோ வாட் இஸ் த ஆப்போசிட் ஆப் டே) உனக்கு பகலின் எதிர்ப்பதம் என்னவென்று தெரியுமா?

12. The opposite of the day is night. (த ஆப்போசிட் ஆப் த டே இஸ் நைட்) பகலின் எதிர்பதம் இரவு

13. Do people in India eat much fruit? (டு பீப்பல் இன் இண்டியா ஈட் மச் ப்ரூட்?) இந்திய நாட்டு மக்கள் நிறைய பழம் சாப்பிடுகிறார்களா?

14. What fruit do you eat for breakfast every morning? (வாட் ப்ரூட் டு யூ ஈட் ஃபார் பிரேக்பாஸ்ட் எவரிடே மார்னிங்?) தினமும் காலைச் சிற்றுண்டிக்கு என்ன பழம் சாப்பிடுகிறீர்கள்?

15. Are you writing a long letter to your sister? (ஆர் யூ ரைட்டிங் எ லாங் லெட்டர் டு யுவர் சிஸ்டர்) நீங்கள் உங்கள் சகோதரிக்கு நீண்ட கடிதம் எழுதுகிறீர்களா?

16. Didn't you hear this very sad news? (டின்'ட் யூ ஹியர் திஸ் வெரி சேட் நியூஸ்?) நீ இந்த துயர் செய்தியை கேட்கவில்லையா?

17. It is likely to rain, isn't it? (இட் இஸ் லைக்லீ டு ரெயின் இஸிண்ட் இட்?) மழை பொழியும் போல இருக்கிறது, இல்லையா?

18. You have read my novel, haven't you? (யூ ஹேவ் ரெட் மை நாவல், ஹேவண்ட் யூ?) நீங்கள் என் நாவலை படித்திருக்கிறீர்கள்.அப்படித்தானே?

19. You can't speak English so well, can you? (யூ கான்ட் ஸ்பீக் இங்கிலீஷ் சோ வெல் கேன்,யூ) நீ நன்றாக ஆங்கிலம் பேசமாட்டாய், இல்லையா?

20. This is an excellent book for learning English, isn't it? (திஸ் இஸ் அன் எக்ஸலென்ட் புக் ஃபார் லேர்னிங் இங்கிலீஷ் இஸண்ட் இட்?) ஆங்கிலம் கற்பதற்கு இது சிறந்த புத்தகம், இல்லையா?

21. What was she doing when you met her? (வாட் வாஸ் ஷீ டூயிங் வென் யூ மெட் ஹெர்?) நீ அவளை சந்திக்கும்போது அவள் என்ன செய்துக் கொண்டிருந்தாள்?

22. Are you vacating this house very soon? (ஆர் யூ வெகேட்டிங் திஸ் ஹவுஸ் வெரிசூன்?) நீங்கள் இந்த வீட்டை விரைவில் காலிசெய்து விடுவீர்களா?

23. Last night, Girish and Suresh made a plan to study together. (லாஸ்ட் நைட், கிரீஸ் அண்ட் சுரேஷ் மேட் எ ப்ளான் டு ஸ்டெடி டுகெதர்) நேற்று இரவு கிரீஷும், சுரேஷும் ஒன்றாக சேர்ந்து படிக்க திட்டமிட்டார்கள்.

24. Is this man putting on his shirt or taking it off? (இஸ் திஸ் மேன் புட்டிங் ஆன் இன் ஷர்ட் ஆர் டேக்கிங் இட் ஆஃப்?) அந்த மனிதன் சட்டையை போடுகிறானா அல்லது கழட்டுகிறானா?

25. Yesterday Mr. Kishan needed a camera so he came to me in the night.
(எஸ்டர்டே மிஸ்டர் கிஷன் நீடட் எ கேமரா, ஸோ ஹீ கேம் டு மீ இன் த நைட்)
நேற்று திரு.கிஷனுக்கு ஒரு கேமரா தேவைப்பட்டது. அதனால் அவர் இரவு என்னிடம் வந்தார்.

26. I am fed up with this dishonest servant.
(ஐ ஆம் ஃபெட் அப் வித் திஸ் டிஸ்ஹானஸ்ட் சர்வன்ட்)
இந்த நாணயமற்ற வேலைக்காரனால் நான் மிகவும் சலித்துவிட்டேன்.

27. Don't open the window, it is biting cold.
(டோண்ட் ஒபன் த வின்டோ, இட் இஸ் பைட்டிங் கோல்ட்)
ஜன்னலைத் திறக்காதே. கடுமையான பனி பொழிகிறது.

28. Please tell me what is the time by your watch?
(ப்ளீஸ் டெல் மீ வாட் இஸ் த டைம் பை யுவர் வாட்ச்)
தயவு செய்து உங்கள் கடிகாரத்தில் என்ன நேரம் என்று சொல்லுங்கள்.

29. Come, we are getting late.(கம் வீ ஆர் கெட்டிங் லேட்) வா, நமக்கு நேரமாகிறது.

30. Let us work hard, lest we should fail.
(லெட் அஸ் வொர்க் ஹார்ட், லெஸ்ட் வீ ஷுட் ஃபெயில்)
நாம் கடுமையாக உழைக்க வேண்டும். இல்லையென்றால் நாம் தோல்வியடைந்து விடுவோம்.

31. We enjoyed ourselves in Kashmir to our content.
(வீ என்ஜாய்டு அவர்ஸெல்வ்ஸ் இன் காஷ்மீர் டு அவர் கன்டென்ட்?)
நாங்கள் காஷ்மீரில் ஆசைத்தீர அனுபவித்தோம்.

32. You mind your own business and let me be alone.
(யூ மைன்ட் யுவர் ஒன் பிஸினஸ் அண்ட் லெட் மீ பீ அலோன்)
நீ உன்னுடைய வேலையைப் பார், என்னை தனியாக இருக்க விடு.

33. Would you mind coming over here?
(உட் யூ மைன்ட் கமிங் ஒவர் ஹியர்?)
நீங்கள் இங்கே வருவீர்களா?

34. How long have you been in this city?
(ஹௌ லாங் ஹேவ் யூ பீன் இன் திஸ் சிட்டி?)
நீங்கள் இந்த நகரத்தில் எவ்வளவு நாளாக இருக்கிறீர்கள்?

35. How much did the house cost you?
(ஹௌ மச் டிட் த ஹவுஸ் காஸ்ட் யூ?)
இந்த வீட்டிற்கு எவ்வளவு செலவானது?

36. What a beautiful starry night!
(வாட் எ ப்யூட்டிஃபுல் ஸ்டாரி நைட்?)
எத்தனை அழகான நட்சத்திர இரவு?

37. Oh God! I am undone! (ஓ காட்! ஐ ஆம் அன்டன்) அடக்கடவுளே! நான் நாசமாகிவிட்டேன்

38. How nice you acted! (ஹௌ நைஸ் யூ ஆக்டட்?) எவ்வளவு அழகாய் நடித்தாய்?

39. What a lonely sight to look at!
(வாட் ஏ லோன்லி சைட் டு லுக் அட்!)
பார்ப்பதற்கு எத்தனை அழகான காட்சி.!

LESSON TEN

பாடம் பத்து

Articles (ஆர்டிகல்ஸ்)
சுட்டு இடைச்சொற்கள்

வார்த்தைகளுக்கு முன் வரும் a, an மற்றும் the, இவைதான் சுட்டு இடைச்சொற்கள்

இந்த ஆர்டிகல்ஸ் இரண்டு விதம் உண்டு. definite (டெபனெட்) தீர்மானமானவை. Indefinite (இன்டெஃபனெட்) தீர்மானமற்றவை, a மற்றும் an தீர்மானமற்ற ஆர்டிகல்ஸ், "The" தீர்மானமானது.

இன்னது. இவர் என்று குறிப்பிட்டு தீர்மானமாக குறிப்பிடாத நிலையில் 'a', 'an' பயன்படுத்தப்படுகிறது.

a cow என்றால் ஏதோ ஒரு பசு.

The தீர்மானமான சுட்டிடைச் சொல், ஏனென்றால் இது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது பொருளைக் குறிப்பிடுகிறது.

He saw the cow. ஒரு குறிப்பிட்ட பசு.

சில எடுத்துக்காட்டுகள்

1. This is a mango. (திஸ் இஸ் ஏ மேங்கோ)	இது ஒரு மாங்காய்
2. Bring a book. (பிரிங் ஏ புக்)	ஒரு புத்தகத்தை கொண்டு வா
3. Here comes an elephant. (ஹியர் கம்ஸ் ஆன் எலிபென்ட்)	ஒரு யானை வருகிறது
4. Give me an apple. (கீவ் மீ ஆன் ஆப்பிள்)	எனக்கு ஓர் ஆப்பிள் கொடு
5. The dog watches the house. (த டாக் வாட்செஸ் த ஹவுஸ்)	நாய் வீட்டைக் காக்கிறது.

A, A மற்றும் an -னுடைய அர்த்தம் ஒன்று. இது எண்ணிக்கையிலான ஒருமைப் பெயர்சொல்லுடன்

சேர்ந்து வரும். A எப்பொழுதும் மெய்யெழுத்துடன் (consonant) ஆரம்பமாகும் சொற்களுடன் வரும்.

He saw a cow.	(ஹீ சா எ கவ்)
She is eating a cake.	(ஷீ இஸ் ஈட்டிங் எ கேக்)
There is a man on the road.	(தேர் இஸ் எ மேன் ஆன் த ரோட்)
Have you seen a monkey.	(ஹேவ் யூ ஸீன் எ மங்கி)
He is a man from Africa.	(ஹீ இஸ் எ மேன் ஃபரம் ஆஃப்ரிக்கா)

B. An -னுடைய பிரயோகம் உயிர்மெய் எழுத்துக்களில் (Vowel Sound) ஆரம்பமாகும் சொற்களில் ஒன்று என்ற பொருளில் வரும். ஆங்கிலத்தில் a, e, i, o, u என ஐந்து vowel எழுத்துக்கள் உள்ளன.

An elephant is a big animal.	(ஏன் எலிபெண்ட் இஸ் ஏ பிக் அனிமல்)
There is an egg in the basket.	(தேர் இஸ் அன் எக் இன் தி பாஸ்கெட்)
He works in an office.	(ஹீ வொர்க்ஸ் இன் ஏன் ஆபீஸ்)
Come after an hour.	(கம் ஆஃப்டர் அன் ஹவர்)
He gave the boy an apple.	(ஹீ கேவ் த பாய் ஆன் ஆப்பிள்)

“h” -இல் ஆரம்பிக்கும் சொற்கனில், ‘h’ ஒலிப்பின்றி இருக்கும் பட்சத்தில், அந்த சொற்களுடனும் an இணைந்து வரும்.

He will come in an hour. இங்கு hour -இல் h அமைதியாகவும், அவர் ஒலி பெற்றும் தோன்றுகிறது. இதேப்போன்று.

Ram is an honest person.(ராம் இஸ் அன் ஹானஸ்ட் பெர்சன்)	ராம் ஒரு நாணயமான ஆள்.
He is an honorary secretary.(ஹீ இஸ் அன் ஹானரரி செகரெடரி)	அவர் ஒரு மதிப்பிற்குரிய செயலாளர்.
He gets an honorarium.(ஹீ கெட்ஸ் அன் ஹானரரியம்)	அவருக்கு ஒரு மதிப்பூதியம் கிடைத்தது.

இத போன்று an ass/ an enemy / an inkpot / an orange / an umbrella முதலியவை. இந்த வார்தைகளின் ஆரம்பத்தில் vowel sound வருகிறது. ஆனால் a European / a uniform / a university முதலிய சொற்களும் (vowel)‘u’ மற்றும் ‘e’ -யுடன் ஆரம்பமாகிறது. ஆனால் அது அடுத்து வரும் மெய் எழுத்து சொல்லின் ஒலியைப் பெறுவதால் இவற்றுடன் ‘ஏ’ சேர்க்கப்படுகிறது. எ

யூரோபியன்/ எ யூனிபஃர்ம்/எ யூனியன்/ எ யுனிவர்சிடி இதே போன்று -a one-rupee note (ஏ ஒன் ருபீ நோட்) / such a one (சச் ஏ ஒன்) / a one-eyed man (ஏ ஒன் ஐய்டு மேன்)

C. ஆர்டிகல் 'the'-வின் பயன்பாடு கீழ்கண்டவாறு இருக்கும்

(*1*) ஏதேனும் ஒரு நிச்சயமான நபர், பொருள் அல்லது ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்த நபர். பொருள் முதலியவற்றுடன் சேர்க்கப்பட்டிருக்கும்.

The book I took from you is stolen. (த புக் ஐ டுக் ப்ரம் யூ இஸ் ஸ்டோலன்)	உன்னிடம் இருந்து நான் எடுத்துச்சென்ற புத்தகம் திருடு போய்விட்டது
I dislike the fellow.(ஐ டிஸ்லைக் த பெலோ)	எனக்கு அந்த நபரைப் பிடிக்காது.

(*2*) ஒரு மனிதனோ, பொருளோ தன்னை தன் இனத்தை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்ளும்போது 'த' பயன்படுகிறது.

The cow is a useful animal. (த கவ் இஸ் எ யூஸ்ஃபுல் அனிமல்)	பசு ஒரு உபயோகமான மிருகம்
The cat loves places. (த கேட் லௌஸ் ப்ளேஸஸ்)	பூனைக்கு இடங்களைப் பிடிக்கும்
The monkey is always full of mischief. (த மங்கீ இஸ் ஆல்வேஸ் ஃபுல் ஆப் மிஸ்சீப்)	குரங்கு எப்பொழுதும் குறும்பு நிறைந்தது.
The rose is a beautiful flower. (த ரோஸ் இஸ் ஏ ப்யூடிபுல் ப்ளவர்)	ரோஜா ஒரு அழகான மலர்

ஆனால் man மற்றும் woman உடன் இது சாதாரணப் பொருளில் தோன்றுவதால் the பயன்படுத்தப்படுவதில்லை.

Man is mortal. (மேன் இஸ் மோர்டல்)	மனிதன் மரணிக்கக்கூடியவன்
Woman is beautiful to look at. (வுமன் இஸ் ப்யூடிஃபுல் டு லுக் அட்)	பெண் பார்க்க அழகாக இருப்பவள்.

(*3*) நதி, கடல், மலை, ஊர்கள், பாலைவனம், தீவு கால்வாய் முதலியவற்றுடன் 'the' பயன்படுத்தப்படுகிறது.

The Himalayas are the highest mountains in the world	இமயமலை உலகிலேயே உயரமான மலை (த ஹிமாலயாஸ் ஆர் த ஹைஹெயெஸ்ட் மவுண்டெய்ன்ஸ் இன் த வேர்ல்டு)

ஆனால் Mount Everest என்று தான் சொல்கிறோம் the Mount Everest என்று சொல்வதில்லை)

The Ganga is a holy river.(த கங்கா இஸ் ஏ ஹோலி ரிவர்) கங்கை ஒரு புனிதமான நதி

The Dal Lake is in Kashmir.(த டால் லேக் இஸ் இன் காஷ்மீர்) தால் ஏரி காஷ்மீரில் உள்ளது

The Suez Canal is in Egypt.(த சூயெஸ் கேனல் இஸ் இன் இஜிப்ட்) சூயெஸ் கால்வாய் எகிப்தில் உள்ளது

The Indian Ocean (த இண்டியன் ஓஷியன்) இந்தியப் பெருங்கடல்

The Lacadive Islands (த லோகதீவ் ஐலேண்ட்ஸ்) இலட்சத்தீவுகள்

The Punjab (த பஞ்சாப்) The U.S.S.R. (த யூ.எஸ்.எஸ்.ஆர்.) The U.S.A. (த யூ.எஸ்.ஏ.)

The Punjab (த பஞ்சாப்)
The U.S.S.R. (த யூ.எஸ்.எஸ்.ஆர்)
The U.S.A. (த.யூ.எஸ்.எ)

(*4*) புனித நூல்கள், மஹா காவியம், பத்திரிகைகளுடன்

The Vedas (த வேதாஸ்), The Ramayan (த ராமாயண்), The Bible (த பைபிள்), The Indian Express (த இண்டியன் எக்ஸ்பிரஸ்), The Time Magazine (த டைம் மேகஸின்), The Kamayani (த காமாயணி)

(*5*) அலுவலக பிரிவுகள், நிறுவனங்கள், ஸ்தாபனங்கள், மந்திரி சபை, மாளிகைகள் முதலியவற்றுடன் சேர்த்து

The W.H.O. (டபிள்யூ ஹெச் ஓ), The Taj Express (த டாஜ் டெக்ஸ்பிரஸ்), The Department of Education (த டிபார்ட்மெண்ட் ஆப் எடயூகேஷன்), The Taj Mahal (த டாஜ்மஹால்)

(*6*) ஏதேனும் நாடு அல்லது மக்களுடன் சேர்த்து

The Indians are tolerant people. (த இண்டியன்ஸ் ஆர் டாலரண்ட் பீப்பிள்) இந்தியர்கள் சகிப்புத்தன்மை மிக்கவர்கள்

The English speak English.(த இங்கிலீஷ் ஸ்பீக் இங்கிலீஷ்) ஆங்கிலேயர்கள் ஆங்கிலம் பேசுவார்கள்

The French live in France.(த ப்ரென்ச் லீவ் இன் ப்ரான்ஸ்) பிரெஞ்சுக்காரர்கள் ப்ரான்சில் வாழ்கிறார்கள்

இதேப்போன்று. The Indians, The Mohammadans, The Turks, The Russians, The Jats. முதலியவை.

(*7*) இயற்கை பொருட்கள் அல்லது தன்னிடம் உள்ள ஏதேனும் ஒரு பொருள்

the Sun, the moon, the earth, the tea, the sky.

(*8*) ஒரு மனிதனின் சிறப்பைக் கூறுமிடத்தில்

The great Ashok (த க்ரேட் அஷோக்) **உயர்ந்த அஷோகர்**

The immortal Kalidas (த இமார்டல் காலிதாஸ்) **அமரகவி காளிதாஸ்**

(*9*) சிறப்பைக் கூறும் மூன்றாவது வடிவமான Superlative (சூப்பர்லேட்டீவ்) உடன்

Akbar is one of the greatest of kings. அக்பர் சிறந்த அரசர்களில் ஒருவர்

(அக்பர் இஸ் ஒன் ஆப் த க்ரேடஸ்ட் கிங்)

This is the best book available. இருக்கும் புத்தகங்களிலேயே சிறந்த புத்தகம்

(திஸ் இஸ் த பெட்ஸ் புக் அவெய்லபிள்)

(*10*) சிறப்பைக் கூறும் இரண்டாவது வடிவமான Comparative (கம்பெரெட்டீவ்) உடன்

The more the better. (த மோர் த பெட்டர்) எத்தனை அதிகமோ அத்தனை நல்லது.

The heavier the rains the greater the chances of floods. எவ்வளவு அதிகம் மழை வருமோ அவ்வளவு வெள்ளம் வரவாய்ப்புள்ளது

(த ஹெவியர் த ரெய்ன் த க்ரேட் த சான்சஸ் ஆப் ப்ளட்ஸ்)

The more you read the better you achieve. எவ்வளவு அதிகமாக படித்திருக்கிறாயோ, அத்தனை

(த மோர் யூ ரீட், த பெட்டர் யூ அச்சீவ்) அதிகம் வெற்றி கிடைக்கும்.

(*11*) குலத்தைக் குறிக்கும் பெயர்கள்

The Mughals, The Tughlaqs, The Nehrus, The Chauhans.

(*12*) மற்ற உதாரணங்கள்

the rich, the poor, the dead, the deaf, the weak, the living.

D. Omission of the article (ஒமிஷன் ஆப் த ஆர்மகல்) விடுபட்ட சுட்டெழுத்துக்கள்

1. பரவலான ஒரு இனத்தைப்பற்றி குறிக்கும்

Man is mortal. (மேன் இஸ் மார்டல்) மனிதன் மரணிக்கத்தக்கவன்

What kind of plant it is?(வாட் கைன்ட் ஆப் ப்ளான்ட் இட் இஸ்) இது எந்த வகை செடி ?

2. தாதுப்பொருட்களுடன்

Gold is a precious metal.(கோல்டு இஸ் ஏ ப்ரீஷியஷ் மெடல்) தங்கம் ஒரு விலையுயர்ந்த தாது

Iron is cheap. (அயர்ன் இஸ் சீப்) இரும்பு விலை மலிவானது.

3. Phrases (ஃபிரேசஸ்) சொல் நடையுடன்

I go to school on foot.(ஐ கோ டு ஸ்கூல் ஆன் பூஃட்) நான் பள்ளிக்கு நடந்து போகிறேன்

But, Mohan comes by bus.(பட் மோஹன் கம்ஸ் பை பஸ்) ஆனால் மோகன் பேருந்தில் வருகிறான்.

He travelled by ship.(ஹீ டிராவெல்ட் பை ஷிப்) அவன் கப்பலில் பயணித்தான்

4. Festivals (பெஸ்டிவல்ஸ்) பண்டிகைகளுடன் சேர்த்து-

Christmans comes in December. கிருஸ்துமஸ் டிசம்பர் மாதத்தில் வரும்

(கிறிஸ்மஸ் கம்ஸ் இன் டிசம்பர்)

Diwali is a festival of lamps. தீபாவளி ஒரு விளக்கு பண்டிகை

(திவாலி இஸ் ஏ பெஸ்டிவல் ஆப் லேம்ப்ஸ்)

ஆனால் The Diwali festival, The Christmas holidays என்று வரும்.

ஆனால் The Diwali festival, The Christmas holidays என்று வரும்

5. Abstract noun (அப்ஸ்ட்ராக்ட் நௌன்) பண்புப் பெயர் சொல்லுடன் சேர்த்து

Virue is its own reward.(வர்ட்ச்யூ இஸ் இட்ஸ் ஒன் ரிவார்ட்) நற்குணம் ஒரு சிறந்த பரிசு

Honesty is the best policy.(ஹானஸ்டி இஸ் த பெஸ்ட் பாலிசி)நாணயம் ஒரு சிறந்த லட்சியம்

Falsehood is not desirable.(பாஸ்வுட் இஸ் நாட் டிசைரபிள்)பொய் விரும்பத்தக்கதல்ல

6. Illness (இல்நெஸ்) வியாதிகளுடன் சேர்த்து

She has high fever.(ஷீ ஹேஸ் ஹை பீவர்) அவளுக்கு கடுமையான ஜுரம்.

He has been suffering from malaria. அவன் மலேரியாவில் பீடிக்கப்பட்டிருக்கிறான்.

(ஹீ ஹேஸ் பீன் சபரிங் ப்ஃரம் மலேரியா)

ஆனால் சாதாரண குறைகளுடன் ‘a’ பிரயோகப்படுத்தப்படுகிறது

I have a bad cold.(ஐ ஹேவ் ஏ பேட் கோல்ட்) எனக்கு ஜலதோஷம்.

She has cough.(ஷீ ஹேஸ் காஃப்) அவளுக்கு இருமல்.

Exercise for Revision
பயிற்சிக்காக

(1) காலியிடங்களில் ‘a’ அல்லது ‘an’ இட்டு நிரப்பவும்

....bus is coming. He teaches in.....university. Sohan is...honest man. I met.....European today. There was.....Indian with him. Teaching is.....good job. It is not.....easy work. Here is .....good book. He is...

new corner. Give me.....exercise book. This is.....pear and that is.....apple. He gave the boy.....orange. He is.....old friend of Shyam. This is.....very sweet fruit. Mr. John is.....English teacher. This is not.....difficult task. Give me.....one rupee coin. Copper is..... useful metal. He returned after.....hour.

(2) காலியிடங்களில் a/an/the இட்டு நிரப்பவும்

Do you see.....sun? Man has reached.....moon......earth is round. I saw.....man going on road. Suddenly.....begger came before.....bus. He is not.....honourable man. Honest man speaks.....truth. .....office will close after lunch. I saw. him..... year ago. Don't forget to take.....umbrella. Wanted...M.A. in history. Hindi is.....easy language. Latin is.....dead language. Ganges is.....sacred river. German defeated....French. Hindus are tolerant people. Have you seen.....owl? English is.....language of.....English. .....more your work.....better. He is.....best player. Which is .... highest mountain in in the world? Let us form.....union. What.....ugly sight!. He wants to be.....engineer. Speak one.....time. Arrange.....things on.....table. ..... moon is behind.....clouds. Let us meet.....principal. I can't carry such.....heavy load.

LESSON ELEVEN

பாடம் பதினொன்று

Some Auxiliary Verbs

(சம் ஆக்ஸிலியரி வெர்ப்ஸ்)

துணை வினைச்சொற்கள்

வினைச் சொற்கள் இரு வகைப்படும். ஒன்று *Principal Verb* (முதன்மை வினை) மற்றொன்று *Auxiliary Verb* (துணை வினை). முதன்மை வினை சுதந்திரமாகவும், முழுமையுடனும் இருக்கும். ஆனால் துணை வினை முதன்மை வினைக்கு துணையாக helping verb நிற்கும். எப்பொழுதாவது முக்கிய உருவிலும் பயன்படுத்தப்படும்.

I have a camera. They do their work. Do as tell you.

ஆங்கிலத்தில் 24 துணை வினைச் சொற்கள் உள்ளன.

Primary (ப்ரைமரி)	is, am, are, was, were	
	has, have, had	
	do, does, did	
Auxiliary Verbs (ஆக்ஸலரி வெர்ப்)	can	could
	may	might
	shall	should
Modal (மோடல்)	-	used to
	must	-
	ought	-Ṙ
	need	-
	dare	-Ṙ

இந்த துணை வினைச் சொற்கள், கேள்வி மற்றும் எதிர்மறை வாக்கியங்களைத் தவிர மற்ற வாக்கியங்களுடனும் பயன்படுத்தப்படுகிறது. இப்பொழுது நாம் Modal (மோடல்) என்று சொல்லகூடிய துணை வினைச் சொற்களைப் பார்ப்போம். இந்த வினைச் சொற்கள் புரிந்துக்கொள்ளவும், பயன்படுத்தவும் சற்று சிரமமாக இருக்கும். அதனால் இதை மிக கவனத்துடன் கற்கவும்

Can / Could

இந்த இரண்டு துணை வினைச் சொற்களும் பலம், இயலும், அனுமதி முதலியவற்றிற்காக பயன்படுகிறது. could, can-னுடைய இறந்தகாலம்

(i) இயலும் சக்தி µ

He can swim, but he cannot run fast. (ஹீ கேன் ஸ்விம், பட் ஹீ கெனாட் ரன் பாஸ்ட்)

He could speak English well, but could not write. (ஹீ கேன் ஸ்பீக் இங்கிலீஷ் வெல், பட் குட் நாட் ரைட்)

முதல் வாக்கியத்தின் பொருள்: அவனால் நீந்த முடியும், ஆனால் வேகமாக ஓட முடியாது. இரண்டாவது வாக்கியத்தின் பொருள்: அவனால் ஆங்கிலம் நன்றாக பேசமுடியும். ஆனால் எழுத முடியாது. இங்கு can ஒருவனுடைய செயல் திறமையையும் மற்றொன்று செயலின் இயலாமையையும் குறிக்கிறது.

(ii) அனுமதி µ

Can I smoke here? (கேன் ஐ ஸ்மோக் ஹியர்)?

Could I smoke here? (தட் ஐ ஸ்மோக் ஹியர்)?

இங்கு மனிதன் புகை பிடிக்க அனுமதி கேட்கிறான்.

கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம். 'may' முறையுடன் கேட்பது, 'can' அப்படி அல்ல.

May I come in? (மே ஐ தம் இன்) நான் உள்ளே வரலாமா?

(iii) **நிகழ்வுகள் µ**

Who cannot commit a mistake? (ஹூ கெனரட் கமீட் ஏ மிஸ்டேக்?)

யார் தவறு செய்வதில்லை?

பொருள். எல்லோரும் செய்ய முடியும். எல்லோரிடமும் நிகழக்கூடியது. இதேப்போன்று இந்த வாக்கியம்.

That could be my horse. (தட் குட் பீ மை ஹார்ஸ்)	இது, என்னுடைய குதிரையாக இருக்கலாம்.

May/might

May, இதனுடைய இறந்தகால வார்த்தைதான் might. இவை அனுமதி (pemission) மற்றும் வாய்ப்புகளை (possibility) வெளிப்படுத்துகின்றன. ஆனால் இவற்றின் பயன்பாடு தற்போது சாதாரண (formal) நடைமுறையாகிவிட்டது.

I may be granted leave. (ஐ மே பீ கிராாணடட் லீவ்) எனக்கு விடுமுறை அளிக்கப்படலாம்.

What you say may be right. (வாட் யூ ஸே மே பீ ரைட்) நீ சொல்வது சரியாக இருக்கலாம்

இப்பொழுது இந்த இரு வாக்கியங்களைப் பாருங்கள்

He may not be serious. (ஹீ மே நாட் பீ சீரியஸ்)

He can not be serious. (ஹீ கெனாட் பீ சீரியஸ்)

முதல் வாக்கியத்தின் பொருள்: அவன் ஆபத்தான நிலையில் இல்லை. ஆனால் ஒருவேளை அப்படி ஆகலாம். இரண்டாவதின் பொருள்: அவனுக்கு ஆபத்து வரவே வராது.

Shall/Should

Shall எனும் சொல் Simple future - இல் தன்மை மற்றும் We-யுடன் சேரும்.

I shall go tomorrow.

We shall do it.

ஒரு வேளை Shall- லுடைய பிரயோகம் முன்னிலை, படர்கை you, they, he, she-யுடன் ஏற்படுமானால் அந்த வார்த்தைக்கு பலமும், அழுத்தமும் ஏற்படும். She shall do it. இந்த வேலையை அவள் (கண்டிப்பாக) செய்வாள்

வினா வாக்கியத்தில் shall பிரயோகப்படுத்தப்படுமானால், அது வேண்டுகோளாகவும், அனுமதி கேட்பதாகவும் அமையும்.

Shall I do it for you? (ஷல் ஐ டு இட் ஃபர் யூ) இதை நான் உங்களுக்காக செய்யட்டுமா?

Should உடைய பிரயோகம் “வேண்டும்” என்ற எளிமையான பொருளில் இருக்கும். must மற்றும் ought உடைய அர்த்தமும் வேண்டும் என்பதாகும் ஆனால் Must இன் பின்னால் ஏதாவது சட்டம், கட்டளை அறிவுறுத்தல் இருந்தாலும் ought -இன் பின்னால் நீதி சம்பந்தப்பட்ட அரசியல் சக்தி இருக்குமானால் இதற்கு வேண்டும் என்ற பொருள் வரும்.

1. You should work hard. (யூ ஷுட் ஒர்க் ஹார்ட்)

2. You must obey the order. (யூ மஸ்ட் ஒபே த ஆர்டர்)

3. You ought to obey your father. (யூ ஒளத் டு ஒபே யுவர் ஃபாதர்)

முதல் வாக்கியத்தில் வேண்டும் என்பதன் சாதாரண பொருள் உள்ளது. கடினமாக உழைக்க வேண்டும்.
அப்படி இல்லாவிட்டால், எதுவும் நிர்பந்தமில்லை. அடுத்த வாக்கியத்தில் “வேண்டும்” என்பது நிபந்தனையாக கூறப்பட்டிருக்கிறது. நீ கட்டளையை ஏற்க வேண்டும். இல்லையெனில் தண்டிக்கப்படுவாய். கட்டளைக்கு கீழ்படுவதும், தண்டனையை ஏற்றுக்கொள்வதையும் தவிர வேறு வழி இல்லை. மூன்றாவது வாக்கியத்தில், சமூக தார்மீக கட்டுப்பாட்டை வலியுறுத்துவதாக இந்த “வேண்டும்” உள்ளது. நீ உன் தந்தைக்கு கீழ்படிய வேண்டும். இல்லையெனில் அதற்கு தனியாக எதுவும் தண்டனை இல்லை என்னாலும் சமூக அந்தஸ்திலிருந்து தள்ளப்படுவாய்.

Will/would

Simple future இல் முன்னிலை மற்றும் படர்கை you/he/she/it/they உடன் will சேர்த்து ஆசை, எண்ணம், ஏற்பு முதலியவறறை வெளிப்படுத்தலாம்.

1. Will you help yourself? (வில் யூ ஹெல்ப் யூவர் ஷெல்ப்)
2. We will not stay here any longer. (வீ வில் நாட் ஸ்டே ஹியர் எளி லாங்கர்)
3. He shall do it whatever you say. (ஹி ஷல் டு இட் வரட்எவர் யூ ஸே)
4. I will go come what may. (ஐ வில் கோ கம் வாட் மே)

“தன்மை” யுடன் will பிரயோகிக்கப்பட்டால் கூறப்பட்ட வார்த்தைக்கு அதிக பலம் தருவதாக இருக்கும். மேலே தரப்பட்டிருக்கும் கடைசி இரு வாக்கியங்களைப்போல.

1. He would read in the library instead of loitering in the streets. (ஹீ வுட் ரீட் இன் த லைப்ரரி இன்ஸ்டட் ஆப் லாயிட்ரிங் இன் த ஸ்ட்ரீட்) — அவன் தெருவில் சுற்றிக் கொண்டிருப்பதை விட நூலகத்துக்குச் சென்று படிக்கலாம்.

2. She will sit in her chair and knit all day long. (ஷீ வில் சிட் இன் ஹெர் சேர் அண்ட் நிட் ஆல் டே லாங்) — அவள் நாள் முழுவதும் நாற்காலியில் அமர்ந்து. பின்னிக் கொண்டிருப்பாள்

Would உடைய பிரயோகம் பண்பாடு உபசாரம் போன்றவற்றை வெளிப்படுத்த உதவும். Would you mind doing it? (வுட் யூ மைன்ட் டூயிங் இட்?) நீங்கள் இதை செய்வீர்களா?

Must / ought to / used to

Must “வேண்டும்” என பொருளில் பயன்படுத்தப்படுகிறது. அவசியம் மற்றும் நிர்பந்தத்தை குறிக்கும் சொல்லாகவும், நிகழ்காலத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இதில் வினா வாக்கியங்கள் எழுவதில்லை.

I must reach home by 10 o'clock. (அய் மஸ்ட் ரீச் ஹோம் பை டென் ஓ க்ளாக்) — எனக்கு 10 மணிக்குள் வீட்டிற்கு போயாக வேண்டும்.

You must join today. (யூ மஸ்ட் ஜாயின் டுடே) — நீ இன்றே சேரவேண்டும்

There must be a mistake. (தேர் மஸ்ட் பீ ஏ மிஸ்டேக்) — ஏதோ தவறு நிச்சயமாக நடந்திருக்க வேண்டும்.

Ought to உடைய பிரயேரகம் வேண்டும் என்ற அர்த்தத்தில் ஏற்படும். நீதி, சமுதாயக் கட்டுப்பாடு, உதவி முதலியவற்றிற்கு அது பயன்படுத்தப்படுகிறது. இதிலும் நிகழ்காலத்தில் மட்டும் வாக்கியங்கள் அமையும்.

You ought to look after your poor sister. (யூ ஆத் டு லுக் ஆப்டர் யுவர் புவர் சிஸ்டர்) — உன்னுடைய ஏழை சகோதரியை நீ பார்த்துக்கொள்ள வேண்டும்.

Used to - வின் பயன்பாடு, ஏற்கனவே வழக்கத்தில் இருந்தது. பயிற்சி செய்யப்பட்டு தற்போது நிறுத்தப்பட்ட ஒரு விஷயத்தைப்பற்றி கூறும்போது பயன்படுகிறது.

He used to walk for miles. அவன் மைல்கணக்காக நடந்து பழக்கப்பட்டவன்
(ஹீ யூஸ்டு டு வாக் பா°ர் மைல்ஸ்)

He used to be an expert cricketer. அவன் திறமையான கிரிக்கெட் வீரனாக கருதப்பட்டான்.
(ஹீ யூஸ்டு டு பீ ஆன் எக்ஸ்பெர்ட் கிரிக்கெட்டெர்)

I used to meet him daily. நான் தினமும் அவனை சந்திப்பது வழக்கம்.
(ஐ யூஸ்டு டு மீட் ஹிம் டெய்லி)

Dare / dare say / need

டேர் (தைரியம்) இதுபோன்ற வாக்கியங்களில் பயன்படுத்தப்படுகிறது

He dare not fight me. என்னிடம் சண்டையிட அவனுக்கு தைரியமில்லை
(ஹீ டேர் நாட் பைட் மீ)

She dare not contradict me. அவள் என் வார்த்தைகளை எதிர்க்க முடியாது.
(ஷீ டேர் நாட் காண்ட்ரடிக்ட் மீ)

He dared to challenge me. அவனுக்கு என்னிடம் சவால் விடும் தைரியம் வந்துவிட்டது
(ஹீ டேர்டு டு சேலன்ஜ் மீ)

Note-I dare say (அய் டேர் ஸே) இதன் பொருள் ஒரு வேனள (probably) I

I dare say, it will be alright. (ஐ டேர் ஸே இட் வில் பீ ஆல்ரைட்)

ஒரு வேளை, இவை அனைத்தும் சரியாகிவிடும்.

தேவை (necessity) மற்றும் கடமை (obligation) காரணம்ரக Need பயன்படுத்தப்படும் போது, நிகழ்காலம், ஒருமை.படர்க்கையுடன் 'S' பயன்படுத்தப்படுவதில்லை. அதேப்போல முழுமைபெறாத வினை (infinitive) உடன் to சேர்க்கப்படுவதில்லை.

He need not go there.
(ஹீ நீட் நாட் கோ தேர்)

அவன் போக வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் need வேண்டும் என்ற பொருளில் வரும்போது நிகழ்காலம், படர்கை, ஒருமையுடன் S சேர்க்கப்படுகிறது

He needs help. அவனுக்கு உதவி அவசியம்.
(ஹீ நீட்ஸ் ஹெல்ப்)

It needs to be done with care. இதை கவனமாகச் செய்ய வேண்டும்.
(இட் நீட்ஸ் டு பீ டன் வித் கேர்)

The plants need to be pruned. செடிகளை கத்தரித்து விடவேண்டும்.
(த ப்ளான்ட் நீட்ஸ் டு பீ ப்ருன்ட்)

எழுவாய் அற்றதை Infinitive (எச்ச வினை) என்கிறோம். (ஒரு வினைச் சொல்லுக்கு (verb) முன்பாக to சேர்த்து எச்ச வினைச்சொல்லாக உருவாக்கப்படுகிறது) to இல்லாமலும் வெளிப்படும்.

I will play இதில் play வினை. இந்த வாக்கியத்தில் விருப்பம் உள்ளது. I am determined to play. சில உதரரணங்கள்

Mangoes are sweet to eat.

He is ready to learn.

To err is human.

This is not the time to play.

மேற்கண்ட வாக்கியங்களில் to eat / to learn/to err மற்றும் to play ஆகியவை infinitive ஆகும்.

Exercise for Revision
பயிற்சிக்காக

1- காலியிடங்களில் தேவைக்கேற்ப Shall/will இட்டு நிரப்புக

(a) We.....go tomorrow positively. (b).....you lend me some book? (c).....we go to see you friend? (d) He.....do it, come what may. (e) If you don’t work hard you.....fail. (f) He.....be surprised to

see you here. (g) The school.....remain closed tomorrow. (h) They.....certainly come. (i) She.....be obliged if I visit her. (j) An obedient student.....never disobey his teacher. (k) The time.....come when you.....realize your mistake. (I) He is afraid that he.....be caught. (m)I don’t think he.....get first division.

2- காலியிடங்களில் தேவைக்கேற்ப Should/Would இட்டு நிரப்புக

(a) You.....go immediately. (b) ..... you do me a favour? (c) You keep your promise. (d) She.....do it because it is in her interest. (e) I.....die in the attempt but I.....do it. (f).....you mind shutting the door? (g) He.....play cricket with his friends instead of reading at home. (h).....I not work hard? (i) They.....have come by now. () You.....walk to the left. (k).....that I was present in the meeting? (I) Leela.....reach there in time. (m) Ram...go for a walk in the morning. (n) You.....not hesitate to advise me. (o) Who se s not like such a beautiful place to live in. (p) Who are you that you.....advise me. (q) I.....like to know her name. (r) He.....gladly help her. (s) It.....be unwise on your part to leave that job now.

3- அடைப்புக்குறியில் தரப்பட்டுள்ள துணைவினை சொற்களில் பொருத்தமானவற்றை கொண்டு நிரப்பு

(1) ..... come in? (mayfcan) (2) You.....do it easily. (shak/will) (3) He.....work hard to win the match. (should/must) (4) You.....obey your parents. (must/ought to) (5) They reach in time there. (should/must) (6) She.....not contradict me. (dare/dare say) (7) 1.....it will be alright by tomorrow. (dare/dare say) (8) He.....not go there. (need/needs) (9) Sita.....help immediately. (need/needs).

LESSON TWELVE

பாடம் பன்னிரெண்டு

Verbs And Their Three Forms

(வெர்ப்ஸ் அண்ட் தேர் திரி ஃபார்ம்ஸ்)

வினைச்சொற்களும் அவற்றின் மூன்று வடிவங்களும்

saltydish (சால்டி டிஷ்) உப்புப் பண்டம்
cheese (சீஸ்) பாலாடைக்கட்டி
betel leaf (பீடில் லீஃப்) வெற்றிலை
bread (பிரெட்) ரொட்டி
poppy (பாப்பி) கசகசா
pastry (பேஸ்ட்ரி) பேஸ்ட்ரி
ice (ஐஸ்) பனிக்கட்டி
pearl millet (பேர்ல்) கம்பு
biscuit (பிஸ்கெட்) பிஸ்கெட்
corn ear (கார்ன் இயர்) சோளக்கதிர்
food (ஃபுட்) உணவு
maize (மெய்ஸ்) சோளம்
butter (பட்டர்) வெண்ணெய்
pea (பீ) பட்டாணி
whey (வே) மோர்
rick milk (ரைஸ் மில்க்) பாயசம்
jaggery (ஜாக்கரி) கருப்பட்டி
cluster bean (க்ளஸ்டர் பீன்) கொத்தவரை
wheat (வீட்) கோதுமை

field pea (ஃபீல்ட் பீ) பட்டாணி
clarified butter (க்ளாரிஃபைட் பட்டர்) நெய்
sauce (சாஸ்) சட்னி
gram (கிராம்) கொத்துக் கடலை
cake (கேக்) சப்பாத்தி
rice (ரைஸ்) அரிசி
tea (டீ) தேநீர்
fine flour (ஃபைன் ஃப்ளோர்) மைதா
sugar (ஷுஸ்கர்) சர்க்கரை
bran (ப்ரேன்) உமி
chocolate (சாக்லேட்) சாக்லேட்
cheese (சீஸ்) பனீர்
oat (ஓட்) ஒட்ஸ் தானியம்
barley (பார்லி) வார்கோதுமை
millet (மில்லட்) சோளம்
vegetable (வெஜிடபிள்) காய்கறி
sesamum (சீசமம்) எள்
oil (ஆயில்) எண்ணெய்
porridge (போரிட்ஜ்) குருணை
curd (கர்ட்) தயிர்
pulse (பல்ஸ்) பருப்பு
milk (மில்க்) பால்
paddy (பேடி) நெல்
salt (சால்ட்) உப்பு
cream (கிரீம்) பாலாடை
lentil (லென்டில்) சிவப்புத் துவரை
meat (மீட்) இறைச்சி
pork (போர்க்) பன்றி இறைச்சி
mutton (மட்டன்) ஆட்டிறைச்சி
beaf (பீஃப்) மாட்டிறைச்சி
sweetmeat (ஸ்வீட் மீட்) இனிப்பு
sugar candy (ஷுகர் – கேண்டி) கற்கண்டு
jam (ஜாம்) ஜாம்
puffed rice (பஃப்டு ரைஸ்) புடைக்கப்பட்ட அரிசி
kidney bean (கிட்னி பீன்) பாசிப் பயறு
beaten paddy (பீட்டன் பேடி) கதிரடிக்கப்பட்ட நெல்

buck wheat (பக் வீட்) வெந்தயம்
licuorice (லிக்கரிஸ்) அதிமதுரம்
molasses (மெலாசெஸ்) தேன் பாகு
castor-seed (கேஸ்டர் சீட்) ஆமணக்கு விதை
supper (சப்பர்) இரவு உணவு
bread (பிரெட்) ரொட்டி
butter milk (பட்டர் மில்க்) மோர்
wine (வைன்) மது
syrup (சிரப்) சர்பத்
honey (ஹனி) தேன்
mustard (மஸ்டர்ட்) கடுகு
vinegar (விநேகர்) காடி
betelnut (பீட்டல் நட்) பாக்கு
dry ginger (ட்ரை ஜிஞ்ஜர்) சுக்கு
tumeric (டர்மரிக்) மஞ்சள்
sweet pudding (ஸ்வீட் புட்டிங்) அல்வா

Fruits பழங்கள்

grapes (கிரேப்ஸ்) திராட்சை
fig (ஃபிக்) அத்திப்பழம்
walnut (வால்நட்) அக்ருட்
pine-apple (பைன் – ஆப்பிள்) அன்னாசி
pomegranate (பொமோக்ரேனட்) மாதுளை
guava (கோவா) கொய்யா
peech (பீச்) பீச்
mango (மேங்கோ) மாங்காய்
water melon (வாட்டர் மெலான்) தர்பூசணி
currant (கரேன்ட்) திராட்சை
coconut (கோக்கனட்) தேங்காய்
orange (ஆரஞ்சு) ஆரஞ்சு
lemon (லெமன்) எலுமிச்சை
pear (பீயர்) பேரிக்காய்
papaya (பப்பாயா) பப்பாளி
pistachio (பிஸ்டேஷியோ) பிஸ்தா
plum (ப்ளம்) ப்ளம்

raisin (ரெய்ஸின்) கிஸ்மிஸ்
banana (பனானா) வாழைப்பழம்
cashewnut (கேஷ்யூநட்) முந்திரி
date (டேட்) பேரிட்சை
melon (மெலான்) முலாம் பழம்
cucumber (குக்கூம்பர்) வெள்ளரி
apricot (ஆப்ரிகாட்) ஆப்ரிகாட்
pompelmoose (பம்பிள் – மாசஸ்) பம்பளிமாஸ்
orange (ஆரஞ்சு) கிச்சிலிப் பழம்
apple (ஆப்பிள்) ஆப்பிள்
almond (ஆல்மண்டு) பாதாம்
plum (ப்ளம்) ப்ளம்
malta (மால்டர) பார்லி
raisin (ரைசின்) உலர்ந்த திராட்சை
groundnut (கிரவுண்டுநட்) வேர்க்கடலை
rose apple (ரோஸ் ஆப்பிள்) நாவல்பழம்
lichi (லிச்சி) லிச்சி
custard apple (கஸ்டர்டு ஆப்பிள்) சீத்தாப் பழம்

Flowers பூக்கள்

oleander (ஒலியாண்டர்) அரளி
lotus (லோட்டஸ்) தாமரை
lily (லில்லி) குவளை மலர்
patchoully (பேட்செளலி) கதிர்ப் பச்சை
pandanus (பேண்டானஸ்) தாழம்பூ
mushroom (மஷ்ரூம்) காளான்
daisy (டெய்சி) டெய்சி
moon flower (மூன் ஃபிளவர்) அல்லி
daisy (டெய்சி) டெய்சி
balsam (பால்சம்) பால்சம்
tulip (ட்யூலிப்) பூவரசு
sun flower (சன்ஃபிளவர்) சூரியகாந்தி
rose (ரோஸ்) ராஜா
milingtonia (மில்லிங்டோனியா) மரமல்லிகை
jasmine (ஜாஸ்மின்) மல்லிகை

sweet jasmine (ஸ்வீட் ஜாஸ்மின) மல்லிகை
water solder (வாட்டர் சோல்டர்) நந்தியாவட்டை
basil (பேசில்) துளசி
narcissus (நார்சிஸஸ்) நர்கிஸ்
poppy (பாப்பி) அபினிச் செடி
rangoon creeper (ரங்கூன் க்ரீப்பர்) ரங்கூன் மல்லிகை
common sweet basil (காமன் ஸ்வீட் பேசில்) திருநீற்றுப் பத்திரி
round jasmine (ரவுண்டு ஜாஸ்மின்) குண்டு மல்லி
marigold (மேரி கோல்டு) ஒருவித மஞ்சள் பூ

Vegetables காய்கறிகள்

ginger (ஜிஞ்சர்) இஞ்சி
colocasia (கோலோகேஷியா) சேப்பங்கிழங்கு
potato (பொட்டாட்டோ) உருளைக் கிழங்கு
tamarind (டேமரிண்டு) புளி
long cucumber (லாங் குக்கூம்பர்) கக்கரிக்காய்
jack fruit (ஜேக் ஃப்ருட்) பலாப்பழம்
pumpkin (பம்ப்கின்) பூசணிக்காய்
bitter gourd (பிட்டர் கார்டு) பாகற்காய்
evy gourd (இவி கார்டு) கோவைக்காய்
squash gourd (ஸ்க்வாஷ் கார்ட்) சுரைக்காய்
drumstick (ட்ரம்ஸ்டிக்) முருங்கைக் காய்
carrot (கேரட்) கேரட்
coriander (கொரியாண்டர்) தனியா
spinach (ஸ்பினாச்) பசளைக் கீரை
mint (மின்ட்) புதினா
ash pumpkin (ஆஷ் பம்ப்கின்) பூசனிக்காய்
onion (ஆனியன்) வெங்காயம்
lilac (லிலைக்) நறுமண மலர்செடி
cabbage (கேபேஜ்) முட்டைக் கோஸ்
brinjal (பிரிஞ்ஜால்) கத்தரிக்காய்
lady’s finger (லேடீஸ் ஃபிங்கர்) வெண்டைக் காய்
com ear (கார்ன் இயர்) சோளக்கதிர்
pea (பீ) பட்டாணி
chillies (சில்லீஸ்) மிளகாய்

citron (சிட்ரான்) நார்த்தங்காய்
fenugreek (ஃபெனுக்ரீக்) வெந்தயம்
knolkhol (நூல்கோல்) நூல்கோல்
garlic (கார்லிக்) பூண்டு
luffa (லூஃபா) சுரைக்காய்
snake gourd (ஸ்னேக் கார்ட்) படலங்காய்
beet root (பீட்ருட்) பீட்ருட்
bean (பீன்) அவரைக்காய்
yam (யாம்) சேனைக்கிழங்கு
radish (ரேடிஷ்) முள்ளங்கி
cauliflower (காலி ஃபிளவர்) கோசுக்கீரை
potato palm (பொட்டாட்டோ பாம்) கரணைக் கிழங்கு
cluster beans (க்ளஸ்டர் பீன்ஸ்) கொத்தவரங்காய்
sweet potato (ஸ்வீட் பொட்டாட்டோ) சர்க்கரை வள்ளிக் கிழங்கு
turnip (டர்நிப்) டர்நிப்
lettuce (லெட்யூஸ்) கீரை
amaranthus (அமரான்தஸ்) கீரைத்தண்டு வகை

Spices மசாலாக்கள்

aloes (அலோஸ்) சோற்றுக் கற்றாழை
caraway (கேரவே) ஓமம்
ginger (ஜிஞ்சர்) இஞ்சி
linseed (லின் சீட்) ஆளி விதை
cardamom (கார்டமாம்) ஏலக்காய்
nigella (நிகேலா) கருஞ்சீரகம்
black pepper (பிளாக் பெப்பர்) கரு மிளகு
saffron (சேஃப்ரான்) குங்குமப்பூ
yeast (ஈஸ்ட்) காடி
poppy seed (பாப்பி சீட்) கசகசா
nutmeg (நட்மெக்) ஜாதிக்காய்
mace (மேஸ்) ஜாதிபத்திரி
cumin seed (க்யூமின் சீட்) சீரகம்
cassia (கேசிய) பட்டை
cinnamon (சின்னமன்) இலவங்கப் பட்டை

coriander seed (கொரியாண்டர் சீட்) தனியா
salt (சால்ட்) உப்பு
alum (ஆலம்) படிகாரம்
hemp (ஹெம்ப்) சணல் செடி வகை
chilies (சில்லிஸ்) மிளகாய்
soap nut (சோப் நட்) சீயக்காய்
clove (க்ளோவ்) லவங்கம்
betelnut (பீட்டல் நட்) பாக்கு
vinegar (வினீகர்) காடி
dry ginger (டிரை ஜிஞ்சர்) சுக்கு
aniseed (ஏனிசீட்) பெருஞ்சீரகம்
sago (சேகோ) ஜவ்வரிசி
tumeric (டர்மரிக்) மஞ்சள்
asafoetida (அசஃபோடிட்டா) பெருங்காயம்

Birds பறவைகள்

swallow (ஸ்வேலோ) கருங்குருவி
owl (ஆவுல்) ஆந்தை
wood pecker (வுட் பெக்கர்) மரங்கொத்தி
pigeon (பிஜியன்) புறா
cockatoo (கொக்கேட்டு) வெள்ளைக் கிளி
heran (ஹெரான்) நாரை
cuckoo (குக்கூ) குயில்
crow (க்ரோ) காக்கை
eagle (ஈகிள்) கழுகு
vulture (வல்ட்ச்சர்) வல்லூரு
patridge (பார்ட்ரிட்ஜ்) கௌதாரி
parrot (பேரட்) கிளி
magpie (மேக்பி) குருவி
duck (டக்) வாத்து
weaver bird (வீவர் பேர்ட்) தூக்கனாங்குருவி
quail (க்வெயில்) காடை
hawk (ஹாக்) ராஜாளி
falcon (ஃபால்கன்) ராஜாளி
cock (காக்) சேவல்

hen (ஹென்) கோழி
sparrow (ஸ்பேரோ) குருவி
ruddy goose (ரடி கூஸ்) சக்காவாகம்
canary (கேனேரி) மைனா
bat (பேட்) வௌவால்
kite (கைட்) பருந்து
chicken (சிக்கன்) கோழிக்குஞ்சு
swan (ஸ்வேன்) அன்னம்
peacock (பீக்காக்) மயில்
thrush (த்ரஷ்) குருவி
red legged partridge (ரெட் லெக்டு பேட்ரிட்ஜ்) செங்கால் நாரை
lark (லார்க்) குருவி
crane (கிரேன்) கொக்கு
ostritch (ஆஸ்ட்ரிச்) நெருப்புக் கோழி
pewit (பிவிட்) நீர் ஓரத்தில் வசிக்கும் பறவை

Animals and Insects மிருகங்கள் மற்றும் பூச்சிகள்

boa (போஆ) மலைப்பாம்பு
camel (கேமல்) ஒட்டகம்
turtle (டர்ட்டில்) ஆமை
musk deer (மஸ்க் டீர்) கஸ்தூரி மான்
kangaroo (கங்காரு) கங்காரு
dog (டாக்) நாய்
bitch (பிட்ச்) பெண் நாய்
crab (க்ரேப்) நண்டு
mule (ம்யூல்) கோவேறு கழுதை
hare (ஹேர்) முயல்
bug (பக்) மூட்டைப் பூச்சி
beatle (பீட்டல்) வண்டு
cow (கௌ) பசு
squirrel (ஸ்க்விரில்) அணில்
ass (ஏஸ்) கழுதை
rhinoceros (ரினோசரஸ்) காண்டாமிருகம்
horse (ஹார்ஸ்) குதிரை
mare (மேர்) பெண் குதிரை

snail (ஸ்நெயில்) நத்தை
alligator (எலிகேட்டர்) முதலை
panther (பேன்தர்) சிறுத்தைப் புலி
mouse (மவுஸ்) எலி
mole (மோல்) சுண்டெலி
giraffe (ஜிராஃப்) ஒட்டகச் சிவிங்கி
lizard (லிசார்ட்) பல்லி
lice (லைஸ்) பேன்
leech (லீச்) அட்டை
cricket (கிரிக்கெட்) சில்வண்டு
zebra (ஜீப்ரா) வரிக்குதிரை
he-goat (ஹி-கோட்) ஆண் ஆடு
she-goat (ஷி-கோட்) பெண் ஆடு
kid (கிட்) குட்டி
calf (காஃப்) கன்றுக் குட்டி
she-calf (ஷி-காஃப்) பெண் கன்றுக் குட்டி
colt (கோல்ட்) குதிரைக் குட்டி
cat (கேட்) பூனை
kitten (கிட்டன்) பூனைக் குட்டி
monkey (மங்கி) குரங்கு
chimpanzee (சிம்பன்சி) மனிதக் குரங்கு
tiger (டைகர்) புலி
stag (ஸ்டேக்) மான்
ox/bullock (ஆக்ஸ்/புல்லக்) எருது
bear (பியர்) கரடி
wolf (வுல்ஃப்) ஓநாய்
sheep (ஷிப்) செம்மறி ஆடு
lamb (லேம்ப்) ஆட்டுக் குட்டி
buffalo (பஃப்பலோ) எருமை மாடு
kid/lamb (கிட்/லேம்ப்) குட்டி
ram (ரேம்) செம்மறியாட்டுக் கடா
spider (ஸ்பைடர்) சிலந்தி
fly (ஃப்ளை) ஈ
crocodile (க்ரோக்கடைல்) முதலை
mosquito (மொஸ்கிட்டோ) கொசு
fish (ஃபிஷ்) மீன்

bee (பீ) வண்டு
frog (ஃபிராக்) தவளை
tadpole (டேட் போல்) தவளைக் குஞ்சு
silkworm (சில்க் வார்ம்) பட்டுப் பூச்சி
spenial (ஸ்பீனியல்) முடி அடர்த்தியாக உள்ள நாய்
pony (போனி) மட்டக் குதிரை
grass-hopper (கிராஸ்-ஹோப்பர்) வெட்டுக்கிளி
locust (லோக்கஸ்ட்) பெண் வெட்டுக்கிளி
leopard (லேப்பர்டு) சிறுத்தை
wasp (வாஸ்ப்) குளவி
butterfly (பட்டர்ஃபிளை) பட்டாம்பூச்சி
hippopotamus (ஹிப்போபோடம்ஸ்) நீர் யானை
temite (டெர்மைட்) கறையான்
blucbull (ப்ளூ புள்) மான்
mongoose (மங்கூஸ்) கீரிப் பிள்ளை
puppy (பப்பி) நாய்க் குட்டி
flea (ஃப்ளீ) நாய் ஈ
scorpion (ஸ்கார்ப்பியன்) தேள்
fawn (ஃபான்) மான்க் குட்டி
elephant (எலிஃபேன்ட்) யானை
egg of louse (எக் ஆஃப் லௌஸ்) பொடுகு
fox (ஃபாக்ஸ்) நரி
hyena (ஹைனா) கழுதைப் புலி
ape (ஏப்) வாலில்லாக் குரங்கு
hound (ஹவுண்ட்) வேட்டை நாய்
shark (ஷார்க்) சுறா
snake (ஸ்நேக்) பாம்பு
oyster (ஆய்ஸ்டர்) சிப்பி
bull (புல்) காளை
porcupine (போர்க்யூபைன்) முள்ளம் பன்றி
jackal (ஜேக்கல்) நரி
lion (லயன்) சிங்கம்
pig (பிக்) பன்றி
swine (ஸ்வைன்) பெண் பன்றி
deer (டீர்) மான்

Professions அலுவல்கள்

news agent (நியூஸ் ஏஜென்ட்) செய்தி முகவர்
engineer (என்ஜினியர்) பொறியியல் நிபுணர்
actor (ஆக்டர்) நடிகர்
advocate (அட்வகேட்) வழக்கறிஞர்
petition writer (பெட்டிஷன் ரைட்டர்) மனு எழுதுபவர்
orderly (ஆர்டர்லி) ஏவலாள்
commission agent (கமிஷன் ஏஜென்ட) தரகர்
overseer (ஓவர்சீயர்) கண்காணிப்பாளர்
artist (ஆர்டிஸ்ட்) கலைஞன்
poet (பொயட்) கவிஞன்
butcher (புட்சர்) கசாப்புக் கடைக்காரன்
artisan (ஆர்டிசன்) தொழிலாளி
famer (ஃபார்மர்) உழவன்
green-grocer (கிரீன்-க்ராசர்) காய்கறி வியாபாரி
potter (பாட்டர்) குயவன்
porter (போர்ட்டர்) சுமை தூக்குபவன்
boatman (போட்மேன்) படகோட்டி
coachman (கோச் மேன்) பயிற்சியாளன்
cashier (கேஷியர்) பொக்கிஷதாரர்
hawker (ஹாக்கர்) சிறு சாமான்களை விற்போன்
agent (ஏஜென்ட்) முகவர்
plumber (ப்ளம்பர்) தண்ணீர் குழாய் வேலை செய்பவர்
barber (பார்பர்) முடி வெட்டுபவர்
baker (பேக்கர்) ரொட்டி செய்து விற்பவர்
sailor (செய்லர்) மாலுமி
inspector (இன்ஸ்பெக்டர்) ஆய்வாளர்
journalist (ஜர்னலிஸ்ட்) பத்திரிகையாளர்
examiner (எக்ஸாமினர்) ஆய்வாளர்
manager (மேனேஜர்) மேலாளர்
trainer (டிரைனர்) பயிற்சியாளர்
pedlar (பெட்லர்) வீதியில் திரிந்து விற்கும் சிறு வணிகன்
draper (ட்ராப்பர்) துணி வியாபாரி
carpenter (கார்பென்டர்) தச்சன்
general merchant (ஜெனரல் மெர்ச்சன்ட்) பொது வணிகன்

bearer (பேரர்) குற்றேவல் புரிபவர்
sweeper (ஸ்வீப்பர்) தோட்டி
storekeeper (ஸ்டோர் கீப்பர்) பண்டக சாலை நிர்வாகி
grain parcher (க்ரெயின் பார்ச்சர்) தானியம் வறுப்பவன்
beggar (பெக்கர்) பிச்சைக்காரன்
water carrier (வாட்டர் கேரியர்) தண்ணீர் சுமப்பவன்
perfumer (பர்ஃபியூமர்) வாசனைத் திரவிய வியாபாரி
shepherd (ஷெப்பர்டு) ஆடு மேய்ப்பவன்
musician (ம்யூசிஷியன்) இசைக் கலைஞன்
cowherd (கௌஹேர்டு) இடையன்
peon (பியூன்) பணியாள்
watchman (வாட்ச்மேன்) காவலாளி
surgeon (சர்ஜன்) அறுவை சிகிச்சை செய்பவர்
detective (டிடெக்டிவ்) துப்பறிபவர்
binder (பைண்டர்) கட்டுகிறவன்
weaver (வீவர்) நெசவாளி
cobbler (காப்ளர்) செருப்புத் தைப்பவன்
jeweller (ஜ்வெல்லர்) நகை விற்பவன்
sweeper (ஸ்வீப்பர்) பெருக்குபவன்
typist (டைப்பிஸ்ட்) தட்டச்சு செய்பவர்
contractor (கான்ட்ராக்டர்) ஒப்பந்தக்காரன்
postman (போஸ்ட் மேன்) தபால்காரன்
doctor (டாக்டர்) மருத்துவர்
drummer (டிரம்மர்) மேளம் அடிப்பவர்
tabla player (தப்லா ப்ளேயர்) தபலா வாசிப்பவர்
oilman (ஆயில் மேன்) எண்ணெய் வியாபாரி
tailor (டெய்லர்) தையல்காரன்
broker (ப்ரோக்கர்) தரகர்
druggist (ட்ரக்கிஸ்டு) மருந்து கடைக்காரன்
dentist (டென்டிஸ்ட்) பல் மருத்துவர்
shopkeeper (ஷாப் கீப்பர்) கடைக்காரர்
carder (கார்டர்) பஞ்சடிப்பவன்
washerman (வாஷர்மேன்) வண்ணாண்
nurse (நர்ஸ்) செவிலியர்
fisherman (ஃபிஷர்மேன்) மீனவன்
labourer (லேபரர்) கூலித் தொழிலாளி

boatman (போட் மேன்) படகோட்டி
money-lender (மிணிலெண்டர்) வட்டிக்கு கொடுப்பவர்
gardener (கார்டனர்) தோட்டக்காரன்
mechanic (மெக்கானிக்) இயந்திரத் தொழில் நிபுணர்
printer (பிரிண்டர்) அச்சிடுபவர்
accountant (அக்கவுண்டன்ட்) கணக்குப் பிள்ளை
sculptor (ஸ்கல்ப்டர்) சிற்பி
cobbler (காப்ளர்) சக்கிலி
sweeper (ஸ்வீப்பர்) பெருக்குபவன்
dyer (டையர்) சாயம் தோய்ப்பவர்
chemist (கெமிஸ்ட்) மருந்து வியாபாரி
cook (குக்) சமையல்காரன்
cashier (கேஷியர்) பொக்கிஷதாரர்
author (ஆத்தர்) எழுத்தாளர்
blacksmith (பிளாக் ஸ்மித்) கொல்லன்
lawyer (லாயர்) வழக்கறிஞர்
physician (பிசிஷியன்) வைத்தியர்
teacher (டீச்சர்) ஆசிரியர்
reporter (ரிப்போர்ட்டர்) நிருபர்
policeman (போலீஸ் மேன்) காவலர்
goldsmith (கோல்டுஸ்மித்) பொற்கொல்லர்
merchant (மெர்ச்செண்ட்) வியாபாரி
confectioner (கன்ஃபெக்ஷனர்) திண்பண்டம் தயாரிப்பவர்
wrestler (ரெஸ்லர்) மல்லன்
clergyman (க்ளெர்ஜி மேன்) மதகுரு
priest (ப்ரீஸ்ட்) பூசாரி

Designation பதவிகள்

officer (ஆஃபிஸர்) அதிகாரி
director (டைரக்டர்) இயக்குநர்
head (ஹெட்) தலைவர்
senior (சீனியர்) மூத்த
additional (அடிஷனல்) கூடுதல்
professor (புரஃபசர்) பேராசிரியர்
commissioner (கமிஷனர்) ஆணையாளர்

stenographer (ஸ்டெனோகிராபர்) சுருக்கெழுத்தாளர்
assistant (அஸிஸ்டென்ட்) உதவியாளர்
superintendent (சூப்பரின்டென்டெண்ட்) கண்காணிப்பாளர்
controller (கன்ட்ரோலர்) கட்டுப்பாட்டு அதிகாரி
judge (ஜட்ஜ்) நீதிபதி
attorney (அட்டர்னி) அரசு வழக்கறிஞர்
registrar (ரெஜிஸ்ட்ரார்) பதிவாளர்
lecturer (லெக்ட்சரர்) விரிவுரையாளர்
administrator (அட்மினிஸ்ட்ரேட்டர்) நிர்வாக அதிகாரி
officiating (ஆஃபிசியேட்டிங்) பணித்துறை வேலை
vice chancellor (வைஸ் சான்சிலர்) துணை வேந்தர்
registrar (ரெஜிஸ்ட்ரார்) பதிவாளர்
chancellor (சரன்சிலர்) வேந்தர்
treasurer (ட்ரஷரர்) பொருளாளர்
governor (கவர்னர்) ஆளுநர்
sub-inspector of police (சப்-இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ்) காவல்துறை உதவி ஆய்வாளர்
member (மெம்பர்) உறுப்பினர்
chairman (சேர்மன்) தலைவர்
collector (கலெக்டர்) மாவட்ட ஆட்சியர்
principal (பிரின்ஸிபல்) முதல்வர்
observer (அப்சர்வர்) கண்காணிப்பாளர்
minister (மினிஸ்டர்) அமைச்சர்
mayor (மேயர்) மேயர்
ambassador (அம்பாசிடர்) தூதர்
district magistrate (டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்) மாவட்ட நீதிபதி
president (பிரெசிடென்ட்) குடியரசுத் தலைவர்
clerk (க்ளெர்க்) எழுத்தர்
accountant (அக்கவுன்டன்ட்) கணக்காளர்
secretary (செக்ரட்டரி) செயலாளர்

EIGHTH PART

எட்டாம் பாகம் (அனுபந்தம் - II)

நீங்கள் இதில் கற்றுக் கொள்பவை-

- உரையாடலின் மூலம் உங்களின் எண்ண ஓட்டங்களை எதிரில் இருப்பவருக்கு தெரிவிப்பது எப்படி?
- உங்களின் கருத்துக்கள் சரளமாகவும், தங்குதடை இன்றியும், தெளிவாகவும் ஆவது எப்படி?
- உங்களின் உடல் அசைவுகள் மற்றும் திறமைகளை எப்படி வெளிப்படுத்துவது?
- உங்களின் நினைவாற்றலை பெருக்கிக் கொள்வது எப்படி?

முக்கியக் குறிப்பு

படிப்பது, எழுதுவது, பேசுவது போன்ற செயல்களுக்கு ஆதாரமாக இருப்பது நினைவாற்றல் (மெமரி பவர்) தான். இந்தப் பகுதியில நினைவாற்றலை வளர்ப்பதற்கு பல்வேறு வகை யோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை உங்களின் வாழ்நாள் முழுமைக்கும் பயனுள்ளதாக இருக்கும். இந்த நினைவாற்றல் பயிற்சிகளை படிப்பதோடு அல்லாமல் நினைவிலும் வைத்துக் கொண்டு பயன்படுத்தினால் நீங்கள்

நினைத்த நேரத்தை விட குறைவான நேரத்திலேயே உங்கள் பணிகளை சிறப்பாக செய்து முடித்துவிடலாம்.

நினைவாற்றலைப் பெருக்க சில யோசனைகள்

நமது எண்ணங்களை ஒருநிலைப்படுத்துதல்: நமது மனது முழுமையாக ஒருநிலைப்பட, மூளையின் செயல்பாட்டை நம் வசப்படுத்துதல் அவசியமாகிறது. அதாவது, நினைவாற்றல், குறித்த நேரத்தில் தேவையான விஷயத்தை நினைவுக்கு கொண்டுவர எப்போதும் விழிப்புடன் இருத்தல் போன்றவை நம் மூளையின் செயல்பாடுகளால் ஏற்படும் நிகழ்வுகள். இந்த நிகழ்வுகள் முறையாக நடக்கவும், நினைவாற்றல் பெருகவும், சில எளிய பயிற்சிகள் செய்யலாம். ஒரு போர்வையை விரித்து அதன் மீது படுத்துக் கொள்ளவும், இரண்டு கைகளையும் அகலமாக விரிக்கவும், உள்ளங்கை மேல்நோக்கி இருக்கவேண்டும். கால்கள் இரண்டையும் ரிலாக்ஸாக வைத்துக் கொள்ளவும். கண்களை மூடிக்கொண்டு மூக்கின் வழியாக மூச்சை இழுத்து வாயின் வழியாக விடவும். இவ்வாறு செய்யும்போது கண்ணுக்கும் இமைக்கும் இடையே ஒரு வெளிச்சம் தோன்றும். அதனையே கூர்ந்து கவனிக்கவும். மூச்சை உள்ளிழுக்கும் போது வெளிச்சம் பிரகாசமாகவும் மூச்சை வெளியே விடும் போது ஒளிமங்கியும் தோன்றும். இந்தப் பயிற்சி மூளைக்கு வலிமையைத் தரும். தினமும் காலையில் முடிந்த அளவு இந்தப் பயிற்சி செய்யவும்.

பிறந்த நாட்களை நினைவில் கொள்ளுதல்: நம்முடைய நினைவாற்றல் என்பது மற்றவர்கள் மத்தியில் நம்மை தனிமைப்படுத்தி, பெருமைப்படுத்திக் காட்டுவது. சிறு சிறு விஷயங்களை நாம் நினைவில் வைத்துக் கொள்வதன் மூலம் நாம் மற்றவர்களின் மதிப்பிற்குரியவராகலாம். நமக்கு வேண்டியவர்கள் மீது நாம் அக்கறை

செலுத்துகிறோம் என்பதற்கு ஒரு எளிய எடுத்துக்காட்டு அவர்களின் பிறந்தநாளை நினைவில் வைத்திருப்பது. இதனை எளிய முறையில் நினைவில் வைத்துக் கொள்ளுதல் எப்படி என்று பார்ப்போம். முதலில் நாம் நினைவில் கொள்ளவேண்டிய முக்கியமான பிறந்த நாட்களை எல்லாம் எழுதிக் கொண்டு அதனை மாதங்களுக்கேற்ப பிரித்துக் கொள்ள வேண்டும். பிறகு ஜனவரி முதல் டிசம்பர் வரை அனைத்தையும் வரிசைப்படுத்தி அந்தந்த பருவ காலத்திற்கேற்ப அவர்கள் உடையணிந்து வரிசையாக நிற்பதுபோல கற்பனை செய்து மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

சொற்பொழிவை எளிமையாக்குவது: நிறைய விஷயங்களை தெரிந்து வைத்திருப்பவர்கள் கூட பலர்முன் பேச தயங்குவார்கள். தேவையற்ற பயம். அவர்களை தொற்றிக் கொள்ளும். அனைவரும் தன்னையே பார்ப்பது போன்ற ஓர் உணர்வு. அனைத்தையும் மறக்கச் செய்து தடுமாற வைத்துவிடும். இதையெல்லாம் மீறி அழகாக சொற்பொழிவாற்றுவது ஒரு சிறந்த கலை. இந்தக் கலையை எளிய பயிற்சிகள் மூலம் பெறலாம். முதலில் ஆழமாக மூச்சை இழுத்து விடவும். பிறகு நாம் பேச வேண்டிய விஷயங்களை வகைப்படுத்துங்கள். சிறுசிறு தலைப்புகள் தந்து ஒவ்வொரு தலைப்பும் நம் வீட்டின் ஒவ்வொரு அறையில் இருப்பதாக கற்பனை செய்து கொள்ளலாம். இப்போது நாம் ஒவ்வொரு அறைக்கும் வரிசையாகச் சென்று அந்தந்த தலைப்பை எடுத்து பேசுவதாக வைத்துக் கொள்ளலாம். நம் வீட்டின் எந்தப் பகுதியும் நமக்கு மறக்காது. அடுத்தடுத்து ஒவ்வொரு பகுதிக்கு செல்லும்போது அந்த அறைக்குரிய தலைப்பு நம் நினைவிற்கு வரும். பேசி முடித்ததும் வந்திருக்கும் விருந்தினர்கள் விடைபெற்று செல்வதாக நினைத்துக் கொள்ளலாம். நாம் மேடையில் பேசும்போது நன்றியுறையில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். அனைவரும் வரிசையாக நிற்பதாக கற்பனையில் நிறுத்திக் கொண்டு ஒவ்வொருவருக்கும் நன்றி கூறி உரையை முடிக்கலாம்.

இரட்டிப்பு சுறுசுறுப்பு: மூல பாடத்தின் முக்கிய பகுதிகளை விரைவாக மனப்பாடம் செய்ய தடையின்றி வேகமாக படிக்க வேண்டியது அவசியம். நீங்கள் படிக்கும் பகுதியின் வரிகளின்கீழ் பென்சிலை வைத்து வேகமாக தடையின்றி வாசிக்கவேண்டும். வாசிக்கும் வரிகளிலிருந்து விழிகளை அகற்றாமல் தொடர்ந்து படிக்கவேண்டும். எந்த இடத்தில் வார்த்தை இடறுகிறதோ அந்த வார்த்தையை திரும்பத் திரும்ப கூற வேண்டும். கடினமான வார்த்தைகளின் கீழ் சிறிய புள்ளி வைத்து அதனை மட்டும் தனியே பழக்கிக் கொண்டு மீண்டும் படிக்க வேண்டும். நாம் புள்ளி வைத்த அந்த வார்த்தைகள் நம் மனதில் பதிந்து வேறு எங்கேனும் அந்த வார்த்தைகள் தென்பட்டாலும் சட்டென்று நினைவிற்கு வரும். இப்படி ஒரே பத்தியை திரும்பத் திரும்ப படிப்பதால் நமக்குள் ஒரு தன்னம்பிக்கை ஏற்படும். அடுத்தடுத்து வரும் பக்கங்கள் எளிமையாக இருக்கும். **உணவில் மீன்:** மீன் உடலுக்கு வலிமை தருவதோடு மட்டுமல்லாமல் மூளைக்கும் வலிமை தரும் உணவாகவும் உள்ளது. மீனில் உள்ள ஃபோலிக் ஆசிட், சோர்வை நீக்கி சுறுசுறுப்பைத் தரவல்லது. மற்றுமுள்ள புரத சத்துக்கள் நம் செயல்பாட்டை அதிகரிக்கச் செய்வது. இதனால் நம் உணவில் பல வகையான மீன்களை சேர்த்துக் கொள்வது நல்லது. இதன் எலும்பு பகுதியிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் உடல் வலிமைக்கு ஏற்றது. இதனை சாலட் மற்றும் உணவு வகைகளுடன் சேர்த்து சாப்பிடுவது நல்லது.

நினைவு வீடு: இது யுனானி முறைப்படி இயற்றப்பட்ட விதி. ஒரு வீட்டை அமைக்கும் போது எந்தெந்த பொருட்கள் எந்த இடத்தில் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படும் வாஸ்து சாஸ்திரத்தின் முறையில் பொருட்களை நினைவில் வைத்துக் கொள்வது எளிது. ஒவ்வொரு அறையின் அமைப்பும் அங்கே இருக்க வேண்டிய பொருட்களையும் கற்பனையில் நினைவில் கொள்ள வேண்டும். அப்போது அந்த அறைக்கு தேவையான பொருட்கள் நினைவில் வரும். உதாரணமாக சமையலறை என்றதும் எலிகள் நினைவிற்கு வந்தால் எலிப்பொறி நினைவிற்கு வரும். அதே போல பொருட்களை வைக்க

வேண்டிய இடங்கள் தீர்மானமாக இருந்தால் பொருட்களை தேட வேண்டிய அவசியமும் இருக்காது.

இரவில் நல்ல தூக்கம்: இரவில் நல்ல தூக்கம் என்பது நாமாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய நல்ல வழக்கம். உடலுக்கும், மனதுக்கும் நல்ல அமைதியான ஓய்வு அவசியம். அது மறுநாள் சுறுசுறுப்பாக இயங்க உதவுகிறது. இரவில் லேசான உணவு, திறந்தவெளி தேகப்பயிற்சி, யோகாசனம், மனதை ஒருநிலைப்படுத்தும் தியானம். மூச்சுப்பயிற்சி போன்றவை ஆழ்ந்த உறக்கத்திற்கு வழி செய்யும். அடிக்கடி காபி, டீ அருந்துவது, மது அருந்துவது போன்ற வழக்கங்கள் தூக்கத்தை கெடுத்துவிடும். குளிர்ந்த நீரில் குளிப்பது நம் உடல் களைப்பை போக்க வல்லது. மேலும் உறங்கும் நேரத்தை நிர்ணயித்துக் கொண்டு அதன்படி படுக்கச் செல்வது நல்லது. **தூங்கப்போகும் முன் நினைவு கூறல்:** உங்களுடைய நினைவாற்றலைப் பெருக்கிக்கொள்ள இது ஒரு சிறந்த பயிற்சி. இதை தூங்கப் போவதற்கு 15 நிமிடங்கள் முன்னால் செய்ய வேண்டும். அன்று காலையிலிருந்து இரவு வரை நடந்த சம்பவங்கள், பேச்சுவார்த்தைகள் சந்தித்த மனிதர்கள் முதலியவற்றை வரிசையாக நினைவுக்கு கொண்டு வாருங்கள். இதனால் அனைத்து சம்பவங்களும் உங்கள் நினைவுக்கு வந்துவிடும். இதனால் மறுநாள் செய்ய வேண்டிய வேலைகள் எதுவும் மறந்து விடாமல் இருக்கும். மறுநாள் எழுந்ததும் இரவு நினைத்த நிகழ்வுகள் ஒவ்வொன்றாக தானே நினைவுக்கு வரும்.

தேடுதல்: முக்கியமான பொருட்களை தேடுதல் என்பது நம் வாழ்வில் நாம் விரும்பாத ஒரு முக்கிய அம்சம். அப்படிப்பட்ட நேரங்களில் தேடித்தேடி சோர்வடையாமல், சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந்து நம் நினைவாற்றலை துணைக்கு அழைப்பது நல்லது. நாம் தேடும் பொருளை கடைசியாக எப்பொழுது பார்த்தோம். அப்போது அருகில் இருந்த மற்ற பொருட்கள், அவைகளை வைத்திருக்கும் இடம் முதலியவற்றை நினைவில் கொள்ள வேண்டும். அந்தப் பொருள் எங்கே இருக்கக்கூடும் என்று அனுமானிக்க வேண்டும். தேட முற்படும் இடத்தை முழுமையாக தேட வேண்டும். இவ்வாறு நினைவாற்றலை

முறைப்படுத்தி வலிமையூட்டும்போது உடல் சிரமம் குறைகிறது.

உங்கள் கற்பனா சக்தியை பயன்படுத்துங்கள்: நாம் மற்ற வேலையில் இருக்கும்போது வேறு ஏதாவது முக்கியமான வேலை நினைவுக்கு வரும். அப்படி நினைவுக்கு வரும்போது அதனை அப்படியே நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். அதற்கு ஒரு சிறிய பயிற்சி உள்ளது. உதாரணமாக, நீங்கள் பேங்கிற்கு செல்ல வேண்டும் என்றால், இரண்டு நிமிடம் கண்களை மூடி வங்கி, பாஸ் புத்தகம், வங்கி எண், வங்கி கட்டிடம், வங்கி அமைந்துள்ள சாலை, நாம் சந்திக்க வேண்டிய மனிதர் முதலியவற்றை ஒன்றன் பின் ஒன்றாக கற்பனையில் கொண்டுவந்து நினைவில் நிறுத்திவிடவேண்டும். பிறகு நம் வேலைகள் முடிந்தவுடன், ஏதேனும் ஒன்று உங்கள் நினைவில் அகப்பட்டாலும் போதும். வங்கி நினைவில் வந்துவிடும். அல்லது வங்கியின் பெயர், சந்திக்க வேண்டிய நபரைப் போன்ற தோற்றமுடைய வேறு யாரேனும் உங்கள் பார்வையில் பட்டாலும் பளிச்சென்று மின்னல் போல வங்கிக்கு செல்ல வேண்டியது நினைவுக்கு வந்துவிடும்.

மாறுதல்களை நினைவில் வைத்துக்கொள்வது: ஆங்கிலத்தில் பல வார்த்தைகள் தனித்தனி எழுத்துக்களால் ஆனது. இவற்றை நினைவில் கொண்டு எழுத வேண்டும். மேலும் உச்சரிப்பில் பல எழுத்துக்கள் அமைதியாக இருக்கும். எழுதும் போது வேறு மாதிரி எழுதப்படும். இவற்றை உச்சரிப்பின் அடிப்படையில் அமைப்பது சற்று சிரமம். முறையான பயிற்சியின் மூலமே இதனை நினைவில் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் எழுதிப் பழக வேண்டியது அவசியம் என்றாலும், வார்த்தைகளை கூர்ந்து கவனித்து அதன் கட்டமைப்பை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு சில Parallel என்ற வார்த்தையை நினைவில் கொள்ள அதில் நடுவில் உள்ள இரண்டு L ளும், இரண்டு கோடுகளாக நினைவில் கொள்வோம். Separate என்ற வார்த்தைக்கு Separate அல்லது Seperate எது சரியான வார்த்தை என்ற கேள்வி

எழும். Separate -இல் இரண்டு ணீ கள் நடுப்பகுதியில் இருக்கும் என்பதை நினைவில் கொண்டால், 'a" யா, 'e' யா என்ற சந்தேகம் அகன்றுவிடும்.

PQRST - முறையில் நினைவில் கொள்வது: Preview- முன்னோட்டம், Question- கேள்வி, Read – படி, ஷிமீறீயீ Respect – சுயமரியாதை, Test – சோதனை முதலியவற்றின் முன் எழுத்தின் சுருக்கம்தான் PQRST. ஒரு முழு விஷயத்தை நினைவில் கொள்ள அதனைத் தனித்தனிப் பகுதியாக பிரித்துக்கொண்டு அதில் உள்ள விஷயத்திற்கேற்ப தலைப்பைத் தந்து அதன் முதல் வார்த்தைகளை எடுத்து அதனை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளலாம். விஷயங்கள் பலதரப்பட்டதாக இருந்தாலும் முதல் வார்த்தையை எடுத்தவுடன் அது சம்பந்தப்பட்ட விஷயங்கள் நினைவிற்கு வந்துவிடும். இப்படியாக வரிசையாக விஷயங்களை நினைவிற்கொண்டு வரலாம். ஏதேனும் ஒன்றை விளக்கும் போதும், மேடையில் பேசும் போதும், இம்முறையில் விஷயங்களை நினைவிற்கு கொண்டு வரலாம்.

நல்ல உடலமைப்பைப் பெறுதல்: நல்ல ஆரோக்யமான உடல், ஆழமான அறிவிற்கு அடித்தளம். உடல்வேறு மனம்வேறு அல்ல. உடலைப் பொறுத்தே மூளையின் செயல்பாடுகள் அமைகிறது. அதனால் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மூளையின் சீரான செயல்பாட்டிற்கு தூய பிராணவாயு அவசியம். அதைப் பெற நாம் தினமும் திறந்தவெளியில் மூச்சுப்பயிற்சி, உடற்பயிற்சி ஆகியவற்றை செய்வது நல்லது. நல்ல காற்றோட்டமான இடத்தில் உலாவி வருவதும் நல்லது. இது இதயத்தை வேகமாக துடிக்கச்செய்து தூய பிராணவாயு உடல் முழுவதும் பரவ வழி செய்கிறது. இது உங்கள் மூளையை சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும்.

உள்மனதின் ஆற்றல்: நாம் அன்றாடம் பார்க்கும், கேட்கும், படிக்கும் விஷயங்கள் அனைத்தும் உள்மனதில் பதிவாகிவிடும். எப்போதோ மனப்பாடம் செய்த பாடம் இன்றும் நம் உள்மனதில் இருக்கும். நாம் கடினமாக வேலை செய்யும் நேரத்தில் நம் சிந்தனை முழுவதும் உழைப்பில்

பதிந்திருப்பதால் நமக்கு வேறு எதுவும் நினைவிற்கு வராது. நம் உடலும் உள்ளமும் ஓய்வாக இருக்கும்போது பல விஷயங்கள் பளிச்சென்று நினைவிற்கு வருவதைப் பார்க்கலாம். பல நாட்கள் நினைவிற்கு கொண்டு வர கடுமையான முயற்சி மேற்கொண்டும் நினைவிற்கு வராத விஷயங்கள் இப்போது வருவது ஏன்? நம் மூளைக்கு அமைதியும், ஓய்வும் தேவை. இதனை ஒரு நாளில் சில மணி நேரமாவது கிடைக்குமாறு பார்த்துக் கொண்டால் மூளை தெளிவாக செயல்படும். நினைவாற்றலும் வலிமை பெறும்.

கவிதை மூலமாக மனதில் பதிய வைத்துக்கொள்ளுதல்: நாம் ஒரு விஷயத்தை திரும்பத் திரும்ப படித்து மனதில் பதிய வைக்க முயற்சிக்கிறோம். இதற்கு அதிக நேரம் செலவாகலாம். ஒன்றை கவிதையாக வடிவமைத்து பாவத்துடன் உரக்க படிக்கவோ அல்லது பிறர் படிக்க கேட்போமேயானால் அது உடனே மனதில் பதிந்துவிடும். “கற்றலின் கேட்டல் நன்று” கவிதையின் லயத்தோடு சேர்ந்து பாடல் வரிகளும் தானே நினைவுக்கு வந்துவிடும். அதனால்தான் அக்காலத்தில் பல நல்ல விஷயங்களை பாடலாகவும், பழமொழி வடிவிலும் முன்னோர்கள் கூறி வைத்திருக்கிறார்கள்.

யார், எங்கே எப்பொழுது: சில நேரங்களில் சில மனிதர்களை நாம் எங்கோ பார்த்தது போல இருக்கும். மிகவும் தெரிந்த முகமாக இருக்கும். ஆனால் சட்டென்று நினைவிற்கு வராது. சற்று நினைவுகளை பின்நோக்கி செலுத்துங்கள், இதுவரை நீங்கள் சென்ற இடங்கள். கோயில், கடற்கரை, உறவினர் விசேஷங்கள், சுற்றுலா என்று உங்கள் நினைவுகள் பல இடங்களுக்கு சென்று திரும்பும். நீங்கள் இப்போது பார்க்கும் இந்த நபரை வேறு பல உடைகளை அணிவித்து மனக்கண்ணால் பாருங்கள். பலவிதமான நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள். இப்போது உங்கள் நினைவுகளில் அந்த நபர் பளிச்சென்று தென்படுவார். பிறகென்ன, “அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பனே” தான்.

அமைதியாக இருங்கள்: எப்போதும் பரபரப்பாக வேலை செய்வதை விடுங்கள். எந்த ஒரு வேலையும் அமைதியாக

செய்தால் முழு நிறைவுடன் இருக்கும். பதட்டப்படாமல் மனதை அமைதியான சூழ்நிலைக்கு கொண்டு வாருங்கள். உங்களுக்கு பிடித்த இயற்கை சூழலை நினைத்துக் கொள்ளுங்கள். இது மூளையை ஆரோக்கியமாகவும், குளிர்ச்சியாகவும் வைத்துக் கொள்ள உதவும். அப்போது தான் உங்கள் மூளை சீரான கட்டளைகளைத் தரும். அதன்படி உங்கள் பணிகளையும் செவ்வனே நிறைவேற்றலாம்.

வேண்டாத எண்ணங்களை அகற்று: உங்கள் மூளை ஒரு குப்பைத்தொட்டியல்ல. அதில் தேவையற்ற எண்ணங்களை பதிவு செய்து வைத்துக் கொள்ளாதீர்கள். அப்படி செய்யும் போது தேவையான எண்ணங்கள் மங்கிவிடும். உங்களுக்கு வேண்டாத ஒரு விஷயத்தை திரும்ப திரும்ப பேசி, நினைத்து அதனை மூளையில் தக்க வைத்துக் கொள்ளாதீர்கள். மாறாக அந்த நினைவு வரும் போது இது நமக்கு வேண்டாம். வேண்டாம் என்று நினைத்துக் கொள்ளுங்கள். மூளையை வருத்தும் விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து மூளையை உஷ்ணமடைய வைக்காதீர்கள்.

சுலபமான வழி: மனிதர்கள் எப்போதும் சிரமங்கள் விரும்புவதில்லை. பல சிரமமான வேலைகள் ஒன்று சேரும்போது பிரச்சினைகளும், குழப்பங்களும் தானே வந்துவிடுகிறது. இதற்கு இடம் கொடுத்தால் வேலை மேலும் பளுவாகிவிடும். வேலையில் கடினமாக உள்ள பகுதிகளை தனியே பிரித்தெடுத்து, எளிமையாக்கிக் கொள்ளுங்கள். சுலபமான விஷயங்களை மனம் எளிதில் நினைவுப்படுத்திக் கொள்ளும். கற்பனையில் அந்த வேலையை சுலபமாக செய்யும் வழிகளைத் தேடுங்கள். சுலபமான வழி கிடைத்ததும் வேலையை செய்ய முற்படுங்கள். இப்போது அந்த பழைய குழப்பம், டென்ஷன் அறவே இருக்காது.

யதார்த்தமாக சிந்தியுங்கள்: உங்கள் பணியை விரைந்து முடிக்க உங்களுக்கென்று சில வழிகள் இருக்கும். அதை மேம்படுத்தி உங்கள் பணியை சுலபமாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு அறிமுகமில்லாத புதிய

வழிகளை தேர்ந்தெடுத்து உங்களை நீங்களே குழப்பிக்கொண்டு காலதாமதத்தை ஏற்படுத்தாதீர்கள்.

நண்பர்களுடன் சேர்ந்து படித்தல்: படிக்கும்போது நண்பர்களுடன் ஒன்றாக சேர்ந்து படிப்பது ஒரு நல்ல வழக்கம். மற்றவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிப்பது உங்கள் நினைவாற்றலை மேம்படுத்தும்.

தூய காற்று சுறுசுறுப்பான மூளை: தூய்மையான காற்று உடலுக்கு மட்டுமல்ல மூளைக்கும் ஏற்றது. மூளையின் சுறுசுறுப்பான இயக்கத்திற்கு பிராணவாயு மிகவும் அவசியம். இத உடல் களைப்பை போக்குவதோடு மட்டுமல்லாமல் மூளையின் செயல்பாட்டையும் அதிகரிக்கச் செய்கிறது. நாம் சுவாசிக்கும் பிராணவாயு 20 முதல் 50 சதவீதம் மூளையின் செயல்பாட்டிற்கு உதவுகிறது.

சுலபமான சுவாசம்: மூச்சுவிடுவது நம் வாழ்வின் இயல்பான விஷயமாக இருந்தாலும், சில நேரங்களில் நமக்கு மூச்சுவிடுவது சிரமமாக இருக்கும். இது நம் மூளையின் செயல்பாட்டினை தடை செய்யும். அதனால் ஒரு சிறு பயிற்சியின் மூலம் மூச்சு விடுதலை எளிதாக்கலாம். தலையை இரு முழங்காலுக்கும் இடையில் வைத்து மெதுவாக மூச்சை இழுத்து விடவேண்டும். இவ்வாறு செய்வதால் தடைப்பட்ட மூச்சு சுலபமாக வெளிவரும்.

டென்ஷன் ஆகாதீர்கள்: உங்கள் உணர்வுகளை எப்போதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருங்கள். உடலை அடிக்கடி உஷ்ணமாக விடாதீர்கள். மனதிற்கு எரிச்சலை மூட்டும் விஷயத்தைப் பற்றி சிந்திக்காதீர்கள், அறையை எப்போதும் தூய்மையாகவும், குளிர்ச்சியாகவும் வைத்திருங்கள். தேவைக்கு அதிகமாக ஆடைகளை அணிந்து கொள்ளாதீர்கள். ஆடைகள் தளர்ச்சியாக இருந்தாலே உடல் குளிர்ச்சியாக இருக்கும்.

பிரகாசம்: நீங்கள் படிக்கும் அறை போதிய வெளிச்சத்துடன் விசாலமாக இருக்க வேண்டியது அவசியம். "பென்சூயி" தத்துவத்தின்படி குறுகிய இடத்தில் இருந்தால் குறுகிய மூளையே இருக்கும். பரவலான விஸ்தாரமான இடத்தில் மூளையும் விஸ்தாரமாக செயல்படும்.

பொருத்தமான உடை: நேரத்திற்கேற்ப உடையணிவது ஒரு கலை. இதனை நாம் பழக்கத்தில் கொண்டு வருவதின் மூலம் நம் மூளை நல்ல பயிற்சியைப் பெறுகிறது. இப்படியாக விசேஷத்திற்கு ஏற்ற உடையை அணிவது ஒரு இயல்பாகிவிடும். அது உங்களின் அறிவுத் தெளிவையும், ஈடுபாட்டையும் காட்டும்.

நல்ல எண்ணங்கள்: நல்ல எண்ணங்கள் எப்பொழுதும் ஓர் அமைதியை ஏற்படுத்தும். பல விதமான குழப்பங்கள், தேவையற்ற சிந்தனைகளுக்கு மனதில் இடம் தரக்கூடாது. இது மூளையின் செயல்பாட்டை குறைத்து விடும். படிக்கும்போது பாடம் மனதில் பதியாது. மனதை ஒருநிலைப்படுத்தி விஷயத்தை மூளையில் பதிவு செய்து கொள்ள முடியாது. அதனால் எப்போதும் நல்ல எண்ணங்களை மனதில் ஓடவிடவேண்டும்.

நல்ல கனவுகள்: நிம்மதியான உறக்கம் மூளையை தெளிவுபெறச் செய்யும். நல்ல கனவுகள்தான் நிம்மதியான உறக்கத்தின் அடையாளம். இந்த நல்ல கனவுகள் எப்போது வரும்? ஆராய்ச்சியின் அடிப்படையில் 75 சதவீதம் கனவுகள் நம் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளையே பிரதிபலிக்கிறது என்கிறார்கள். நம் ஆழ் மனதில் பதிவாகும் விஷயங்கள் உருபெற்று கனவாகி வருகிறது. அதனால் தியான நிலையில் மனதை ஒருமைப்படுத்தி நல்ல விஷயங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். குறிப்பாக உறங்குவதற்கு முன் நல்ல விஷயங்களை மனதில் நினைக்க வேண்டும். பரிட்சை நேரத்தில் உங்கள் திறமை மீது நம்பிக்கை வைத்து படியுங்கள். மாறாக உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளும் போது இருக்கும் திறமைகளும் மங்கிவிடும். ஒரு இறுக்கமான சூழ்நிலையிலிருந்து வெளியில் வந்து சற்று ரிலாக்ஸாக இருங்கள். நல்ல நண்பர்களுடன் பேசுங்கள். டி.வி. பாருங்கள். பிடித்த உணவை சாப்பிடுங்கள். நீங்கள் நிச்சயம் வெற்றி பெற வேண்டும் என்று மூளைக்கு கட்டளையிடுங்கள். உங்கள் வெற்றிக்கு உண்டான வழிகளை மூளை தானே காட்டும்.

சகஜமான பேச்சுவார்த்தை: எவ்வளவுதான் படித்தாலும் பரிட்சை நேரத்தில் மனஇறுக்கம் என்பது எல்லோருக்கும்

ஏற்படும் ஒன்று. நம் மன இறுக்கத்தை எரிச்சலாக வெளிப்படுத்தி இருப்பவர்களை கவலையடைய செய்ய வேண்டாம். இதுபோன்ற நேரங்களில் நம்பிக்கையான நண்பர்களுடனோ அல்லது உங்கள் தாய் தந்தையுடனோ சகஜமாக மனம் விட்டு பேசுங்கள். மன இறுக்கத்துடன் படிக்கத் துவங்காதீர்கள். அது உங்களுக்கு சோர்வைத்தான் தரும். **ஒரு சமயத்தில் ஒரு வேளை:** ஒரு நேரத்தில் ஏதேனும் ஒரு வேலையைக் கவனமாக செய்ய வேண்டும். பல விஷயங்களை ஒன்றாக சேர்த்து படிக்கக் கூடாது. ஏதேனும் ஒன்றில் கவனம் செலுத்துவதன் மூலம் அதனை சீக்கிரமாக மனதில் பதிய வைத்துக் கொள்ள முடியும். **நேர இடைவெளி:** தொடர்ந்து படிப்பதால் நாம் சோர்வடைந்து விடுவோம். அதனால் படிக்கும் போது, போதிய இடைவெளி விட்டு மீண்டும் படிப்பைத் தொடருவது நல்லது.

முக்கியமான விஷயங்கள்: படிக்கும்போது நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயங்களை மட்டும் தனியே எழுதி வைத்துக் கொண்டு படிப்பது நல்லது. இப்படி முக்கியமான விஷயங்களை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால், அது சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களும் நினைவிக்கு வந்துவிடும். பிறகு நீங்கள் விடிய விடிய நோட்ஸ் எழுத தேவையில்லை.

வளைந்து கொடுங்கள்: அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்துப் படிப்பது நல்லதல்ல. இப்படிப்பட்ட நேரங்களில் மூளைக்குபோகும் ரத்த ஓட்டம் குறைகிறது. எனவே அடிக்கடி தோள்களையும், கைகளையும் அசைத்து உடலை சற்று ரிலாக்ஸாக்கிக் கொள்ள வேண்டும். நம் மூளையின் செயல்பாட்டிற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது. அதனால் உடலை ஆரோக்கியமாகவும், நல்ல நிலையிலும் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். நமக்கு பிடித்த இடங்களுக்கு சுற்றுலா சென்று வரலாம். நமக்கு அருகில் உள்ள இடங்களுக்கு காலார நடந்து செல்லலாம். இவற்றால் நம் மூளை சுறுசுறுப்பாக இயங்க நல்ல ரத்த ஓட்டம் கிடைப்பதுடன் நல்ல மனநிலையும் ஏற்படும்.

நினைவாற்றலை பெருக்க: நாம் செய்யும் மூளைக்கான பயிற்சிகளை விடியற்காலையில் செய்வது நல்லது. இப்படி செய்தால் அன்று முழுவதும் நல்ல நினைவாற்றலுடன் திகழலாம். மனப்பாடம் செய்ய வேண்டிய கடினமான பாடங்களை விடியற்காலையில் படித்தால் நன்கு நினைவில் நிற்கும்.

தூண்டுதல்: பரீட்சை நெருங்கும் நேரத்தில் மாணவர்கள் பல சந்தேகங்களுக்கு ஆளாகி குழப்ப நிலைக்குத் தள்ளப் படுகிறார்கள். இது அவர்களுடைய இயல்பான செயல்பாட்டைக் குறைத்து மூளையை சோர்வடையச் செய்து விடும். இது போன்ற சமயங்களில் படிக்க வேண்டிய பாடங்களை எப்படி படிப்பது என ஓர் அட்டவணை வகுத்துக் கொண்டு, ஒரு மாதத்திற்குள் இவற்றை முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தை மூளையில் பதிவு செய்துவிட வேண்டும். பிறகு பாருங்கள் உங்கள் மூளையின் வேகத்தை.

உற்சாகம்: உறுதியான எண்ணங்கள் உங்களை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும். மற்றவர்கள் செயல் படும் போதும் இதேப் போன்ற உறுதியான எண்ணங்களை அவர்களிடம் செலுத்துவதால் அவர்களும் வெற்றி பெற வாய்ப்புள்ளது. அதன் மூலம் உங்கள் தன்னம்பிக்கை வளரலாம். இந்த சிந்தனைகள் உங்களுக்கு பழக்கமாகலாம்.

கடந்த காலம்: நாம் இதுவரை படிக்காமல் காலத்தை கடத்தி விட்டோமே என்று நினைக்க வேண்டும். அவ்வாறான நினைப்பு உங்களை அவநம்பிக்கையை நோக்கி இழுத்துச் சென்றுவிடும். எனவே கிடைத்திருக்கும் நேரத்தை செவ்வனே பயன்படுத்தி வெற்றியை நோக்கி புறப்படுங்கள்.

தன்னம்பிக்கையுடன் இருங்கள்: உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். அது உங்களை பலப்படுத்தும். முரட்டுத்தனமான அவநம்பிக்கை சந்தேகங்கள் போன்றவற்றுக்கு மனதில் இடம் கொடுக்காதீர்கள். அது உங்களை பலவீனப்படுத்தி உங்கள் திறமைகளை வீணடித்துவிடும்.

சந்தேகப்படாதீர்கள்: உங்களுக்கு நம்பிக்கையூட்டும் 5 விஷயங்களை பெரிய எழுத்துக்களில் எழுதி உங்கள் டேபிள் மீது வைத்துக் கொள்ளுங்கள். அவை உங்கள் மனதில் ஆழப் பதிந்து உங்களை வெற்றியை நோக்கி செயல்பட வைக்கும்.

தோல்வியை ஏற்காதீர்கள்: தோல்வி என்பது வாழ்வின் இயல்பான ஒன்று. ஆகவே அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதுதான் முடிவு என்று நாம் முற்றுப்புள்ளி வைக்கும் வரை ஒரு விஷயம் முடிவாகாது. தோல்வியை ஒருபக்கம் தூக்கி வைத்துவிட்டு மீண்டும் வெற்றியை நோக்கி புறப்படுங்கள். இந்த தோல்வியில் கிடைத்த அனுபவங்கள் அடுத்து ஒரு உயர்ந்த வெற்றியைப் பெற உதவும்.

நல்ல எண்ணங்கள்: தோல்விக்கான காரணங்களைத் தேடிக் கொண்டிருப்பதை விட வெற்றிக்கான வழிகளைத் தேடலாம். விரக்தி. எதிர்மறை சிந்தனைகள், அவநம்பிக்கை முதலியவற்றை மனதை விட்டு அகற்றுங்கள். மனம் தெளிவு பெறும், தன்னம்பிக்கை கூடும்.

உணவு பழக்கம்: ஆரோக்கியமான சிந்தனைக்கு நல்ல உணவு பழக்கமும் காரணம். கார்போஹைட்ரைட், கொழுப்பு முதலியவற்றைத் தவிர்த்து புரதச் சத்து அதிகமுள்ள உணவுகளை உட்கொள்ளலாம். மீன் வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். இதில் உள்ள “பாஸ்பேடிடைகோலீன்” நினைவாற்றலைப் பெருக்கக் கூடியது.

ஒருநிலையில் வைத்துக்கொள்ளல்: பருவ நிலைக்கேற்ப உடல்நிலையும், மனமும் மாறக்கூடியது. உடல் சற்று மந்தமாக சோர்வடைந்திருக்கும்போது, நல்ல பழரசங்களையும் எளிமையான உணவையும் சாப்பிடுவது நல்லது.

லேசாக இருங்கள்: எப்போதும் உங்களை உற்சாகப்படுத்தக் கூடிய விஷயங்களை பேசுங்கள். மனதிற்கு மகிழ்வான பாடல்களை கேளுங்கள். ஏதேனும் ஒன்றை நினைத்து உங்களை நீங்களே வருத்தத்தில் ஆழ்த்திக் கொள்ளாதீர்கள்.

சக்தியளிக்கும் காலை உணவு: உங்களுடைய அன்றாட செயல்பாடுகள் சத்தான காலை உணவைப் பொருத்தே இருக்கும். உடலுக்கு பலத்தையளிக்கும் சத்தான உணவு வகைகளை காலை உணவாக உட்கொள்ளுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் காலை உணவை தவிர்க்காதீர்கள்.

உற்சாகமான வார்த்தைகள்: உங்களுடைய சிந்தனையை தூண்டி எண்ணங்களை விரைவுபடுத்தி செயல்படத் தூண்டுவது உங்கள் அருகில் இருப்பவர்களின் உற்சாகமான வார்த்தைகள்தான். அப்படிப்பட்டவர்கள் உங்கள் நண்பர்களாகவோ உங்கள் குடும்பத்தினர்களாகவோ இருக்கலாம். அவர்களை எப்போதும் தவிர்க்காதீர்கள். சோர்வான நேரத்தில் மற்றவர்களின் உற்சாகமான வார்த்தைகள் உங்களை நிச்சயம் ஊக்கப்படுத்தும்.

நடந்து முடிந்தவற்றை மறந்து விடுங்கள்: நடந்து முடிந்த பரிட்சையை, அதன் தோல்வியைப் பற்றி பெரிதாக விவாதித்துக் கொண்டிருக்காதீர்கள். அது உங்களின் நிகழ்காலத்தை கவலை மயமாக்கிவிடும். இதைப்பற்றி சமூகத்தினர் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்ற சிந்தனையை விடுங்கள். உங்கள் வெற்றிக்கு பின் அந்த சிந்தனைகள் மாறக்கூடியது. வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எதிர்காலத்தை நோக்கிச் செல்லுங்கள்.

நினைவில் நிறுத்துக: பரீட்சைக்கு படிக்க வேண்டிய புத்தகத்தை எடுத்து பக்கத்தைப் புரட்டி ஒரு பத்தியை படிக்கவும். பின் மூடி வைத்துவிட்டு படித்ததை நினைவிற்கு கொண்டு வாருங்கள். மீண்டும் படித்ததும் புத்தகத்தை மூடிவிட்டு நினைவிற்கு கொண்டு வாருங்கள். இப்படி செய்வதின் மூலம் மூளைக்கு நல்ல பயிற்சியை அளிக்க முடியும்.

தன்னைப்பற்றி நினைத்தல்: நீங்கள் இந்தப் பரிட்சையை உங்களுக்காகத் தான் எழுதுகிறீர்கள், இதன் முழு பலனையும் அனுபவிக்கப் போகும முதல் நபர் நீங்கள்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வேறு யாருக்காகவாவது ஒரு வேலையை செய்யும் போது அது

கடினமாக இருக்கும், அதுவே நமக்காக செய்யும்போது கடினமாகத் தெரியாது.

நீங்கள் தனிமனிதர் அல்ல: பரிட்சை நினைவுகள் உங்களை சஞ்சலத்தில் ஆழ்த்திவிடக்கூடாது. உங்களுக்கு உதவ ஆசிரியர், பெற்றோர், நண்பர்கள் என்று பலரும் உங்கள் அருகில் உள்ளதை நினைவில் கொண்டால், தானாகவே தைரியம் வரும். உங்களுக்கு முன் தேர்ச்சி பெற்றவர்கள் உதவியுடன் பரீட்சைக்கு தயாராகுங்கள்.

நினைவாற்றலை பலப்படுத்துங்கள்: தொடர்ந்து ஓரிரு வாரம் படிப்பதால் நினைவுகள் பலப்படும். மேலும் உங்களுடைய நினைவுகளை ஒருமுகப்படுத்த ஒரு சிறிய பயிற்சி. இரண்டு எண்ணும் வரை மூச்சை உள்ளிழுங்கள். எட்டு எண்ணும் வரை மூச்சை நிறுத்திக்கொள்ளுங்கள். நான்கு எண்ணும் வரை மூச்சை வெளியிடுங்கள். இதே பயிற்சியை நடந்து கொண்டும் செய்யலாம். மூச்சை உள்ளிழுத்தபடி இரண்டடி செல்லுங்கள். மேலும் மூச்சை நிறுத்திக்கொண்டே எட்டடி செல்லுங்கள். அடுத்த நான்கடி மூச்சை வெளியிடுங்கள். இந்தப் பயிற்சியை தொடர்ந்து செய்து வருவதால் உங்கள் நினைவாற்றலின் மாற்றங்களை உணரலாம்.

விலைமதிப்பற்ற நேரம்: பரீட்சை நெருங்கிவிட்ட கடைசி நேரம் மிகவும் விலைமதிப்பற்றது. அந்த நேரத்தில் புதிதாக ஏதேனும் மூளையில் புகுத்த முயற்சி செய்யாதீர்கள். ஏற்கனவே படித்தவற்றை மட்டும் மீண்டும் ஒரு முறை நினைவிற்கு கொண்டு வர முயலுங்கள். இது மட்டுமே உங்களுக்கு உதவும்.

மூச்சுப்பயிற்சி: பரிட்சை அல்லது போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன் தங்கள் பலத்தை பெருக்கி கொள்வது அவசியம். அதற்கு ஒரு சிறு பயிற்சி செய்யலாம். சாதாரணமாக உட்கார்ந்து கொண்டு, கைகளை வயிற்றின் மீது வைத்து லேசாக அழுத்தவும். காற்று நிறைந்த பலூனை அழுத்துவதுபோல அழுத்தவும். தொப்புளை சுற்றியுள்ள பகுதிகளை இப்படி லேசாக அழுத்திவிட்டு, வேகமாக மூச்சை வெளியேவிடுங்கள். பிறகு மூக்கின் வழியாக மூச்சை இழுத்து வயிற்றை மேற்புறமாக அழுத்துங்கள். இந்த பயிற்சியை 20 முறை திரும்பத்

திரும்பச் செய்யுங்கள். உங்கள் டென்ஷன் குறைந்து மிகவும் அமைதியாக இருப்பீர்கள்.

நன்றாக மென்று சாப்பிடுங்கள்: உடல் ஆரோக்கியத்திற்கு நல்ல ஜீரண சக்தி தேவை. உணவு நன்றாக ஜீரணமாக, மென்று சாப்பிட வேண்டியது அவசியமாகிறது. அஜீரண கோளாரால் மூளை மந்தகதியில் இயங்கும் வாய்ப்பிருக்கிறது. அதனால் உணவை மென்று சாப்பிட்டு ஜீரணத்திற்கு நாம் துணை புரிய வேண்டும். அதுமட்டுமல்லாமல், “நொறுங்கத் தின்றால் நூறு வயது” என்று கூறுவதற்கேற்ப ஆயுளும் கூடும்.

கண்ணாடியும்- நீங்களும்: இது சற்று வித்தியாசமாக இருந்தாலும் மிகவும் பயனுள்ளது. தினமும் காலையில் எழுந்து க்ண்ணாடி முன் நின்று சிரியுங்கள். கண்ணாடியை பார்த்து மேலும் சிரிப்பு வரும். இப்படி சிரிக்கும்போது உற்பத்தியாகும் வேதிப்பொருட்கள் உங்களை எப்போதும் இளமையாக இருக்க வைக்கும், தன்னம்பிக்கையை வளர்க்கும். இன்னும் பல நல்ல விஷயங்களை சாதிக்க இது உதவும். தினமும் 15 முறையாவது வாய் விட்டு சிரிக்க பழக்கிக் கொள்ளுங்கள். வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும்.

நேர்மறை மனிதர்களிடமே பழகுங்கள்: நீங்கள் எப்பொழுதும் நேர்மறை எண்ணங்கள் உள்ள மனிதர்களிடமே பழகுங்கள். அது உங்கள் நல்ல சிந்தனைகளை வலுப்படுத்தி மேலும் உங்களை வலிமையுள்ள மனிதராக மாற்றும். ஒரு வேளை உங்களுக்கு வேண்டியவர்கள் எதிர்மறை சிந்தனை உடையவராக இருந்தால் அவரை மாற்ற முயற்சி செய்யுங்கள். உங்களின் நல்ல எண்ணங்கள் செயலாவது அவர்களுக்கு ஒரு பாடமாக அமையும்.

அவமானத்தை ஏற்காதீர்கள்: யாரேனும் உங்களை அவமதித்து விட்டால் அதையே காரணமாகக் கொண்டு உங்களை தாழ்த்திக் கொள்ளாதீர்கள். உங்கள் அனுமதியின்றி உங்களுக்கு யாரும் எந்த நஷ்டமும் ஏற்படுத்த முடியாது. எதிர்மறை சம்பவங்களை உங்கள்

வாழ்வின் ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளுங்கள். தைரியத்துடன் போராடி வாழ்வில் வெற்றி காணுங்கள்.

படிக்கும் வழக்கம்: புத்தகங்கள் நமக்கு நல்ல நண்பகள் அவை நமக்கு பல விஷயங்களை இருந்த இடத்திலிருந்தே சொல்லுகின்றன. பெரிய தலைவர்கள், மகான்கள் இவர்களோடு பழகி இவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பெற இயலாமல் இருக்கிறோம். அவற்றை பாரபட்சமின்றி அனைவருக்கும் தருவது புத்தகங்கள்தான். இதன் மூலம் நல்ல நீதிகளையும், தத்துவங்களையும் பெறலாம்.

ரப்பர்பேண்ட்- பயிற்சி: எதிர்மறை சிந்தனைகள் எப்போதும் தோன்றாதிருக்க இந்த ரப்பர்பேண்ட் பயிற்சி உதவுகிறது. கையில் ஒரு ரப்பர் பேண்டை "போட்டு வைத்துக் கொள்ளுங்கள்". எப்பொழுதெல்லாம் தவறான எதிர் மறை சிந்தனை தோன்றுகிறதோ அப்பொழுதெல்லாம் அந்த ரப்பர்பேண்டை வேகமாக இழுத்துவிட்டுக் கொள்ளுங்கள். இதனால் வலியிருக்கும், ஆனால் நாளடைவில் எதிர்மறை சிந்தனைகள் நம் மனதை விட்டகன்று நல்ல எண்ணங்கள் தோன்றும்.

சாப்பாடும்- தூக்கமும்: சாப்பிட்டு மூன்று மணிநேரம் கழித்துதான் உறங்கச் செல்ல வேண்டும். இது உங்கள் ஜீரண சக்தியை மேம்படுத்தும். தூங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பு கை, கால்களை ஒரு மணி நேரம் தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள். இது ஆழ்ந்த உறக்கத்திற்கு துணை புரியும்.

உங்களுக்குள் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்: உங்கள் மூளை உங்கள் கட்டளைப்படி இயங்கும் ஒரு உறுப்பு. இதனை பரிசோதிக்க கீழே தரப்பட்டுள்ளவற்றை முயற்சி செய்யுங்கள்.

• படுக்க செல்லும் முன் பத்து நிமிடம் நாற்காலியில் ஒய்வாக அமருங்கள்.

• கண்களை மூடி கைகளை மெதுவாக முழங்கால்களின் மீது வையுங்கள்.

• சில நிமிடங்கள் வரை ஆழ்ந்து மூச்சு விடுங்கள்.

• கடைசியில் 20 முறை கீழே தரப்பட்டுள்ள வார்த்தைகள் திரும்பத் திரும்பச் செல்லுங்கள்.

“நான் (விரும்பும் நேரத்தில்) புத்துணர்ச்சியுடன் காலையில் எழுவேன்”

இதை மனதில் வைத்தபின் காலையில் எழுவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். பின் உறங்கச் செல்லுங்கள். என்ன ஆச்சர்யம்! விடியற்காலை புதுத்தெம்புடன் நீங்கள் விரும்பிய நேரத்தில் எழுந்திருப்பீர்கள். இதுதான் உங்கள் மூளையின் அபார செயல்பாடு. பிறகு இதுவே உங்களுக்கு வழக்கமாகிவிடும். அலாரம் தேவைப்படாது.

வாழ்வின் லட்சியம்: இலட்சியம் கொண்ட வாழ்க்கை மனிதனை ஒரு உற்சாகமான பாதையில் கொண்டு செல்கிறது. அனைவருக்கும் வாழ்வில் ஒரு லட்சியம் தேவை. அதை நிறைவேற்ற நாம் உழைக்க வேண்டியிருக்கிறது. அது நிறைவேறும் போது வாழ்க்கை முழுமையடைகிறது. நாம் வருங்காலத்தில் இப்படியாக வேண்டும் என்ற முனைப்போடு செயல்படும்போது நம் உழைப்பும் முன்னேற்றமும் ஒன்றை நோக்கியே செயல்படுகிறது. நம் மூளை எப்போதும் நம் லட்சியத்தை நோக்கியே தன் முழு பலத்தையும் பிரயோகித்து நமக்கு வெற்றியைத் தருகிறது.

மனதை ஒரு நிலைப்படுத்துதல்: மனதை ஒரு நிலைப்படுத்த தியானம் ஒரு சிறந்த வழி. ஆனால் அதற்கும் மனதை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சி தேவை. இதற்கு ஒரு எளிய வழி உள்ளது. நாம் நடக்கும் போது காலடிகளை கணக்கிட்டுக் கொண்டே செல்வது. இவ்வகையான பயிற்சி மனதை ஒருநிலைப்படுத்த அடித்தளமாக அமையும்.

எண்ணங்களை தீர்மானித்தல்: எண்ணங்களை தீர்மானிப்பது சுயமாகவும், மற்றவர்களின் எண்ணப்படியும் நிகழலாம். நம் சுயசிந்தனையுடன் மற்றவர்களின் கருத்துக்களையும் சேர்த்து ஆராய்ந்து நல்லவற்றை, நமக்கு ஏற்றதை தீர்மானிக்கும் பொறுப்பை நம் மூளையிட விட வேண்டும். அது நமக்கு சாதகமானதையே தீர்மானிக்கும். இப்படியாக நல்ல தீர்மானங்களை எடுக்க மூளைக்கு பயிற்சியளிக்க வேண்டும்.

சமூக மரியாதை: நாம் நல்ல ஒழுக்கத்துடன் மற்றவர்கள் நம்மை மதிக்கும் செயல்களையே செய்ய வேண்டும். தவறான செயல்களை செய்து சமூக மதிப்பிலிருந்து தாழ்ந்து விடக்கூடாது. அந்த நிலையில் நம்முடைய தன்னம்பிக்கை சிதைந்து போகும். எப்போதும் நாம் மரியாதையும் இருப்பதாக கற்பனை செய்து கொள்ள வேண்டும். நம் மூளை அந்த கற்பனை வழியில் செயல்பட்டு நம்மை மதிப்பிற்குரியவர்களாக்கி விடும்.

வாய் வார்த்தை: ஏதேனும் ஒரு விஷயத்தை நினைவுபடுத்த சிரமப்படுகிறீர்களா? யாருடைய பெயராவது மறந்துவிட்டதா? அதிக சிரமப்பட்டு மூளையை கசக்க வேண்டாம். கொஞ்சம் ரிலாக்ஸாகிவிட்டு உயிரெழுத்து, மெய் எழுத்துக்களை ஒருமுறை கத்தி சொல்லுங்கள். ஏதேனும் ஓர் எழுத்தை உச்சரிக்கும்போது, சட்டென்று நீங்கள் மறந்த விஷயம் நினைவுக்கு வரும். நீங்கள் மறந்த பெயரையுடைய நபரை கற்பனை செய்து பாருங்கள். அவர் வேகமாக சாலையை கடந்து சென்று கொண்டிருக்கிறார். அவருக்கு வெகு அருகில் வாகனம் வந்து விட்டது. அவரை அழைத்து எச்சரிக்கை செய்ய வேண்டும் என நினைத்துக்கொள்ளுங்கள். அவர் பெயர் சட்டென்று வாயில் வந்துவிடும்.

நேர்காணல்: நேர்காணலின் போது தகுந்த கேள்விகளை நினைவில் வைத்துக்கொள்வது அவசியமான விஷயம். அதற்கு சில வழிகள் உள்ளன. முதலில் கேட்க வேண்டிய கேள்விகளை வரிசைப்படுத்தி எழுதி வைத்துக் கொள்ளுங்கள். யிறகு அதை இரண்டு பகுதிகளாக பிரித்து கொள்ளுங்கள். ஒவ்வொரு பகுதியிலும் பத்து கேள்விகள் இருக்குமாறு பார்த்து கொள்ளுங்கள். ஒவ்வொரு கேள்வியின் ஆரம்பத்தையும் எழுதி அதை மட்டும் மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். கேள்வியின் ஆரம்பம் தெரிந்தால் மற்றதும் தானே நினைவிற்கு வந்துவிடும் அல்லது கேள்விகளை தனித்தனியே பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் கேள்விகளை வைத்துக்கொள்ளுங்கள். தொழில்கல்வி, பொதுச்சேவை என்று தலைப்பட்டு அந்த தலைப்புகளை மட்டும் கவனத்தில் கொண்டால் கேள்விகள் தானே நினைவுக்கு வந்துவிடும்.

சீட்டுக்கட்டில் நினைவாற்றல்: சீட்டு விளையாடுவதில் நினைவாற்றலே ஆதாரமாக உள்ளது. இதில் சாதாரணமாக முன்னால் உள்ள சீட்டு என்ன என்பது மறந்துவிடும். அதனை நினைவில் கொள்ள எளிய வழி ஒன்று உள்ளது. ஒவ்வொரு சீட்டிற்கும் ஒரு பெயர் கொடுத்து விடுங்கள். உதாரணமாக ராணி சீட்டிற்கு ஐஸ்வர்யா ராய் என்றும், ராஜா சீட்டிற்கு அமிதாப்பச்சன் என்றும் நினைத்துக் கொள்ளுங்கள். நினைவு வைத்துக் கொள்வது சுலபமாகிவிடும். ஒவ்வொரு சீட்டுக்கும் உங்களுக்கு பிடித்த பழக்கப்பட்ட பெயரை கொடுத்து நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள். அந்தந்த பெயருக்குண்டான சீட்டு சட்டென்று நினைவிற்கு வரும்.

NINTH PART
ஒன்பதாம் பாகம் (அனுபந்தம் III)

நீங்கள் இதில் கற்றுக் கொள்பவை-

- ஆங்கிலம் கற்பதின் சிறப்பை பற்றிய விளக்கம்.
- ஒவ்வொரு தலைப்பும் உங்களை எளிமையாக சரளமாக ஆங்கிலம் கற்க தயார் செய்யும் வழிகாட்டியாக (கைடு) இருக்கும்.
- உங்கள் தயக்கத்தை போக்கக்கூடிய விஷயங்கள்.

<u>முக்கியக் குறிப்பு</u>

ஒன்பதாம் பாகத்தில் ஆங்கிலம் கற்பதில் ஏற்படும் நன்மைகள், தேவைகள், முறைகள் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளன. இது படிப்பவர்களுக்கு ஒரு தூண்டுகோலாக செயல்படும். இதில் உள்ள ஒவ்வொரு தலைப்பும் உங்கள் முயற்சியை வெற்றி பெறச் செய்ய ஆதாரமாக அமையும். காலையிழந்த ஒருவனுக்கு பலமான கட்டை கிடைத்தால் அவன் மற்றவரைப்போல எழுந்து நடப்பதில்லையா, அப்படித்தான் இதுவும். உங்கள் மனதின் குழப்பங்களை நீக்கி ஒவ்வொரு படியாக வெற்றியின் உச்சிக்கே அழைத்துச் சென்றுவிடும். பிறகு ஆங்கிலம் பேசுவதில் உங்களை விட சிறந்தவர் வேறு யாருமே இருக்க முடியாது என்ற நிலையை விரைவில் அடைந்து விடலாம்.

ஆங்கிலம் கற்பதற்கான சிறந்த வழிமுறைகள்

நம்முடைய மூளை எப்படி செயல்படுகிறது?

சில நேரங்களில் ஏதேனும் புதிய பொருளை எங்காவது வைத்துவிட்டு வீடு முழுவதும் தேடிக் கொண்டிருப்போம். அதை எங்கே வைத்தோம் என்றே நினைவிற்கு வராது. இந்த மாதிரி எதனால் வருகிறது?

மூளையின் ஒரு பாகம் இப்படிப்பட்ட விஷயங்களை பதிவு செய்து வைத்துக் கொள்கிறது. நாம் நம்முடைய மூளையை ஒழுங்காக வடிவமைத்து (ஃப்ரோக்கிராமிங்) வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஒரு பொருளை தேடும் முன் மூளையின் பல கேள்விகளுக்கு சரியான பதிலைத் தரவேண்டும். அப்போது பதிவு செய்த விஷயம் பளிச்சென்று வெளியே வரும். அது எப்படி என்கிறீர்களா? ஒரு கம்ப்யூட்டர் பல விஷயங்களை பதிவு செய்து வைத்துக் கொள்கிறது. சரியான பட்டனை தட்டினால் விடை திரையில் வரும். அல்லது அதற்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதை நாம் தீர்த்து வைக்கும் பட்சத்தில் விடை கிடைக்கும். அதே முறையில் தான் நம் மூளையும் செயல்படுகிறது.

நம்முடைய மூளை ஒரு காந்தம் போன்றது. நிகழ்வுகளை உடனே பதிவு செய்து வைத்துக் கொள்ளும். அந்த நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அருகில் வரும் போது நினைவுகள் வெளிவரும். தொலைந்த பொருள், எங்கே, எப்போது எந்த நிலையில் தொலைந்தது. அப்போது சுற்றியிருந்த சூழ்நிலை இவற்றை நினைவுக்கு கொண்டு வந்தால் தொலைந்த பொருள் எளிதில் கிடைக்கும். நம்முடைய மூளை எப்படி செயல்படுகிறது என்பதை தெரிந்து கொண்டால், இயக்குவது சுலபமல்லவா?

வெற்றியை நோக்கி:

ஒரே மாதத்தில் ஆங்கிலம் கற்றுக்கொண்டு விட்டதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். இப்போது உங்களுக்கு ஏற்படும் பெருமையையும், மகிழ்ச்சியையும் சற்று நினைத்துப் பாருங்கள். அந்த சந்தோஷ நினைப்பே உங்களை உழைப்பை நோக்கி அழைத்துச் சென்று விடும். விரைவில் ஆங்கிலம் கற்று தேர்ச்சி பெற உதவும். ஆங்கிலம் ஏன்? எதற்காக? எப்படி கற்க வேண்டும்?. இதனால் என்ன அனுகூலம்? என்பதை உங்கள் நண்பர்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் ஒரு கட்டுரை எழுதுங்கள்.

தோல்வியே வெற்றிபடிகளாகட்டும்:

உங்களால் ஆங்கிலம் சரளமாக பேசமுடியவில்லை. ஏதேதோ பேச நினைத்து அமைதியாகி விடுகிறீர்களா அல்லது பேசத் தெரிந்து தவறாகி விடுமோ என்ற தடுமாற்றமா? இப்படிப்பட்டவர்கள்தான் எங்களுக்குத் தேவை. சற்று யோசியுங்கள். இந்த நிலை நீடிக்க வேண்டுமா? இதனை மாற்ற வழி இருக்கும்போது ஏன் நீங்கள் முயற்சி செய்யக்கூடாது. ஆங்கிலம் பேசத் தெரியவில்லையே என்ற தாழ்வுமனப்பான்மையுடன் எத்தனை காலம் வாழவிரும்புகிறீர்கள்? ஒரு விஷயத்தைக் கற்றுக்கொள்ள நமக்கு ஆர்வம் மட்டுமே போதுமானதல்ல. நல்ல வழிகாட்டியும் தேவை. இரண்டும் ஒன்று சேரும்போது நம் எண்ணம் ஈடேறிவிடும். உங்கள் லட்சியம் ஈடேறிக் கொண்டிருப்பதை நினைத்து சந்தோஷப்படுங்கள். அந்த மகிழ்ச்சி உங்களை மேலும் வெற்றி பெறச் செய்யும்.

ஒரு சாதாரண மனிதன் கூட ஏதோ ஒரு உந்துதலில் பெரிய வெற்றிகளை சாதிக்க முடியும். சாதனைக்காக காலத்தை எதிர்பார்த்து காத்திருக்க முடியாது. வாழ்வின் ஒவ்வொரு கணமும் விலை மதிக்க முடியாதது. இழந்தால் மீண்டும் வராதது. எதிர்காலத்தை ஒளிமயமாக்க சிறந்த லட்சியங்களை நோக்கி இன்றே நடைபோடுங்கள். உங்கள் பாதையில் பல இடையூறுகள் வரலாம். அவற்றைக் கடந்து லட்சியத்தை அடையும் போதுதான் நீங்கள் வெற்றி பெற்ற மனிதராக கருதப்படுகிறீர்கள்.

இதுவரை நீங்கள் கடந்து வந்த பாதையில் இருந்த இடையூறுகள் எப்படி கடந்தீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தடைகளை வென்று வரும்போது நீங்கள் புதிய தெம்புடன், புதிய மனிதராக உருவெடுத்திருப்பதை உணர்வீர்கள். அந்த புதிய மனிதருக்கு எதையும் சாதிக்கும் வலிமை கூடியிருப்பதை காண்பீர்கள். உங்கள் லட்சியத்தை அடைந்துவிட்டதாக கற்பனை செய்து கொண்டே பயணத்தை தொடருங்கள். தடைகளை எதிர்க்கும் துணிவு தானே வந்துவிடும். என்னை எந்த சக்தியும் தடுத்து நிறுத்த முடியாது என்ற எண்ணத்தை மனதில் வையுங்கள். புதிய சக்தி உங்களுக்குள் உருவெடுப்பதை காண்பீர்கள். ஆங்கிலம் கற்றே தீரவேண்டும் என்ற லட்சியத்தை மையமாகக் கொண்டு உழைக்க முற்படுங்கள். இலட்சியத்தை தொலைத்தவர்களுக்கு கண்ணில் தென்படும் வழிகள் அத்தனையும் வீண்தான்.

துயரத்தைப் போக்கும் மருந்து:

சுக, துக்கங்களை மையமாகக் கொண்டதுதான் வாழ்க்கை. இதில் எதையுமே நம்மால் தவிர்க்க முடியாது. நம்முடைய துக்கங்களை போக்கிக்கொள்ள நாம் பல வழிகளை வைத்திருக்கிறோம். குடிப்பது, சிலர் சிகரெட் பிடிப்பது போன்ற வழிகளை வைத்திருக்கிறார்கள். மேலும் சிலர் நண்பர்களுடன் பேசுவது, ஊர்சுற்றுவது, நல்ல இசையை கேட்பது என்று ஆரம்பித்து விடுகிறார்கள். இதையெல்லாம் விட்டு நாம் ஏன் ஒரு உபயோகமான செயலை செய்து வாழ்வை வளப்படுத்திக் கொள்ள முயலக் கூடாது. நல்ல புத்தகங்களை படிப்பது, ஏதேனும் ஒரு விஷயத்தை கற்பது, இதுவும் உங்கள் மனபாரத்தை குறைக்கும் மருந்தாகலாம் அல்லவா?

அர்த்தமுள்ள வாழ்க்கை:

வாழ்க்கை என்பது எல்லா தரப்பட்ட மனிதனுக்கும் ஒன்றுதான். ஒரு சிலர் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்கிறார்கள். ஒரு சிலர் காலத்தை விரயமாக்கி விட்டு போய் சேருகிறார்கள். நம் வாழ்க்கை எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் அதனை

மாற்றியமைத்துக் கொள்ள நம்மால் முடியும். அப்படியானால் அதற்கு முயற்சிக்கலாம் அல்லவா?

உங்களுக்கு எது சிறந்தது? உங்களை மேன்மைப்படுத்தக்கூடிய அம்சங்கள் என்னவென்று தெரிந்து அதனை உங்கள் வாழ்வோடு இணைத்துக் கொள்ளலாம் அல்லவா? சுகம் - துக்கம் இரண்டையும் இரு நண்பர்களாக பாவித்துக் கொள்வோம். இருவரையும் நாம் தள்ளமுடியாது. என்ன முயற்சித்தாலும் நம் குறைகளை நீக்கவே முடியாது என்று நினைத்து விட்டால் அந்த குறைகள் எப்போதும் நீங்கப்போவதில்லை.

ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களை முழுமையை நோக்கி அழைத்துப் போவது குறைகள்தான். குறைகளை நிவர்த்தி செய்வதுதான் வாழ்க்கை. அனைத்துமே முழுமையாக இருந்து விட்டால் வாழ்நாளில் நாம் செய்வதற்கு எதுவுமே இல்லாமல் போய்விடும். வாழ்வில் சுவையிருக்காது. பசித்தவன் மட்டுமே உணவைத் தேடிச் செல்கிறான். வயிறு நிறைந்தவுடன் அமைதியாகிவிடுகிறான். பசித்த வயிறுக்கும் உணவுக்கும் இடையில் உள்ள தேடல் ஒன்றே வாழ்வின் முக்கிய அம்சமாகிவிடுகிறது. பசித்தவனுக்காக மட்டுமே உணவு படைக்கப்படுகிறது. அவனால் மட்டுமே உணவின் சுவையை அறியமுடிகிறது. மனிதனுக்காக படைக்கப்பட்ட வாழ்க்கையும் அவ்விதமே. அதன் பொருளும் அவ்வண்ணமே உணரப்படுகிறது. வாழ்க்கையின் எந்த கால கட்டத்திலும் நம் குறைகளை நீக்கிக்கொள்ள முயற்சிக்கலாம்.

உங்கள் கவனத்திற்கு:

நமக்குள் ஆங்கிலம் கற்கும் ஆர்வம் இருந்தாலும் நாம் அதை ஏதோ சில காரணங்களுக்காக தள்ளிப்போட்டுக் கொண்டே வருகிறோம். அது பின்னால் பல பிரச்சினைகளுக்கு வாய்ப்பாகி விடுகிறது. பல நல்ல வாய்ப்புகளை நம்மிடமிருந்து தட்டிப்பறித்துச் சென்றுவிடுகிறது. பிறகு வருத்தப்பட்டு, ஏதோ ஒரு கட்டாயத்துடன் ஆங்கிலம் படிக்க முற்படுவோம். இப்போதே நமக்குள்ள நேரத்தைப் பயன்படுத்தி ஆங்கிலம் கற்க

முற்படுவோமேயானால், அது பிற்காலத்தில் நம்மை தகுதியுள்ள மனிதராக மாற்றிவிடும். சமூகத்தில் கற்றவர் மத்தியில் ஓர் உயர்ந்த அந்தஸ்தையும் ஏற்படுத்தி தரும். இவையெல்லாம் ஒரே நாளில் சாத்தியமா? தொடர்முயற்சி தேவையல்லவா? அந்த முயற்சியை இப்போதிலிருந்து ஆரம்பித்தால் என்ன?

அப்படி என்ன தவிர்க்க முடியாத தடைகள் ஆங்கிலம் கற்பதற்கு உங்களுக்கு வந்துவிடப்போகிறது? ஒன்றுமேயில்லை. உங்கள் எண்ணங்களும், தள்ளிப்போடும் மனப்பான்மையும், சோம்பேறித்தனமும்தான் காரணம் என்று கூறினால் ஒப்புக்கொள்வீர்களா?

கீழே இருக்கும் சில கேள்விகளுக்கு விடை தாருங்கள்.

1. ஆங்கிலம் கற்பதில் இதுவரை நான் ஏன் கவனம் செலுத்தவில்லை? இதுவரை எது தடையாக இருந்தது.
2. உண்மையிலேயே தடைகள் இருந்திருந்தால் அதே தடைகள் இப்போது உள்ளதா? அல்லது மற்ற தடைகளை நீக்க வழி உள்ளதா?
3. நான் என்னை மாற்றிக்கொள்ள முயற்சி செய்யாவிட்டால் அதனால் ஏற்படும் நஷ்டங்கள் என்ன?
4. இப்பொழுது இந்த வேலையை நான் தொடங்கினால் அதனால் ஏற்படும் சந்தோஷம் எவ்வளவு?
5. இந்த மகிழ்ச்சியை நிலைநிறுத்திக் கொள்ள நாம் ஏன் முயற்சி மேற்கொள்ளக்கூடாது?

இதுவரை ஏற்பட்ட நஷ்டங்கள் அனைத்துமே நம்முடைய அலட்சியத்தால் ஏற்பட்டது. நமக்கென்று சில குறை நிறைகள் உண்டு. ஒரு சுயவாழ்க்கை, வளர்ச்சி இவையும் உண்டு. வாழ்க்கை ஓட்டத்தில் நம்மை நாம் மறந்து நம்மை நமக்கே அடையாளம் தெரியாமல் ஆக்கிக் கொள்ளக்கூடாது. நம் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. அதை அடுத்தவர் யாரும் தட்டிப்பறிக்க முடியாது. கூர்ந்து சிந்தித்துப் பார்த்தால் நம் வளர்ச்சிக்கு நாமே முதல் தடையாக இருப்பது புரியும்.

மகிழ்ச்சிக்கு வழி:

நீங்கள் உங்களையே எப்படி மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள முடியும்?

நீங்கள் மகிழ்ச்சியாக இருந்த நாட்களை எண்ணிப்பாருங்கள். அதேப்போன்று இப்பொழுது ஏன் இல்லை என்று எண்ணுகிறீர்களா. இந்த சுமைகளுக்கு என்ன காரணம்? இது தெரிந்தால் மீண்டும் புத்துணர்ச்சியைப் பெறலாம். உங்கள் வாழ்வின் மகிழ்ச்சியான சம்பவம், அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சி. இவற்றை நினைக்கும் மாத்திரத்தில் மின்னலென மகிழ்ச்சி உங்களை தொற்றிக் கொள்வதை காணலாம், இந்த மகிழ்ச்சி உங்களுக்கு புது தெம்பை ஏற்படுத்தி தற்போதுள்ள பிரச்சினைகளை விட்டு விலகிவர வழி வகுக்கும்.

இதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு ரகசியங்களை பின்பற்றிப் பாருங்கள்-

1. உங்கள் சிந்தனையை ஓரிடத்தில் வைத்து மகிழ்ச்சியான சூழ்நிலையை நினைத்துப் பாருங்கள். உங்களுக்குள் ஓர் மாற்றம் ஏற்படுவதை உணர்வீர்கள்.
2. மானசீகமாக மகிழ்ச்சியின் சூழ்நிலைக்குள் செல்லுங்கள். இந்த இறுக்கமான சூழ்நிலையை மாற்றியமைக்கும் சக்தி உங்களுக்குள் பிறந்துவிடும்.

மனோபாவமும், உடல் மாற்றங்களும்:

நம் உடலில் மனதில் ஏற்படும் கஷ்டங்களுக்கேற்ப நம் முகபாவமும், செய்கைகளும் மாறும். இது இயல்பானது, கோபத்திலும், வேதனையிலும், மன இறுக்கத்திலும் அதற்கேற்றாற்போல மாறக்கூடியதுதான் முகபாவங்கள். இந்த முகபாவங்களுக்கும், உடலுக்கும் சம்பந்தம் இருக்கிறது.

இதனை மாற்ற தியானம் செய்யலாம். நல்ல சங்கீதம் கேட்கலாம். இவற்றின் மூலம் மனம் சற்று நிதானத்திற்கு வந்து ஒருநிலைப்படும். நாம் மகிழ்ச்சியில் இருக்கும்போது நம்மிடம் இருக்கும் திடமான சிந்தனைகள். இப்படிப்பட்ட இறுக்கமான சூழ்நிலையில் எதிர்மறை சிந்தனைகளாக மாறிவிடும். எந்த நிலையிலும் முகபாவங்களை ஒரே

மாதிரியாக வைத்துக்கொள்ள பழக்கிக் கொள்ளுங்கள். பாவங்களுக்கு ஏற்ப மனநிலையும் மாறக்கூடியது.

புன்சிரிப்பு:

எப்போதும் புன்சிரிப்புடன் இருக்க கற்றுக்கொள்ளுங்கள். தினமும் ஐந்து நிமிடம் கண்ணாடி முன் நின்று உங்கள் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். பார்க்க சற்று வித்தியாசமாக இருந்தாலும், இதை ஒரு பயிற்சியாக நினைத்து செய்யலாம். பிறகு புன்சிரிப்பு உங்கள் முகத்தை விட்டகலாமல் நின்றுவிடும். மாறாத புன்சிரிப்பு முகத்திற்கு ஒரு புதுபொலிவைத் தரும். இதேப்போல ஒரு ஐந்து நிமிடம் கண்ணாடி முன் ஆங்கிலம் பேசி பழகுங்கள் அதுவும் வழக்கமாகிவிடும்.

சென்றதை நினையுங்கள்:

நமக்கு ஆங்கிலம் பேசத் தெரியவில்லையே என்று நீங்கள் எப்பொழுதாவது வருத்தப்பட்டிருப்பீர்கள். தவறான ஆங்கிலத்தில் பேசி சில நேரங்களில் கேலிக்கு ஆளாகி இருப்பீர்கள். மீண்டும் அப்படி ஒரு நிலைமை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பல்லவா? இந்த நிலைமையை மாற்றி உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்.

நாம் நினைப்பது எதிர்பார்த்தவாரே நடந்தால் மகிழ்ச்சி. சில நேரங்களில் நாம் எதிர்பார்க்கும் நண்பர் குறித்த நேரத்தில் வராமல் போக நேரிடும். அப்போது மனம் தேவையில்லாதவற்றை எல்லாம் எண்ணி கலங்கும். வரும் வழியில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டதா என்றெல்லாம் எண்ணும்.

இப்படிப்பட்ட நேரங்களில் எப்போதாவது நல்லதை நினைத்திருப்பீர்களா? அவன் எனக்கு பரிசுப்பொருள் வாங்கச் சென்றிருக்கலாம். வேறு யாரையாவது வழியில் சந்திக்க நேர்ந்திருக்கலாம் என்பது போன்ற நினைவுகள் குறைவுதான்.

1. நம்முடைய சிந்தனைகள் நம் முகபாவத்தை மாற்றிவிடும்.
2. நம்முடைய பாவங்கள், சிந்தனைகள், எண்ணம் ஆகியவை நம்முடைய செயல்களையும் மாற்றிவிடுகிறது.

3. தடுமாறும் மனது, கேள்விக்கு சரியான விடை கிடைத்ததும் நிலைபெறுகிறது.

அகத்தின் அழகு முகத்தில்:

உங்களுடைய எண்ணங்களுக்கேற்ப முகபாவம் மாறும் என்பதோடல்லாமல் உடலிலும் அந்த மாற்றங்கள் தோன்றலாம். மகிழ்ச்சியான சூழலில் இருக்கும் உடல்நிலை, கவலையான சூழ்நிலையில் இருப்பதில்லை. உடலும், மனமும் ஒரே நிலையில் இருக்கும்போதுதான் திடமான எண்ணங்கள் தோன்றும்.

எண்ணமும் செயலும்:

நம் எண்ணத்திற்கேற்பவே அனைத்தும் செயலாகிறது என்பது வாழ்வியல் உண்மை. எனக்கு நன்றாக ஆங்கிலம் பேசவரும் என்ற திடமான நம்பிக்கை உங்களை ஒரு மேதையாக்கிவிடும். பயிற்சி ஒரு பக்கம் இருந்தாலும், மனநிலை அதற்கு தூண்டுகோலாக இருக்கிறது. நான் என்ன தான் பயிற்சி பெற்றாலும் பேசும்போது தடுமாறும் என நினைத்தால் நிச்சயமாக அப்படியே ஆகும். பயப்பட வேண்டிய அவசியமில்லை. கொஞ்சம் தவறாகிவிட்டால் என்ன உயிரா போய்விடும். உங்கள் வெற்றியை நோக்கி நீங்கள் செல்லும் வழியில் சில இடையூறுகள் ஏற்படலாம். அது நிரந்தரமல்ல. உங்கள் வெற்றியை நோக்கி நடைபோடுங்கள் நிச்சயம் ஒருநாள் ஓர் உயர்ந்த நிலையில் உங்களை காண்பீர்கள்.

சரியான கேள்வி- சரியான பதில்:

நாம் கோபத்தின் வேகத்தில் செய்யும் செயல்களை நம் மூளை நிச்சயம் தடுக்கும். அதனால் நாம் ஒரு காரியத்தை செய்யும் முன் மூளையின் கேள்விகளுக்கு சரியான பதிலளிக்க வேண்டியது அவசியம். நம்மை பல சிக்கலில் இருந்து அது காப்பாற்றும்.

ஒரு புது மாணவனை ஒரு முரட்டு மாணவன் அடித்துவிட்டான். உடனே அந்த மாணவன் அந்த முரட்டு மாணவனை பழிவாங்க நினைத்தான். ஒரு நாள் கையில் துப்பாக்கியுடன் சென்று அந்த மாணவனை சுட நினைத்தான். அவனை நோக்கி துப்பாக்கியை உயர்த்தினான். அப்போது அவனுடைய மூளை ஒரு கேள்வி

கேட்டது. அவன் இறந்துவிட்டால் நீ என்ன கதியாவாய்? என்று அப்போது அவன் மனக்கண் முன் ஜெயில், தூக்குக்கயிறு முதலியவை வந்தது. அவன் சுதாரித்துக் கொண்டு எதிரிலிருந்த மரத்தை சுட்டு தன் ஆத்திரத்தை தணித்துக் கொண்டான். அந்த சிறுவனின் பெயர் போ.ஜாக்ஸன். ஒரு சிறு கோபத்தால் தன் எதிர்காலத்தையே இருட்டாக்கிக் கொள்ள இருந்தவன். சரியான தீர்மானத்தால் எதிர்காலத்தில் ஒரு புகழ்பெற்ற விளையாட்டு வீரனாக பிரகாசித்தான்.

நல்ல பழக்கங்களில் மனதை செலுத்துதல்:

போதை, கடன், புகை போன்ற தீயப்பழக்கங்களிலிருந்து உங்களை விலக்கி ஒரு நல்ல பழக்கங்களில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். அது உங்களை ஒரு திறமையுள்ள மனிதனாக மாற்றி உங்கள் எதிர் காலத்தை ஒளிமயமாக்கும்.

1. ஆங்கிலம் கற்பதில் உள்ள எதிர்மறை கருத்துக்களை நீக்கி திடமான கருத்துக்களை மனதில் பதிவு செய்யுங்கள்.
2. உங்கள் மனதிற்கு மகிழ்வைத் தரும் விஷயங்களுடன் ஆங்கிலத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். தினமும் உங்களின் மகிழ்ச்சியான சம்பவங்களை, அனுபவங்களை எழுதி வையுங்கள்.

இனிய பாடல் கேட்பது, நண்பர்களுடன் சேர்ந்து சாப்பிடுவது, மலர்களால் வீட்டை அலங்கரிப்பது, நகைச்சுவை நாடகங்கள் பார்ப்பது, நல்ல இசையை இசைப்பது போன்ற மகிழ்ச்சி தரும் விஷயங்களுடன் ஆங்கிலம் கற்பதையும் சேர்த்துக் கொண்டால் கற்பது எளிதாகிவிடும்.

ஆங்கிலம் கற்பதில் உள்ள மகிழ்ச்சியை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளலாம். டைரியில் எழுதி வைக்கலாம். கற்பதில் சோர்வு ஏற்பட்டால் இதுவரை எழுதிவைத்த சந்தோஷ அனுபவங்களை மீண்டும் படித்து பார்ப்பதின் மூலம் ஒரு புத்துணர்ச்சியைப் பெறலாம்.

முயன்றால் முடியும்:

உலக சாதனைகள் அனைத்தும் உடலால் நிகழ்த்தப்பட்டதுபோல தோன்றினாலும், அது உண்மையில் மூளையின் வேகத்தால் நிகழ்த்தப்பட்டவையே. நாலு நிமிடத்தில் ஒரு மைல் தூரத்தை கடக்க முடியாது என்ற நிலையில் ரோஜர் பைனிஸ்டர் மூன்று நிமிடம் 50 செகண்டில் கடந்துவிட்டார். இந்த சாத்தியத்தை ஏற்படுத்தியது யார்? அவருடைய மூளைதான். எதிலும் நிச்சயம் வெற்றிபெற முடியும் என்ற எண்ணம் ஒன்றே மனிதனை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்கிறது. அப்படி இருக்கையில் நீங்கள் ஏன் ஆங்கிலம் கற்க முற்படக்கூடாது?

உலகின் பெரிய சாதனைகளுடன் ஒப்பிடும்போது, ஆங்கிலம் கற்பது ஒரு சாதாரண விஷயம்தான். நான் படிக்கும்போது ஆங்கிலம் கற்கவில்லை. அதனால் என்னால் பேசமுடியாது என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளாதீர்கள். இயலும் என்ற தீர்மானத்தை மூளைக்கு கொடுத்தால் உங்கள் ஆசைகளை நிறைவேற்றும் சக்தியை மூளை உங்களுக்கு அளிக்கும். மூளையின் அபார சக்தியை பயன்படுத்தி ஆங்கிலத்தை கற்று தேர்ச்சிப் பெறலாம். எந்த தடையும் உங்களை நிறுத்தாது.

நம்முடைய மூளை ஒரு விசித்திரமான பொருள். அதை முறைப்படி இயக்கத் தெரிந்தவன்தான் வாழ்வில் வெற்றியடைய முடியும். ஒருவன் தன் வாழ்வில் பல தோல்விகளை சந்தித்திருப்பான். அதனால் தன்னை ஒரு துரதிர்ஷ்டம் பிடித்தவன் என்ற வரிசையில் சேர்த்துக்கொண்டு, ஒரு சோர்வான வாழ்வை வாழ்ந்து கொண்டிருப்பான். ஆனால் அது தேவையில்லை. உங்களை வெற்றி பெற்ற மனிதனாக மாற்றும் ஆற்றல் உங்கள் மூளையிடம் உள்ளது. அதனை மறந்துவிடாதீர்கள்.

ஒரு சம்பவத்தில் உள்ள சுகத்தையும், துயரத்தையும் பதிவு செய்துகொண்டு அந்த சம்பவம் நினைவுக்கு வரும் போதெல்லாம் சுகத்தையும், துக்கத்தையும் உங்கள் மனதில் தோற்றுவிப்பது மூளைதான். அப்படியே தான் ஒரு துரதிர்ஷ்டம் பிடித்தவன், எனக்கு எப்போதும் தோல்வியே மிஞ்சும் என்ற எண்ணத்தை பதிவு செய்துவிட்டால், நாம் ஒரு காரியத்தை துவங்கும்போது அதுதானே

பிரதிபலிக்கும். தோல்வி என்பது நிரந்தரமானது அல்ல. அதனை வெற்றியாக மாற்றியமைக்கும் சக்தி மூளையிடம் உள்ளது. அதனை இயக்க திடமான எண்ணங்கள் தேவை.

சரியான கேள்வி கேட்டு- தடைகளை நீக்குங்கள்:

நீங்கள் உங்கள் உடல் எடையை குறைக்க முயற்சி செய்வீர்கள். ஆனால் முடியாமல் போயிருக்கும். அது ஏன்? நீங்கள் உணவு உட்கொள்ளும்போது உங்களை நீங்களே பல கேள்விகளை கேட்டுக்கொள்ளுங்கள். இந்த உணவு என் உடலுக்கு ஏற்றதா? எந்த வகை சூப் லேசானதாகவும், அதே நேரத்தில் உடலுக்கு வலிமையையும் தரும்? இந்தப் பொருளை சாப்பிடுவதால் உடல் எடை கூடுமா? போன்ற கேள்விகளை கேட்டு சரியான விடைபெற்று அதன்படி உணவு உட்கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

இப்படி கேள்வி கேட்பதன் மூலம் உடல் எடையை குறைக்க உள்ள தடைகளை நீங்கள் அறியலாம். தவறான பழக்கங்களை நீக்கிக்கொள்ளலாம். ஆங்கிலம் கற்க முற்பட்டு அதை அறைகுறையாக விட்டு விட்டு என்னால் முடியாது என்ற நிலைக்கு எப்போதும் வராதீர்கள். அப்படிப்பட்ட நிலையில் பலருடன் நான் எப்படி பேசுவது, பல விஷயங்களை நான் எப்படி கற்பது என்பது போன்ற கேள்விகளை கேட்டுப்பாருங்கள். ஆங்கிலம் கற்பதுதான் வழி என்று மூளை பதில் சொல்லும் அதனை அப்படியே பதிவு செய்து கொள்ளுங்கள். இப்போது ஆங்கிலம் கற்பதில் உள்ள தடைகள் நீங்கிவிடும். ஆங்கிலம் கற்பதால் ஏற்படும் மாற்றத்தை மகிழ்ச்சியுடன் ஒப்பிடுங்கள்.

1. நான் மாறினால் என்ன வித்தியாசம் ஏற்படும்?
2. இந்த மாற்றம் எத்தனை உயர்ந்தது? இதனால் நான் அடைந்த லாபம் என்ன? ஏதாவது இழப்பு ஏற்பட்டிருக்கிறதா?
3. இது என் செயல்களை முன்பைவிட வலிமையுள்ளதாக்குமா?
4. இதனால் என் மனநிலை, உடல்நிலை, வாழ்வின் அர்த்தம், ஏதாவது மாறி இருக்கிறதா?

உங்களிடம் இந்த கேள்விகளையும் கேட்டு பாருங்கள்:

1. நான் மாறுவதால் எப்படி உணரப்போகிறேன். மகிழ்ச்சியாகவா? பெருமையாகவா?
2. எனக்கு வேண்டியவர்கள் என்னுடைய இந்த மாற்றத்தை எப்படி வரவேற்பார்கள்?
3. நான் எத்தனை மகிழ்ச்சியோடிருக்கப் போகிறேன்?

உங்களுக்கு பிடித்த யாரேனும் ஒருவரை ரோல் மாடலாகக் கொண்டு அவரைப்போல நான் ஆங்கிலம் பேசவேண்டும் என்ற உத்வேகத்துடன் கற்க முற்படுங்கள். உங்கள் பிரியமானவரின் மதிப்பிற்குறியவராக திகழப்போகிறோம் என்ற பெருமிதத்துடன் செயல்படுங்கள். அந்த எண்ணம் உங்களை உத்வேகப்படுத்தும்.

கேள்வி கேட்கும் முறை எவ்விதம் பயன்படுகிறது?

நீங்கள் எதைத் தேடுகிறீர்களோ அதைப்பற்றி நினைவில் நிறுத்த முயலும்போது எப்பொழுதும் விழிப்புடன் இருங்கள். ஒரு அறிமுகமில்லாத புதிய வார்த்தையை அதனைச் சுற்றி உள்ள விஷயங்களை வைத்து நினைவில் கொள்ளுங்கள். நான் இந்த வார்த்தையை எங்கு கேட்டேன். அது சம்பந்தப்பட்ட விஷயங்கள் என்ன? சற்று கண்களை மூடி, அந்த அறிமுகமில்லாத வார்த்தையை சுற்றியுள்ள விஷயங்களை நினையுங்கள். சூழ்நிலைகள் மனதில் பதியும்போது, வார்த்தையும் பழகியதாகிவிடும். இதுவும் ஒரு பயிற்சிதான்.

எதை தேடுகிறீர்களோ அதை பெறுவீர்கள்:

1. இந்த நேரம் நான் என் வாழ்க்கையில் எதனால் மகிழ்ச்சியாக இருக்கிறேன்? எந்த விதத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறது?
2. இந்த நேரம் நான் எதனால் போராட்டம் அடைகிறேன்? என் மனப் போராட்டத்திற்குரிய விஷயம் என்ன?
3. இன்று நான் என்ன செய்தேன்? எந்த அளவு ஒத்துழைத்திருக்கிறேன்?
4. இன்று ஆங்கிலத்தில் என்ன கற்றேன்? வித்தியாசமாக என்ன உணர்ந்தேன்?

5. ஆங்கிலம் பேசுவதால் எந்த அளவு நான் உயர்ந்திருக்கிறேன்? இந்த பயிற்சி எந்த அளவு என் எதிர்காலத்திற்கு பயன்படும்?

எதிர்மறையான நேரங்களில் பெரும்பாலும் எதிர்மறையான சிந்தனைகளே தோன்றும். அது நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும் என்பதுதான் உண்மை, எதிர்மறையான நேரங்களில்தான் திடமான எண்ணங்கள் அதிகம் தேவைப்படுகிறது. இதுவரை நீங்கள் வாழ்வில் சந்தித்த எதிர்மறை நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அந்த நேரங்களில் திடமான சிந்தனை இருந்திருந்தால் எப்படி சமாளிக்கப்பட்டிருக்கும் என்பதனையும் நினைத்துப் பாருங்கள். கண்டிப்பாக பல பிரச்சினைகள் குறைந்திருக்கும். ஆகவே இனியாவது இப்படிப்பட்ட எதிர்மறை சிந்தனைகளை விடுத்து திடமான சிந்தனையை வளர்த்துக்கொள்ள பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

கற்பனையும், சாதனைகளும்:

ஒரு மனிதனின் கற்பனை சக்தி அவனை அபார சாதனைகளை படைக்கத் தூண்டுகிறது கற்பனைகள் மூளையின் செயல்பாட்டுடன் இணைந்தது. அதனால் உயர்ந்த கற்பனைகள் எப்போதும் இருக்க வேண்டும். நான் நேர்மையானவன் என்ற எண்ணம் எப்போதும் ஒருவனை நேர்மையானவனாக வைத்திருக்கும். உங்களுடைய உயர்ந்த எண்ணம் மேஜையின் மேற்புரம் என்று வைத்துக்கொள்வோம். நான்கு புறமும் உள்ள ஆதாரம் உங்கள் எண்ணங்கள். அது எப்போதும் வலிமையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பள்ளியில் முதல் வகுப்பில் வெற்றிபெறும் மாணவன்கூட ஏதாவது ஒரு காலகட்டத்தில் தன் அறிவை நம்புவதில்லை. கற்பனை சக்தியின் மூலம் பல சாதனைகளை படைக்கலாம். ஸ்ரீசந்திரசேகர் திவாரி உயிர் கொல்லி நோயுடன் போராட தன் கற்பனை சக்தியை பயன்படுத்தினார். ரோஜர் பைனிஸ்டர் ஒரு நிமிடத்திற்கும் குறைந்த நேரத்தில் ஒரு மைலைக் கடந்தார். எனவே நம்

எண்ணங்கள் அனைத்தும் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டுதான் செயலாகிறது.

நம்பிக்கை:

ஏதேனும் ஒரு திடமான சிந்தனை நம்பிக்கையாக மாறக்கூடும். அந்த நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டுதான் நம் செயல்களும் இருக்கும். அந்த நம்பிக்கை கடந்தகால நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டதாக இருக்கும். எதிர்மறை சிந்தனை, திட சிந்தனை இரண்டும் நம் மனதில் உருவாகும். அது அந்தந்த நிகழ்வுகளை பொருத்து வலிமை பெறுகிறது.

1. மக்கள் இயல்பாகவே நேர்மையானவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.
2. மக்கள் தங்கள் சுயநலத்திற்காக நாணயமற்றவர்களாக மாறுகிறார்கள்.

உங்கள் மனதில் இப்படிப்பட்ட எண்ணம் இருக்கும்போது அனைவரும் தவறானவர்களாகவே தென்படுவார்கள். பொதுவான இந்தக் கருத்தை மாற்றக்கூடியது. வாழ்வின் நிகழ்வுகள். அந்த நிகழ்வுகளின் அடிப்படையில் நம்பிக்கை உருவெடுக்கும்.

நம்பிக்கை மீது நம்பிக்கை வையுங்கள்:

நம்பிக்கை நம் மனதை தெளிவுபடுத்துகிறது. ஓர் தீர்மானமான முடிவை எடுக்க வைக்கிறது. பிரச்சினையான, துயரமான நேரங்களில் நாம் இந்த நம்பிக்கையை துணையாகத் தேடுவோம். இப்படிப்பட்ட நேரங்களில் நம்பிக்கையூட்டுபவர்கள் உங்கள் அன்பிற்கு பாத்திரமானவர்கள்.

சிலர் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு கஷ்டங்களிலிருந்து வெளிவந்து விடுகிறார்கள். சிலர் தங்கள் எதிர்மறை சிந்தனைகளை விலக்கினாலும் எதுவும் நிகழாது என்று நினைத்து தனிமையை நாடிவிடுகிறார்கள். விரக்தியில் வீழ்ந்து தற்கொலைக்கும் தள்ளப்படுகிறார்கள். இவையெல்லாம் நாம் அன்றாட வாழ்வில் பார்ப்பவை தானே. நம்பிக்கை நம்மை வலிமைபடுத்துகிறதா? பலவீனப்படுத்துகிறதா?

வெற்றியின் ரகசியம்:

வெற்றிபெற விசேஷ பயிற்சி தேவையா? உண்மையான பயிற்சி நம்மால் முடியும் என்ற திடமான நம்பிக்கைதான். பில்கேட்ஸ் ஹார்ட்வேர்டில் கம்ப்யூட்டரை பார்த்தது கூட இல்லை. என்றால் உங்களால் நம்பமுடியுமா? ஆனால் அதுதான் உண்மை. இன்றைய அவருடைய வெற்றிக்கு காரணம் அவருடைய தன்னம்பிக்கை. தன்னம்பிக்கை ஒரு மனிதனின் அபார சக்தியை வெளிக்கொண்டு வருகிறது. ஆக வெற்றியின் ரகசியம் தன்னம்பிக்கைதான்.

கற்பனையின் வலிமை:

கற்பனை நம் அனுபவத்தைவிட வலிமையானது. கற்பனைக்கும், நிஜத்திற்கும் நம் மூளைக்கு வித்தியாசம் தெரியாது. “கற்பனை மிகவும் வலிமையானது” என்று ஐன்ஸ்டைன் கூறியிருக்கிறார். புதிய அனுபவங்களை எண்ணி பயப்படுபவர்கள்கூட கற்பனை செய்ய தயங்குவதில்லை. தங்களுக்கு தேவையான பொருட்களை அடைய வெற்றியைப் பெற கற்பனையை பலர் துணை கொள்கிறார்கள். கற்பனை நிச்சயம் ஒரு தனி பலத்தை தருகிறது கற்பனையில் கிடைத்த வெற்றியின் மகிழ்ச்சியை நினைவில் பெற உழைக்க முற்படுகிறார்கள்.

விபரீதமான ஒரு சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது:

வெற்றிபெற்ற மனிதர்கள் கவலைகளை நிலையற்றதாக நினைத்து சமாதானமடைகிறார்கள். மற்றவர்கள் கவலைகளை நிரந்தரமானதாக நினைத்து சதா கவலையில் ஆழ்ந்துவிடுவார்கள். ஆதரவற்ற நிலையில் தோன்றுவதுதான் ஞானம் என்று டாக்டர் மார்டின் கூறியிருக்கிறார். அதாவது அவை கீழ்கண்ட எண்ணங்களின் வெளிப்பாடுதான்.

1. பிரச்சினைகள் நிரந்தரம்போல் தோன்றும், ஆனால் நிலையற்றது.
2. பிரச்சினைகள் எங்கும் நிறைந்தது.
3. பிரச்சினைகள் தனித்துவம் வாய்ந்தது.

நம்பிக்கை வெற்றியின் திறவுகோல்:

ஆசைகள் நம்மை இயங்க வைக்கிறது. இதனை "பிக்மேலியன் கொள்கை" என்று அழைக்கிறோம். இதைப்பற்றி ஒரு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. வகுப்பில் சில குழந்தைகள் அறிவாளியாக இருந்தார்கள். அவர்களுடைய அறிவுத்திறனை வெளிப்படுத்த அவர்களை சற்று மிரட்ட வேண்டியிருந்தது. இதன் பலனாக மாணவர்களிடையே நல்ல முன்னேற்றம் தெரிந்தது. வகுப்பில் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு தங்கள் அறிவுத்திறனை வெளிப்படுத்தினார்கள். அறிவாளிகள் என்று தேர்வு செய்யப்பட்டவர்கள் உண்மையிலேயே அறிவாளிகளாக திகழ்ந்தார்கள். தன்னம்பிக்கை எப்படிப்பட்ட மகத்துவத்தை நிகழ்த்துகிறது பார்த்தீர்களா?

மதியால் விதியை வெல்லலாமா?

மாற்றம் எப்படி நிகழ்கிறது? நம் மனதில் மாற்றம் ஏற்படும்போது அது செயலிலும் நிகழ்கிறது. நமக்குள் இருக்கும் நரம்பு மண்டலம் நம் எண்ணங்களுக்கேற்ப செயல்படுகிறது. மது நமக்கு மகிழ்ச்சியை தரும், களைப்பை போக்கும் என்று நாம் நம்புகிறோம். அதனால் அது பழகிவிடுகிறது. இதையே மாற்றி, மது நமக்கு கேடு விளைவிக்கும். விபத்து ஏற்பட காரணமாகும், உடல்நலம் பாதிக்கும் குடும்ப சூழல் கெடும், துர்மரணம் நிகழும் என்று சிந்தித்துப் பாருங்கள். நரம்புமண்டலம் அதற்கேற்ப செயல்பட்டு மதுவை விட்டு விலகும். வலி, மகிழ்ச்சி இவற்றை நமக்கு தருவது நரம்புமண்டலம்தான். என்னால் ஆங்கிலம் கற்க முடியும். நான் நிச்சயம் கற்றே தீருவேன் என்று எண்ணுங்கள். அதன்படி நரம்பு மண்டலம் செயல்படும். நீங்கள் விரைவில் ஆங்கிலம் கற்றுக்கொள்வீர்கள்.

பிரச்சினைகளும், மாற்றங்களும்:

எவ்வளவு வேகமாக பிரச்சினைகள் வருகிறதோ, அவ்வளவு வேகமாக தீர்ந்துவிடும். உங்களிடம் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டுவர ஏதோ ஒரு ஆழமான காரணம் இருந்திருக்கின்றன. நாம் மாறினால் இந்த நிலையும் மாறிவிடும் என்று நீங்கள் நினைத்திருக்கலாம். இப்படி ஒரு எண்ணத்தை உங்களுக்குள் விதைக்க பிரச்சினைகள்

அவசியம் தேவை. உங்கள் வாழ்க்கையில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், உங்களுக்குள் அது ஏற்படலாம். அது உங்களை பெரிய சாதனைகள் செய்ய தூண்டலாம். ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற ஒரு தூண்டுதல் உங்களை வெற்றி பெற வைக்கலாம்.

இதற்கு முன் ஏற்பட்ட தோல்விகள் ஆங்கிலம் கற்க தூண்டுதலாக இல்லாமல் இருந்திருந்தாலும் அப்போது அந்த எண்ணம் உங்களுக்குள் விதைக்கப்பட்டிருக்கலாம். அந்த எண்ணம், இதுவரை உங்களுக்குள் இருந்த பல தடைகளை உடைத்தெறிந்து உங்களை முன்னேற வைக்கலாம். அத உங்களை புது பரிணாமத்துடன் புது மனிதனாக மாற வைக்கலாம்.

ஜன்னல் கண்ணாடியில் ஈ ஒட்டிக்கொண்டு வெளிவர முயற்சி செய்வதை பார்த்திருக்கிறீர்களா? மனிதனுடைய வாழ்க்கையும் இப்படித்தான். பல அசந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் அவன் ஆசைகளை நிறைவேற விடாமல் தடுக்கிறது. தனக்கு ஏற்பட்ட கஷ்டத்திலிருந்து விடுபடும் வரை போராடுவது உயிர்களின் இயல்பு தோல்வி யாருக்கும் நிச்சயிக்கப்பட்டதல்ல. தடைகள் தோல்வியுமல்ல. விடாமுயற்சி ஒன்றே இவற்றிலிருந்து மீள ஒரே வழி. நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆங்கிலத்தை கற்க முற்படுங்கள். பிறகு இதுவும் வாழ்க்கையில் ஒரு பிரிக்க முடியாத அங்கமாகிவிடும்.

நாம் தொடர்ந்து செய்யும் ஒரு காரியம் வழக்கமாகிவிடுகிறது. பிறகு அதிலிருக்கும் சிரமங்கள் தெரிவதில்லை. நாம் ஒரு இடத்தை அடைய ஏதேனும் ஒரு பாதையை தேர்ந்தெடுக்கிறோம். அந்த பாதையில் தடை ஏற்பட்டால் வேறு வழியில் செல்கிறோம். பாதையிலேயே யாரும் நின்று விடுவதில்லை. ஒன்றை அடைய வேண்டும் என்று தீர்மானித்த பிறகு அதற்கேற்ற வழியை மூளைதானே தேர்வு செய்து விடுகிறது. இனி பயணிப்பது மட்டுமே நம் வேலை. குரங்குகளை நாட்டியமாட வைக்க உங்களால் முடியுமா? முடியும். மிருகங்கள் தங்களுடைய சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்கிறது. ஆக, மாறுதல் என்பது மனிதனை எந்த சூழ்நிலையிலும் வாழ

வைக்கக்கூடியது. தன்போக்கில் இயல்பாக வாழும் அதே குரங்குகளை ஒரு பயிற்சி பெற்ற குரங்குடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல மாற்றங்கள் தெரியும்.

குரங்கு தன்னிச்சையாக செயல்பட முற்படும்போது கோலை எடுத்தால் அதன் போக்கு மாறிவிடும். அதேப்போல் நீங்கள் உங்களை கூர்மைப்படுத்தி உங்களை நீங்களே ஒரு கட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

படிக்கும் மேஜையின் மீது ஒட்டி வைக்கவும்:

1. உங்களுக்கு வேதனையளித்த பழைய விளைவுகளை நினையுங்கள். பழக்கங்கள் மாறுபட்டதால் ஏற்பட்ட விளைவுகளை சிந்தியுங்கள்.

2. புதிய வழக்கங்களால் ஏற்பட்ட சந்தோஷங்கள் என்ன?

3. பழைய பழக்கங்கள் உங்கள் எண்ணம் ஈடேர துணை புரிந்ததா?

4. உங்கள் டென்ஷனை குறைக்க புகைப்பிடித்தீர்கள். புதிய பழக்கம் உங்கள் வாழ்க்கையை மேம்படுத்த துணை புரிகிறதா அல்ல பழைய பழக்கமா?

5. உங்களின் புதிய பழக்கங்களுக்கேற்ப உங்கள் வாழ்க்கை சூழல் மாறிவிட்டதா? பழைய சூழ்நிலையும் இப்போதிருக்கும் சூழலையும் ஒப்பிட்டு பார்க்கும்போது எது சிறந்ததெனப்படுகிறது?

எதிர்மறை சிந்தனைகளை தவிருங்கள்:

வாழ்க்கையைப் பற்றிய அனுமானங்கள் பலவகையாக இருக்கலாம். சிலர் வாழ்க்கையை சூதாட்டமாகவும், சிலர் போராட்டமாகவும் பாவிக்கலாம். வாழ்க்கை ஒரு போராட்டம் என்றால் வாழ்வது கடினமல்லவா? வாழ்க்கை என்பது பிறரை சாகடிப்பதும், சாவதும் மட்டும்தான் என்றாகிவிடும். பிறகு வாழ்வது எப்படி?

அது திடமான சிந்தனை உள்ளவர்களுக்கு மட்டுமே சாத்தியம். எதிர்மறை சிந்தனை வாழ்க்கையை சிக்கலாக்கிவிடும். பலவீனமாக்கிவிடும். இது தேவையற்றது. வெற்றி பெற்ற மனிதர்கள் வாழ்வில் எதிர்மறை சிந்தனைகள் என்பதே இருக்காது. அப்படி

இருந்தால் அவர்கள் வெற்றிபெற முடியாது. அதனால் எதிர்மறை சிந்தனைகளை தவிருங்கள். நல்ல திடமான சிந்தனைகள் மட்டும் உங்களை வாழவைக்கும். மேலும் மேலும் சாதனைகள் படைத்து உயரத்தூண்டும்.

கூடாது	வேண்டும்
நான் கவலையுடனிருக்கிறேன்	நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்
நான் ஆதரவற்று இருக்கிறேன்	நான் திடமாக இருக்கிறேன்
நான் கோபமாக இருக்கிறேன்	நான் சந்தோஷமாக இருக்கிறேன்
நான் வெறுப்புடனிருக்கிறேன்	எனக்கு மாறுதல் தேவை
நான் தோல்வியுற்றவன்	நான் வெற்றி பெற்றவன்

தாமஸ் ஆல்வா எடிசன் கண்ட தோல்வி:

10,000 முறை முயன்று தோல்வியுற்று பிறகு “லிட் பேட்டரியை” கண்டுபிடித்தார் தாமஸ் ஆல்வா எடிசன். அவரிடம் ஒரு பத்திரிகைகாரர் கேட்டார். நீங்கள் 10 ஆயிரம் சோதனையில் தோல்வியுற்றதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள். “இப்பொழுது எனக்கு பாட்டரி கண்டுபிடிக்க முடியாத 10,000 வழிகள் நன்றாகத் தெரியும்” என்று அவர் பதிலளித்தார்.

உங்களுடைய பேச்சுவார்த்தையிலிருந்து கீழ்கண்ட வார்த்தைகளை நீக்கிவிடுங்கள்.

1. வேலை பளு அழுத்துகிறது.
2. தனிமையில் இருக்கிறேன்.
3. தவறு செய்தவனாக இருக்கிறேன்.
4. குறையுள்ளவனாக இருக்கிறேன்.
5. தோல்வியுற்றவனாக இருக்கிறேன்.
6. நம்பிக்கை இழந்தவனாக இருக்கிறேன்.

கீழ்கண்ட வார்த்தைகளை நினைவிற்கொண்டு வாழ்க்கையை பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

1. அன்பு
2. ஊக்கம்
3. தன்னம்பிக்கை

4. பணிவு
5. எழுச்சி
6. உழைப்பு
7. மகிழ்ச்சி
8. திடம்
9. உற்சாகம்
10. உபகாரம்
11. திறமை

காலம் தாழ்த்தி ஆங்கிலம் கற்றாலும் வெற்றி நிச்சயம்:

உங்கள் எண்ணங்களில் திடம் இருக்கட்டும். கல்வெட்டும் கருவியை பாருங்கள். கல்லைவிட திடமாக செயல்பட்டு கல்லையே இரண்டாக உடைத்துவிடுகிறது. இதுமுதல் முயற்சியிலேயே நடந்துவிடுகிறதா, இல்லையே. ஒரே மையத்தை நோக்கி பலமுறை முயற்சி செய்தபின் தான் பலன் கிடைக்கிறது. எந்த ஒரு விஷயத்திலும் முதல்முறையே வெற்றியை எதிர்பார்க்க முடியாதல்லவா? ஆனால் முயற்சியை ஆரம்பித்த பின் அது வெற்றியை நோக்கிச் சென்று முடிவில் பலனைத்தரும்.

திடமான எண்ணம் என்பது வெற்றியை காணும் வரை இருக்க வேண்டியது. எந்த இடத்தில் மனோதிடத்தை இழந்து விடுகிறோமோ அந்த இடத்திலேயே சாதனைகளும் நின்றுவிடும். திட நம்பிக்கையுடன் கூடிய முயற்சியே வெற்றியைத் தரும்.

எண்ணங்கள் கஷ்டமல்ல:

நாம் அனுபவிக்கும் சில கஷ்டங்களுக்கு நிகழ்காலத்தில் நம்முடைய சில செயல்களே காரணமாக இருக்கும். அந்த செயல்களை மாற்றிக் கொண்டால் கஷ்டங்கள் தீரலாம் அல்லவா. எனவே நம் எண்ணங்களிலும், செயல்படும் விதத்திலும் மாற்றம் ஏற்படுத்தினால் பல விஷயங்கள் மாறும். இந்த விஷயத்தை கேட்க உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். சிலர் தங்களுக்கு தாங்களே சிரமங்களை விளைவித்துக் கொள்கிறார்கள். அனைத்திற்கும் காரணம் தங்களுக்குள் விளையும் எதிர்மறை எண்ணங்கள்தாண் என்பதை மறந்து

இவர்கள் விதியை நொந்து கொள்வார்கள் சிலர் திட எண்ணங்களால் நல்ல விளைவுகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சுற்றியிருப்பவர்கள் வாழ்விலும் நம்பிக்கை ஒளியை ஏற்றி வைக்கிறார்கள். திட நம்பிக்கை கொள்ளுங்கள். வாழ்வில் மகிழ்ச்சியை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

புதிய எண்ணங்கள்:

எப்போதும் மற்றவர்கள் தயவிலேயே வாழ விரும்புகிறீர்களா? உங்களுடைய கஷ்டங்கள் அனைத்திற்கும் வேறு யாராவது காரணம் என்று நினைக்கிறீர்களா? அப்படியானால் உங்களுக்கு தன்னம்பிக்கை இல்லை என்றுதான் பொருள். உங்களுக்கு ஏற்படும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் நீங்கள்தான் காரணம். உங்கள் எண்ணங்கள், செயல்கள் மட்டுமே காரணம் என்பதை உணரும்போது தான் அந்த பிரச்சினைகள் தீர வழி பிறக்கும். வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி தேவையெனில் நம் சிந்தனைகளில், செயல்களில் மாற்றம் தோன்ற வேண்டும். பயன்படாத பழைய எண்ணங்களை விட்டு ஒழிக்க வேண்டும். உயர்ந்த எண்ணங்கள் மின்னலைப் போல வந்து உங்கள் வாழ்விற்கு புத்துயிர் அளிக்கும்.

உங்கள் சிறப்பை உணருங்கள்:

உங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை எப்போது உணர்வீர்கள்? ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி உங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வர துணையாக இருக்கும். அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறாவிட்டால், திறமைகள் வெளிவராமலே போய்விடும். அதற்கு முன் நீங்களே உங்கள் திறமைகளை உணர்ந்து வெளிக் கொண்டு வர முயற்சித்தீர்களேயானால் அதனை வளர்த்துக் கொண்டு சிறப்படைய முடியும். உங்கள் திறமைகளை நீங்கள் உங்கள் நரம்பு மண்டலத்தில் பதிவு செய்யாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் ஆழ்மனதில் அது எப்போதோ பதிவாகியிருக்கும். இதனை சூட்சும அறிவு என்று கூறுவார்கள். நீங்கள் இதுவரை பார்த்த, கேட்ட, உணர்ந்த, முகர்ந்த விஷயங்கள் அனைத்தும்

உங்கள் மனதில் பதிவாகியிருக்கும். அவை நம் செயல்கள் ஒவ்வொன்றிலும் பிரதிபலிக்கும். இவை தன்னிச்சையாக நிகழக்கூடியவைதான். இவற்றின் அடிப்படையில்தான் நமக்குள் பல திறமைகள் உருவெடுக்கின்றன. அவை வெளிப்படும் போதுதான் நம்மை நாம் உணரமுடிகிறது.

மனநிலையும், காலநேரமும்:

மனநிலை சீர்கெட்டிருக்கும் நிலையிலும் வெற்றிபெற்ற மனிதர்கள் நிலையாக இருப்பார்கள் சீர்கேட்டை நேர்நிறுத்த முயற்சி செய்வார்கள். ஆனால் 95 சதவீதம் பேர் காலநேரத்தை குறை கூறிக்கொண்டு காலத்தை கடத்துவார்கள்.

ஆங்கிலம் கற்பதில் நீங்கள் எப்போதும் தோல்வியடைய முடியாது:

வெற்றி என்பது யாருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியது அல்ல. ஒவ்வொரு மனிதனும் வெற்றிக்கு முன் பல தோல்விகளை கண்டிருப்பான் என்பதுதான் நிஜம். தொடர்ந்து முயற்சிப்பவன் மட்டுமே வெற்றியடைகிறான். சோர்ந்து போனவன் தோல்வியை மட்டுமே தனதாக்கிக் கொள்கிறான். தோல்வியிலேயே வெற்றி புதைந்திருக்கிறது.

வெற்றியடைய நினைப்பவன் தோல்வியை சந்திக்காமல் இருக்கமுடியாது. அதேபோல ஆங்கிலம் கற்க நினைப்பவர் வாழ்வில் ஆங்கிலம் தெரியாமல் பல பின்னடைவை கண்டிருக்கலாம். அவையெல்லாம் வெற்றியை தூண்டுபவையாக இருக்க வேண்டும். தனக்கு தேவை என்று நினைக்கும் ஒன்றை மனிதன் தொடர்ந்து முயற்சித்து பயன் அடையலாம். தனக்கு சரியென்று தோன்றும் ஒரு விஷயத்தை ஆரம்பிக்க எப்போதும் தயங்கக்கூடாது. இதுவரை எத்தனை தோல்வி கண்டிருந்தாலும் அதனையெல்லாம் குப்புற தள்ளிவிட்டு புதிய முயற்சியில் உத்வேகத்துடன் இறங்கலாம். பல இடர்பாடுகள் தோன்றினாலும் முடிவு வெற்றியே. நீங்கள் மனதளவில் தோல்வியை ஏற்றுக்கொண்டால் ஒழிய தோல்வி உங்களை வந்து அடையாது.

எதிர்மறையாக சிந்திப்பது தவறு:

ஒரு விஷயத்தை நாம் சிந்திக்கும்போதே, அது மூளையில் பதிவாகிவிடுகிறது. பிறகு நமக்கு தேவையோ இல்லையோ அது அவ்வண்ணமே செயல்படவும் ஆரம்பிக்கிறது. ஒரு விதையை பூமிக்குள் விதைத்த மாத்திரத்திலேயே அது முளைக்க ஆரம்பித்து விடுகிறது. அது வளர்ந்து தன் கிளைகளை பரப்பி பூ, காய், கனி என்று உருவெடுத்து பல விதைகளை தோற்றுவித்து விடுகிறது. ஒரு விதையை அழிக்கத் தெரியாத நமக்கு ஒரு மரத்தை வேரோடு வெட்டிச் சாய்ப்பது கடினமல்லவா? அதேப்போலதான் எதிர்மறை சிந்தனைகள் நம் மனதில் விதைக்காமல் இருப்போம். பின்வரும் தீய விளைவுகளை தவிர்ப்போம்.

25,000 பேரை சர்வே செய்துப் பார்த்ததில் அவர்களுடைய தோல்விக்கு சரியான தீர்மானம் எடுக்க முடியாததே காரணம் என்றார்கள். சரியான தீர்மானம் எடுக்க முடியாதது சுயநம்பிக்கையின் குறைவால் ஏற்படக்கூடியது. நமகு என்ன வேண்டும் என்பதை முதலில் தீர்மானித்துவிடலாம். பின் அதிலுள்ள சாதக, பாதகங்களை பற்றி ஆராயலாம். தீர்மானமும், பாதகங்களும், தடைகளும் ஒன்று சேரும்போது குழப்பமே மிஞ்சும். குழம்பிய மனதில் சரியான தீர்மானம் எங்கிருந்து வரும்? பல பேரின் திறமை வெளிவராமல் போவதற்கு அவசரமும் ஒரு காரணம். ஒரே நாளில் பலன் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நம்மை பரபரப்பில் ஆழ்த்தி தீர்மானத்தை சிதைத்துவிடும். மெல்ல மெல்ல முன்னேறிச் செல்பவன் நிச்சயம் ஒருநாள் சேர வேண்டிய இடத்தை அடைந்துதானே ஆகவேண்டும். அதுவரை தீர்மானம் நிலைத்திருக்க திட எண்ணம் வேண்டும்.

தங்களுடைய தேவையை உடனே தீர்மானிக்கத் தெரிந்தவர்கள் அதை நிறைவேற்றிக் கொள்வதிலும் வெற்றி பெறுவார்கள். தலைவர் ஜீவன் உடனே முடிவெடுக்கும் ஆற்றல் பெற்றவர். அதன் காரணமாக அவர் தலைவரானார். ஆம். தீர்மானமும், செயலும், விடாமுயற்சியும் ஒன்று சேரும்போது அவர்கள் வாழ்வின் உயரத்திற்கு சென்றுவிடுவார்கள்.

பிராத்தனையும்- அறிவியல் ஆதாரமும்:

மனிதன் தான் காப்பாற்றப்பட வேண்டிய அனைத்து வழிகளையும் இழந்த பிறகு தான் பிராத்தனையில் ஈடுபடுகிறான். நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். பிரார்த்தனையும் ஒரு நம்பிக்கை அடிப்படையிலான விஷயம்தான். நம்பிக்கை அடிப்படையில் நாம் செய்யும் எதுவும் நல்ல பலன் அளிக்கும். பிரார்த்தனை என்பது வெவ்வேறு விதமானது. வெறும் மந்திர உச்சாடனம் மாத்திரம் பிரார்த்தனை அல்ல. அப்படிப்பட்ட பிரார்த்தனை வெறும் கால விரயத்தை மட்டுமே தோற்றுவிக்கும். இது நடக்கும் என்ற உறுதியுடனான பிரார்த்தனை மட்டுமே கைகூடிவரும்.

உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட முன் அனுபவங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். எந்த விதமான பிரார்த்தனை உங்கள் வாழ்க்கையில் கைகூடி வந்திருக்கிறது? ரேடியோவை எடுத்துக்கொள்ளுங்கள். அதிலிருந்து வெளிவரும் ஒலி நாம் மானசீகமாக இருக்கும் வரை நம் காதுகளுக்கு கேட்காது. வெறும் சத்தமாகத்தான் தோன்றும். உலகில் உள்ள ஒவ்வொரு விஷயமும் அப்படித்தான். நாம் மானசீகமாக ஏற்றுக் கொண்டாலோழிய அது நம்மை வந்தடையாது. ரேடியோ ஸ்டேஷனில் இருந்து அனுப்பப்படும் இசை, ஒலி அலைகளாக வான்வெளியில் வருகிறது. அதனை நாம் நம் வீட்டு ரேடியோவில் ரசித்து கேட்க வேண்டுமானால் அந்தக் கருவியை சரியான விகிதத்தில் நகர்த்தினால்தான் ஒலி அலைகள் இசையாக உருவெடுத்து நம் காதுகளை வந்தடையும். அதேப்போல மனிதர்களுடைய எண்ண அலைகள் நம்பிக்கை எனும் முழு பலத்துடன் சரியான விகிதத்தை நோக்கி நகரும்போது காரியம் செயலாகிறது. இதுவே பிரார்த்தனையின் தத்துவம். எதிர்மறை சிந்தனையுடனான பிரார்த்தனைகள் என்றுமே செயலாவதில்லை.

பயம் என்பது ஒரு அறியாமையின் அடிப்படையில் எழும் ஓர் எழுச்சி, அதனை தக்க வைத்துக் கொள்வதும், அடியோடு ஒழிப்பதும் நம் கையில்தான் உள்ளது. ஏதோ

ஒரு அறியாமையால் ஏற்படும் பயம், அந்த அறியாமை அறிவுபூர்வமாக நீக்கப்பட்டால் பயமும் நீங்கிவிடும். நாம் மனதில் சிந்திக்கும் ஒவ்வொரு விஷயமும் மூளையில் பதிவாகிவிடும். அது நல்லவையோ, கெட்டவையோ அதைப்பற்றி எல்லாம் மூளைக்கு கவலையில்லை. பிறகு அந்த விஷயத்தைப்பற்றிய ஒரு தெளிவான விவரம் கிடைக்கப்பெறாதபோது பலவிதமான சந்தேகங்கள் உருவெடுக்கும். அந்த சந்தேகங்கள் வளர்ச்சி பெற்று பயமாக மாறிவிடும். அது எதைப்பற்றிய சிந்தனையாக வேண்டுமானாலும் இருக்கலாம். சமூகம், குடும்பம், தொழில், கல்வி, உடல்நிலை போன்ற எதை பற்றின சிந்தனையாக இருந்தாலும், சந்தேகங்களை தீர்த்து தெளிவுபெற வைக்க யாருடைய உதவியாவது தேவைப்படுகிறது.

மனிதனுக்கு சுயமாக சிந்திக்கும் ஆற்றலை இயற்கை தந்திருக்கிறது. மனிதனுடைய எண்ணம் எதுவாக இருந்தாலும், அது என்றோ ஒரு நாள் உள்மனதில் பதிவான விஷயமாக இருக்கும். பயமும் அப்படி தோன்றுவதுதான். இந்த பயத்தை தக்க ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தாவிட்டால், அது கொஞ்சம் கொஞ்சமாக நம்மை ஆக்கிரமித்து நம்மை செயலிழக்கச் செய்துவிடும். இந்த பயத்தால் நாம் மிகவும் பலவீனப்பட்டுப் போய்விடுவோம். நாம் உடலாலும், மனதாலும் எந்த லாபத்தையும் அடையமாட்டோம்.

எதிர்மறை சிந்தனையும்- நீங்களும்:

தன்னை சுற்றியுள்ள மனிதர்களின் எதிர்மறை பேச்சை கேட்க வேண்டியிருந்தால் இன்று ஒரு எடிசன் தோன்றியிருக்க மாட்டார். மனிதர்களின் பேச்சை பதிவு செய்யும் ரிகார்ட்டை அவர் தயாரிக்க முற்பட்டபோது, பெரும்பாலும் இப்படிப்பட்ட எதிர்மறை பேச்சுகளைத் தான் கேட்க நேர்ந்தது. இதுவரை யாரும் இப்படிப்பட்ட கருவியை கண்டுபிடித்ததில்லை என்று பலரும் கேலி பேசினர். யாரும் கண்டுபிடிக்காத ஒன்றை கண்டுபிடிப்பதுதானே அறிவியல்?

அறிவியலைப் பொருத்தவரை ஏராளமான அதிசயங்கள் புதைந்திருக்கிறது. அதனை இப்படிப்பட்ட சிந்தனை உள்ளவர்கள் மட்டுமே கண்டுபிடிக்க முடியும். முடியாது என்ற ஒன்றை முடித்து வைத்தது நம்பிக்கையுடன் கூடிய திட சிந்தனைதானே. அந்த எண்ணம்தான் ஒரு சாமான்ய மனிதனை் மிக உயரத்தில் உயர்த்தி வைத்தது. உங்களால் ஆங்கிலம் பேச முடியாது. அது ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலம் கற்றவர்களால் மட்டுமே முடியும். அதற்கு குழந்தையிலிருந்தே பயிற்சி தேவை. என்றெல்லாம் கூறி உங்களை செயலிழக்கச் செய்பவர்கள் மத்தியில் நீங்கள் சாதித்து காட்ட வேண்டாம். அதற்கு உங்கள் திடசிந்தனை ஒன்றே போதுமே. இப்படிப்பட்ட எதிர்ம்றை சிந்தனையாளர்களிடமிருந்து விலகியே இருங்கள்.

விரைவாக ஆங்கிலம் பயில

நல்ல முறையில் ஆங்கிலம் கற்க நாங்கள் சில எளிய வழிகளை கூறுகிறோம்.

1. ஞாபக சக்தியின் மேல் நம்பிக்கை: உங்கள் நினைவாற்றலின்மேல் பூரண நம்பிக்கை வையுங்கள். "என் மூளை அனைத்தையும் நினைவு வைத்துக் கொள்ளும். என் மூளை கம்ப்யூட்டரை விட சிறப்பாக செயல்படும்" என்று அடிக்கடி நினைத்துக் கொள்ளுங்கள். இதையே தனக்கிட்ட கட்டளையாக ஏற்று மூளை செயல்படும்.

எனக்கு எல்லாம் மறந்துவிடும். எனக்கு எங்கிருந்து ஞாபகம் வரப்போகிறது. ஏனோ தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் அடிக்கடி மறந்து போகிறது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் மூளை அவ்விதமே செயல்பட ஆரம்பித்துவிடும். அதோடு மட்டுமல்லாமல் நம் அன்றாட வாழ்விலும் நினைவாற்றலை பற்றின எதிர்மறை வார்த்தைகளை தவிர்க்கவேண்டும். "மன்னிக்கவேண்டும். எனக்கு நினைவுஇல்லை", "எனக்கு வயதாகிவிட்டது நினைவாற்றல் சரியில்லை" என்றெல்லாம் அடிக்கடி கூறிக்கொண்டிருக்கக்கூடாது.

தினமும் விடியற்காலையில் எழுந்து "நான் என் நினைவாற்றல் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன். என் மூளை ஒரு கம்ப்யூட்டரைப் போன்று செயல்படும்" என்று கூறிக்கொள்ளுங்கள். சற்று யோசியுங்கள். "என் நினைவாற்றல் சரியில்லை. நான் எதையும் மறந்துவிடுவேன்", என்று கூறிக் கொண்டிருந்தால் உங்கள் மூளை எப்படி நீங்கள் எதிர்பார்த்த பலனைத் தரும். அதனால் உங்கள் நினைவாற்றலின் மீது பூரண நம்பிக்கை வையுங்கள். பிறகு அதன் அபார செயல்பாட்டை உணருங்கள். மேற்கண்ட வாக்கியங்களை இந்த வரிகளில் எழுதி வைத்து தினமும் படித்துக்கொள்ளுங்கள்.

நினைவில் கொள்ளும் முறை: இந்த வாக்கியத்தை நாம் ஏன் முழுவதும் இறந்தகாலமாக சொல்லக்கூடாது. முழு Sentence-இலும் Past tense பிரயோகப்படுத்தியிருக்கலாமே.

இரண்டாவது காரியம் துவங்கும் முன் முதல் காரியம் முடிந்துவிட்டது. அதனால் பூரணமாக நிறைவு பெற்ற காரியத்தை Past perfect tense என்றும் மற்றதை Simple past என்று சொல்லவேண்டும். இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் பிரித்து, அதன் உள் அர்த்தத்தை உணர்ந்து மூளையில் பதிவு செய்து கொண்டால் எளிதில் ஞாபகம் வரும், இது இப்படித்தான் இருக்கும் என்று தீர்மானமாக ஒன்றை நான் வலியுறுத்தி கூறிவிட்டால் மூளை மிக எளிதாக அனைத்தையும் நினைவில் வைத்துக்கொள்ளும். அதேபோன்று Vocabulary மற்றும் Spellings-ஐ நினைவிற்கொள்ள எளிய வழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

3. நினைவை மையப்படுத்துதல்: நினைவை மையப்படுத்துவதென்றால் ஒரு நேரத்தில் ஏதேனும் ஒன்றைப் பற்றியே சிந்திப்பது, எண்ணங்களை சிதற விடாமல் அமைதியாக சிந்திக்க வேண்டும். சுற்றியிருக்கும் மற்ற எதைப் பற்றியும் சிந்திக்காமல் ஒன்றையே குறி வைத்து சிந்தித்தல் அவசியம். ஒரு கழுதையை

எவ்வளவுக்கெவ்வளவு இழக்கிறோமோ, அது அவ்வளவு முரண்டு பிடிக்கும். அதை எப்படி நம் வழிக்கு கொண்டு வருவது, அதனை தன் போக்கில் விட்டு பிறகு அதன் முன் புல்லை காண்பித்தால் அது தானே நம்மை நோக்கி ஓடிவரும். பிறகு அதே பாணியில் அதை எங்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்லலாம். ஆங்கிலத்தில் நாம் நினைவை மையப்படுத்த இந்த விஷயத்தில் ஈடுபாட்டையும், விருப்பத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

4. விசித்திரமான எளிய உண்மைகள்: நீங்கள் ஒரு மாணவர். ஒருநாள் உங்கள் ஆசிரியர் ஹெல்மெட் அணிந்து கொண்டு வந்து உங்களுக்கு பாடம் கற்றுத்தருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அந்த நாளை வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருப்பீர்கள். இதுதான் மூளையின் இயல்பு. ஏதேனும் ஒரு வித்தியாசமான விசித்திரமான நிகழ்ச்சி ஏற்பட்டால் அதனை எளிமையாக நினைவில் வைத்துக்கொள்ளும்.

ஏதேனும் நகைச்சுவையோடு கலந்த விஷயங்களையும், எளிதில் நினைவு வைத்துக் கொள்ளும் இயல்புடையது மூளை. அதே முறையை பல விஷயங்களுக்கு நாம் பின்பற்றலாம்.

5. உற்சாகத்துடன் வெளிப்படுத்துதல்: நம் மூளையின் விசேஷம் என்னவென்றால் நாம் உற்சாகத்துடன் பெரிதுபடுத்தி கூறும் சொற்களை எளிதில் நினைவிற்கொள்ளும். அந்த வார்த்தைகள் அதிக நேரம் நினைவில் இருக்கும்.

இந்த சிறப்பை நாம் ஏன் திட சிந்தனையாக (Positive Sense) ஏற்றுக்கொள்ளக்கூடாது. இந்த வகையில் நாம் விஷயங்களை அதிக நேரம் நினைவிற் நிறுத்திக் கொள்ள ஏன் முயற்சிக்கக்கூடாது. ஒரு பருமனான மனிதனைப் பார்த்தால் சீக்கிரமாக நினைவில் வைத்துக் கொள்கிறோம். இதுவே மூளையின் இயல்பு. இந்த இயல்பை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

6. எண்ணம்: உருவமற்ற விஷயங்களை நினைவிற்கொள்வது கடினம். அதனால் முக்கியமான் எண்ணங்களுக்கு மானசீகமாக ஒரு படம் வரைந்து நம்

மனதில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அந்த சித்திரம் நம்மை அந்த உருவமற்ற எண்ணங்களை நினைவு வைத்துக் கொள்ள உதவுகிறது.

ஒரு விஷயத்திற்கு ஒரு தீர்மானமான உருவத்தை தரும்வரை அதை நினைவிற்கொள்ள முடியாது. வெளிநாட்டு ஸ்டாம்புகளை நாம் சேகரிக்க வேண்டுமானால் அதற்கு சமமான நம் நாட்டு பணத்தை தரவேண்டியுள்ளது. அதேப்போன்று தான் நம் மூளையில் ஒரு விஷயத்தை பதிவு செய்ய நமக்கு பழக்கப்பட்ட அறிமுகமான ஒரு விஷயமாக அதை மாற்ற வேண்டும். நாம் பார்த்த, கேட்ட, பழக்கமான விஷயமாக அது இருக்க வேண்டும். அப்போதுதான் மூளை அதை ஏற்றுக்கொள்ளும். இந்தப் பாடத்தின் மூலம் உருவமற்ற எண்ணங்களை நினைவு வைத்துக் கொள்ளும் முறையை நாம் கற்றுக் கொண்டோம்.

பயன்படுத்தப்படும் சொற்களின் தொகுதி (Vocabulary)

அகராதி அனைத்து மொழிகளுக்கும் ஆதாரமானது. நம்முடைய அகராதி பலவீனமாக இருந்தால் ஆங்கிலம் கற்பதின் விதிமுறைகளை கற்றும் பயனில்லை. அகராதியை நினைவிற்கொள்வது ஒன்றும் சுலபமில்லை. நாம் வார்த்தைகளை படித்தாலும், அதன் பொருள் தெரிந்தாலும் மட்டுமே அதை நினைவிற்கொள்ளமுடியும்.

இந்நிலையில் ஒரு விஷயத்தை நம் மனதில் பதிய வைத்துக்கொள்ள நம் மொழியின் துணை தேவை. மேலும் சில நியமங்களுடன் ஒரு வார்த்தையை பிரித்து அதோடு சம்பந்தப்பட்டுள்ள வேறு சில வார்த்தைகளுடன் தொடர்புபடுத்தி பரவலாக ஒரு விஷயத்தை பதிய வைக்கும்போது அது ஆழமாக பதிந்து விடுகிறது. எப்படி என்கிறீர்களா? கீழ்காணும் உதாரணத்தை பாருங்கள். ஆங்கிலத்தில் ஏதேனும் ஒரு வார்த்தையை எடுத்துப் பார்த்தால், அது புதிது போலத் தோன்றும். அதன் பொருள் நமக்கு அறிமுகமான ஒன்றாகவே இருக்கும். பெரும்பாலான வார்த்தைகள் அப்படியே.

Ablution என்ற வார்த்தையின் பொருள் Washing (துவைத்தல்) Ablution என்ற வார்த்தை புதிதாக இருக்கலாம். Washing பழக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது அல்லவா? இப்பொழுது இந்த Ablution - Washing இரண்டிற்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தினால் Ablution என்றதும் Washing நினைவிற்கு வரும். Washing நினைவிற்கு வருவது எளிது. அது நமக்கு பழக்கப்பட்ட ஒன்று. Ablution புதிய வார்த்தை நினைவுக்கு வருவது கடினம். இப்பொழுது Ablution -ஐ நினைவிற்கொள்ள அத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு வார்த்தையை பார்ப்போம். lotion இப்பொழுது இந்த Ablution-ஐ lotion-னுடன் இணைத்து மனதில் பதிய வைத்துக் கொள்வோம். இதன் பொருளை Washing உடன் இணைக்கும் போது, Ablution-பொருள் Washing என்று

சட்டென்று நினைவிற்கு வந்துவிடும். இதேப்போன்று வார்த்தைகளை சற்று கற்பனையை இணைத்து பல வார்த்தைகளை நினைவில் கொள்ளலாம்.

இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் இந்த சம்பந்த சூத்திர விதிகளின்படி வார்த்தைகளை மட்டுமே நினைவிற்கொள்ள முடியும். இதனை மொழி வடிவத்தில் கொண்டு வரவோ, வாக்கியங்களாக மாற்றவோ முடியாது. அதனால், வார்த்தைகளையும், அர்த்தங்களையும் நினைவில் பதித்த பின், அதற்கு தகுந்த வாக்கியங்கள் அமைப்பதையும் கற்றுக் கொள்ளுங்கள். இங்கு தொடர்பு சூத்திர விதிகளின் மூலம் நினைவிற்கொள்ளும் சில வார்த்தைகள் தரப்பட்டுள்ளது. இதைத்தவிர நீங்கள் வேறு எந்த வார்த்தையை நினைவிற்கொள்ள வேண்டுமானாலும், இதே முறையை கையாளலாம்.

இங்கு 100 word-meanings vocab @ 100 words per hour எழுதுங்கள்.

1. **Abeyance** — suspended action, தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

தொடர் சூத்திரம்- யான்

கற்பனை செய்யுங்கள். “யானை” தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

2. **Abortive** — unsuccessful, தோல்வி

தொடர் சூத்திரம் -ஆரத்தி

கற்பனை செய்யுங்கள்- நீங்கள் தோல்வியடையாமல் இருக்க ஆரத்தி எடுக்கப்படுகிறது.

3. **Acclimatize** — to adjust to climate, புதிய சூழ்நிலையில் பழகு.

தொடர் சூத்திரம்- க்ளைமேட் - பருவநிலை

கற்பனை செய்யுங்கள்-நீங்கள் புதிய சூழ்நிலையில் பழகிவிடுகிறீர்கள்.

4. **Accord** — agreement, ஒத்துப்போ
தொடர் சூத்திரம்- அகார்ட் கார்
கற்பனை செய்யுங்கள்- அகார்ட் கார் வாங்கிய பிறகு அனைவரும் உங்களுடன் ஒத்துப்போனார்கள்.

5. **Acerbity** — Bitterness of speech and temper கடுமை (பேச்சில், குணத்தில்)
தொடர் சூத்திரம்- சர்பத்
கற்பனை செய்யுங்கள்- ஒரு மனிதன் சர்பத் குடித்த பிறகு மிகவும் கடுமையான வார்த்தைகளை பேசினார்.

6. **Acme** — peak, உயரம்
தொடர் சூத்திரம்- லேக்மி காஸ்மேடிக்ஸ்
கற்பனை செய்யுங்கள்- லேக்மி கம்பெனியின் அழகு சாதனம் மற்ற எதையும் விட உயர்ந்தது.

7. **Acrimonious** — Bitter in words, வார்த்தைகளில் கடுமை
தொடர் சூத்திரம்- முனி
ஒரு முனிவர் கத்திக் கொண்டே கடுமையான வார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கிறார்.

8. **Adamant** — Hard, Inflexible, வளைந்து கெடுக்கத முரட்டுதனமான
தொடர் சூத்திரம்- ஆதம்
கற்பனை செய்யுங்கள்- ஒரு ஆதி காலத்து எறும்பு. யாராலும் நகர்த்த முடியாமல் உறுதியாக இருக்கிறது.

9. **Admonish** — to Warn, எச்சரிக்கை
தொடர் சூத்திரம்- முனி
கற்பனை செய்யுங்கள்- ஒரு முனிவர் (விளம்பரம்) கொடுக்கிறார் அனைவரையும் எச்சரிக்கை செய்ய.

10. **Adroit** — Skilful, திறமைசாலி
தொடர் சூத்திரம்-Ad-write

ஒரு திறமைசாலி ஒரு (விளம்பரம்) எழுதுகிறான்.

11. **Aegis** — shield, protection, பாதுகாப்பு
தொடர் சூத்திரம்-Aged அம்மா- அப்பா
கற்பனை செய்யுங்கள்
....

12. **Aghast** — horrified, பயங்கரமான
தொடர் சூத்திரம்- Ghost, பேய்
கற்பனை செய்யுங்கள்
....

13. Acrity — cheerful, மகிழ்ச்சி
தொடர் சூத்திரம்- ஒரு லட்ச ரூபாய்.
கற்பனை செய்யுங்கள்
....

14. **Altruistic** — concerned for others, பிறர் நலம் கருதுபவர்
தொடர் சூத்திரம்- All tourists
கற்பனை செய்யுங்கள்
....

15. **Ambrosia** — food for God, அமிர்தம்
தொடர் சூத்திரம்- அம்பாரத்தில் rose
கற்பனை செய்யுங்கள்
....

16. **Amicable** — agreeable, friendly, நட்புடன்
தொடர் சூத்திரம்- அம்மி, கேபிள் (T.V.)
கற்பனை செய்யுங்கள்
....

17. **Aphasia** — loss of speech due to injury or illness, உடல்நலக் குறைவால் பேச்சிழப்பு

தொடர் சூத்திரம்- பான்ஸ்
கற்பனை செய்யுங்கள்
....

18. **Babble** — to talk foolishly like a child
தொடர் சூத்திரம்- புல்புல்
கற்பனை செய்யுங்கள் குழந்தையைப்போல இறுக்குத்தனமாக பேசுதல்
....

19. **Balmy** — mild, fragrant, खुशबूदार
தொடர் சூத்திரம்-பாம்
கற்பனை செய்யுங்கள்
....

20. **Bamboozle** — cheat,ஏமாற்று
தொடர் சூத்திரம்- Bamboo மூங்கில்
கற்பனை
செய்யுங்கள்..

21. **Banter** — playful teasing, கேலி
தொடர் சூத்திரம்- குரங்கு
கற்பனை செய்யுங்கள்
....

22. **Baroque** — fashionable, நவநாகரீக
தொடர் சூத்திரம்- போரோக்
கற்பனை செய்யுங்கள்
....

23. **Bedazzle** — confuse, குழப்பம்
தொடர் சூத்திரம்- Bed
கற்பனை செய்யுங்கள்

....

24. **Behemoth** — any huge or powerful animal, பெரிய மிருகம்
தொடர் சூத்திரம்- பே-மௌத்
கற்பனை செய்யுங்கள்

....

Spelling- இன் கூர்மையான நினைவு

நன்றாக ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு கூட Spelling -இல் தடுமாற்றம் ஏற்படலாம். இதுவா? அல்லது அதுவா என்று குழம்ப நேரிடலாம். இதை நினைவிற்கொள்ள ஒவ்வொரு வார்த்தையும் ஒரு சிறு சூட்சுமத்துடன் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். தீர்மானமாக இதனுடைய Spelling இதுதான் என்று மூளை சொல்லவேண்டும். வார்தைகளின் பயன்பாட்டைப் பொருத்து Spelling நினைவில் நிற்கிறது. Principle என்பதின் பொருள் விதிமுறை.. முக்கியமான என்பதாகும். வார்த்தையும், பொருளும் நன்கு தெரிந்தால்கூட அதனை ஒன்றுகூட்டி Spell செய்யும்போது தவறு ஏற்பட்டுவிடும்.

நாம் ஆங்கிலம் பேசுவதற்கும், எழுதுவதற்கும் நிறைய வேறுபாடு உள்ளது. இரண்டுமே தனித்தனி பயிற்சி. ஒரு வார்த்தையை பலமுறை பார்த்து பழக்கப்பட்டவர்கள் Spelling தவறு செய்யமாட்டார்கள். வார்த்தையை சொன்ன மாத்திரத்திலேயே அதன் உருவம் மானசீகமாக தெரியும். வார்த்தைகளை நினைவிற்கொள்ள சில எளிய வழிகள் கீழே கூறப்பட்டுள்ளது. மீண்டும் உங்களுடைய கற்பனை சக்தியை பயன்படுத்தி ஒவ்வொரு வார்த்தைக்கும் மனக்கண் முன் ஒரு வடிவத்தை தாருங்கள். அது உங்கள் நினைவைவிட்டு என்றுமே அகலாது.

விதி-1: ஒரு தவறான வார்த்தையை சரியான வார்த்தையிலிருந்து பிரிப்பது எப்படி? உதாரணத்திற்கு Calender என்ற இடத்தில் Calander என்று உள்ளது. யோசனை Calander வார்த்தையை ஐந்துமுறை எழுதிப்பாருங்கள். எப்படி? “E” எழுத்தை கேபிடலில் எழுதுங்கள். CalEnder, CalEnder, CalEnder, CalEnder, CalEnder இப்போது e இருந்த இடத்தில் a வருமா, வராதா என்ற குழப்பமே இல்லை. E என்ற எழுத்து உங்கள் மானசீக சித்திரமாக அமைந்துவிட்டது.

விதி-2: develop என்ற வார்த்தையை நினைவிற்கொள்ள அந்த வார்த்தையின் முடிவில் தேவையற்ற ஒரு வார்த்தையை சேர்த்துக்கொள்ளுங்கள். யோசனை, தவறான Spelling-ஐ எழுதுங்கள், தவறான எழுத்தையே ஐந்து முறை எழுதி பென்சிலால் தவறை மட்டும் அடித்துவிடுங்கள்.

develope, develope, develope, develope

இப்படித் தவறான எழுத்து அடிக்க பெற்றதின் மூலம் அந்த வார்த்தையை எழுதும்போது சந்தேகம் வராது.

நினைவாற்றலின் உதவியுடன் சரியான ஸ்பெல்லிங்கை எழுதுவது

சில நேரங்களில் சில வார்த்தைகள் என்ன எழுத்துக்கள் வரும் என்பது புரியாமல் குழம்பிப் போவோம். Privilage என்று எழுத வேண்டுமா Privilage என்று எழுத வேண்டுமா?

drunkenness-ஆ drunkeness-ஆ?

இதை நினைவிற்கொள்ள சில வழிகள்

வழி-1. குழப்பத்தை ஏற்படுத்தும் வார்த்தையை தனியே எடுத்து எழுதுங்கள். உதாரணமாக Repitition அல்லது Repetition

2. எந்த எழுத்து சந்தேகமாக இருக்கிறதோ, அதனை அடிப்படை எழுத்துடன் சம்பந்தப்படுத்துங்கள். முதலில் pet-ஐ எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது pet. மூன்றாவது pet ஆக திரும்பத் திரும்ப வரும் pet Repetition. இதேப்போன்று. Sarprise என்ற இடத்தில் Surprise குழப்பத்தை ஏற்படுத்தலாம். யார் Surprised ஆக இருக்கிறார்களோ அவர்கள் Surender செய்கிறார்கள். சில உதாரணங்கள்:

coolly: Double the o, double the l. And coolly you will spell.

surpersede: Supersede means set aside.

disap<u>p</u>ear: <u>Two</u> partners were disappointed and disappeared.

and

disap<u>p</u>oint:

Inimi<u>ta</u>ble: The <u>table</u> at the party was set in an inimitable way.